நன்னூல் உரை வளம்

17

உரிச்சொல்லியல்

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-17)

உரிச்சொல்லியல்

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலகை வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை-600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Nannūl uraivalam (Vol. 17) Uriccoliyal**
Author	:	Dr. R. Kannan Associate Professor Dept. of Tamil Language Presidency College, Chennai - 5
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	705
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	11 Point
No. of Pages	:	128
No. of Copies	:	1200
Price	:	Rs. 55/- (Rupees Fifty five only)
Printed by	:	Sri Venkateswara Offset New No. 47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026. Phone : 23621409
Subject	:	Tamil Grammar

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றியிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந்தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரைவளத்தினை எம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலாசாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வகுமாரசாமிப்புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார்,

பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவர் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழிபெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான **முனைவர் இரா.கண்ணன்**, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ் உரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. இரா. சிவக்குமார் இ.ஆ.ப.** அவர்களுக்கு நன்றி.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீவெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

கரு.அழ. குணசேகரன்

முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன. பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக்கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப்படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக்கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சமகாலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா,ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி,நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலைநாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளையேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை **முனைவர் ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.11.2010
சென்னை–55

இரா.கண்ணன்.

சுருக்க விளக்கம்

அவி	–	அவிநயம்
இ-பொ	–	இதன் பொருள்
இல. விள	–	இலக்கண விளக்கம்
உ–ம்	–	உதாரணம்
உணர்–ற்று	–	உணர்த்துதல் நுதலிற்று
எ–டு	–	எடுத்துக்காட்டு
எ–று	–	என்றவாறு
எ–னின்	–	என் நுதலிற்றோ எனின்
சுவாமி	–	சுவாமிநாதம்
சூ–ம்	–	சூத்திரம்
தொல். எழு	–	தொல்காப்பியம் எழுத்ததிகாரம்
தொல். சொல்	–	தொல்காப்பியம் சொல்லதிகாரம்
தொல். பொருள்	–	தொல்காப்பியம் பொருளதிகாரம்
தொன்	–	தொன்னூல் விளக்கம்
நச்	–	நச்சினார்க்கினியர்
ந.பா	–	நவநீதப் பாட்டியல்
நேமி	–	நேமிநாதம்
பா–டு	–	பாட வேறுபாடு
பொ–ரை	–	பொழிப்புரை
மா.அலங்	–	மாறனலங்காரம்
முத்து.வீ	–	முத்துவீரியம்
வீர	–	வீரசோழியம்
வெண். பாட்	–	வெண்பாப் பாட்டியல்

குறிப்பு

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ,
ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே

a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o, ō, au,
kh

எனவும்.
க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய், ர் , ல்
, வ், ழ், ள், ற் , ன் – வ்வெழுத்துக்கள் முறையே

k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p ,
m , y , r , l , v ,ḷ ,l̲, ṟ , n̲, kh

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

நன்னூல் உரைவளம்

சொல்லதிகாரம்

உரிச்சொல்லியல்

உரிச்சொல்லியல்

441. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்

பல் வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி
ஒரு குணம் பல குணம் தழுவிப் பெயர் வினை
ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்

pala vakaip paṇpum pakar peyar āki
oru kuṇam pala kuṇam taḻuvip peyar viṉai
oruvā seyyutku uriyaṉa urissol

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Chap v. QUALIFYING WORDS

qualifying words defined

Qualifying words are the names of the various kinds of properties which, signifying one or more attributes (of matter and spirit), are the inseparable adjuncts of Nouns and Verbs, and belong especially to poetry.

ஒப்புமைப் பகுதி

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட்டு உரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட்டு உரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தந்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்

(தொல். சொல்.: 297)

ஒண்பேர் வினையோடுந் தோன்றி உரிச்சொலிசை
பண்பு குறிப்பாற் பரந்தியலும் – எண்சேர்

பலசொல் லொருபொருட் கேற்றமொரு சொற்றான்
பலபொருட் கேற்றவும் பட்டு

(நேமி.: 80)

குறிப்பும் பண்பும் இசையும் தோற்றிப்
பெயரும் வினையும் போன்றவை இரண்டற்கு
மடியு மாகி யவற்றேற் புழிநின்
றொருபொருட் குரிமையும் பலபொருட் குரிமையு
முடையவாகி யுணரா தவற்றை
யுணர்ந்தவை சார்த்தி யுணர்வன உரிச்சொல்
அவைதாம்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்

(இ.வி.: 280)

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
யொருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒரு பொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மருங்கிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் ஆயினும் பொருள்வேறு கிளத்தல்

(மு.வீ.: 669)

உரிச்சொல் என்ப உரிய பற்குண சொல்
ஆகிப் பெயர்வினை அனைந்து வருமே

(தொ.வி.: 138)

பண்பான வடிவு அளவு நிறம்காட்சி கருத்தாய்ப்
பகர் உரித்தாய்ப் பெயர்வினை போன்றவைக் கடியாய் முன்பின்
எண்பாலினின்று உணராஉணர்த்தி உணர்த்தலிற் சார்ந்
ஒருசொல் பலபொருட் பலசொல் ஒருபொருளாம் உரிச்சொல்
என்பாவின் இருபாலும் இணங்கிட விகாரத்
தியன்று பொருள் அமைவுசெயும் பிறிது எனினும் பொருளாம்
நண்பாண்மை யுறும் பொருட்குப் பொருள்தெரியின் மிகவாம்
நன்மதுரங் கொழிந்திருக்கு நயப்பிடை வாய்த்திடுமே

(சுவாமி.: 57)

மயிலை நாதர்

என்பது சூத்திரம். இவ்வோத்து என்னுதலியதோ வெனின் ஒத்து நுதலியதூஉம் ஒத்தினது பெயருரைப்பவே விளங்கும்; ஆயின், இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின்; உரிச்சொற்களது இயல்பு உணர்த்திற் றாதலான்,

[1]உரிச்சொல்லிய லென்னும் பெயர்த்து; மேலோத்தினோடு இதற்கு இயைபு என்னையோ வெனின், நால்வகைச் சொல்லிற் பின்னின்றது உரிச்சொல் லாதலின் அதனோடு இயைபுடைத் தென்க.

இவ் வோத்தினுள் இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், உரிச் சொற்களது [2]பொதுவியல் உணர்த்துதல் நுதலிற்று,

இ–ள்.:– பலவேறு வகைப்பட்ட பண்புகளையும் அறிவிப்பனவான பெயர்ச்சொல்லாகி ஒரு குணத்திற்கே உரியவாயும் பல குணத்திற்கே உரியவாயும் ஏனைப் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையுந் தழுவிச் செய்யுட்கே நீங்காது வரும் கிழமையை யுடையன உரிச்சொல்லாவன, **எ–று.**

உரியசொல் யாது அஃது உரிச்சொல். பல்வகைப் பண்பென்றது, தொழிற்பண்பும் தழுவுதற் கென்க. ஆயின்,' இருவகைப் பண்பும் பகர்பெயராகி' என்று [3]சூத்திரஞ் செய்யாது வைத்து, ஞாபகமாகப் கூறவேண்டுவ தென்னையோ வெனின், தொழிற்பெய ரெல்லாம் உரிச்சொல் லெனப்படா வாதலிற் செய்யுட்கே ஏற்று வருவன சில கோடற்கும் தொழில் கருவியாற் [4]பெறப்படுதலால் ஏனைப் பண்புகள்போல் ஒருதலை யான ஒற்றுமைச் சிறப்பினவல்ல வென்பது அறிவித்தற்கு மெனக் கொள்க

வ–று.:–

"உறுபுகழ்" "தவச்சேய் நாட்டா ராயினும்" (நற். 115), "நனிபேதையே" (புறநா. 227) "புண்கூர்யானை" (நற் 65) எனவும், சாலக்கொண்டான், தவச்சென்றான், நனி சொன்னான், [1]நோய் கூர்ந்தது எனவும், பெயரொடும் வினையொடும் வந்தவாறு காண்க. பெயர் வினைகட்கு முன் பின் வருமென்னாமையின், ஏற்புழி வருமெனக் கொள்க.

சங்கர நமச்சிவாயர்
சிவஞான முனிவர்

எ–னின், நிறுத்தமுறையானே உரிச்சொல் இலக்கணம் இவ்வியலான் உணர்த்துவான் தொடங்கி, அவற்றின் பொது விலக்கணம் **உணர்–ற்று.**

இ–ள்.:– ***★பண்புகள்★*** குணப்பண்பும் தொழிற்பண்புமாகிய இரண்டனுள் அடங்கும் ***★ஆயினும் இசை குறிப்புப் பண்பு எனப் பலவேறு வகைப்படுதலின்★*** பல வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி அங்ஙனம் உணர்த்துழி ஒரு சொல் ஒருகுணத்தை உணர்த்துவனவும் பலகுணத்தை உணர்த்துவனவுமாய் ஏனைப் பெயர்வினைகளை விட்டு நீங்காவாய்ச் செய்யுட்கு உரியனவாய்ப் பொருட்கு உரிமைபூண்டு வருவன உரிச்சொல்லாம், **எ–று.**

இவ்வாறு வருதல் மேற்காட்டும் உதாரணங்களுள் காண்க.

இவையும் பண்புப் பெயராயினும் ஏனைப் பெயர்வினைகளை விட்டு நீங்காமையின் வேறு ஓதப்பட்டன என்பதூஉம், செய்யுட்கு

உரியனவாய்ப் ★*பொருட்கு உரிமை பூண்டன ஆதலின்*★ இவற்றிற்கு உரிச்சொல்லெனக் காரணக்குறி போந்தது என்பதூஉம் இவற்றின் இலக்கணம் கூறிய முகத்தான் உணர்த்தியவாறு காண்க.

★*இசை – ஓசை. குறிப்பு – மனத்தான் குறித்து உணரப்படுவது. பண்பு – பொறியால் உணரப்படும் குணம். இவற்றை அடக்கி நின்ற குணமும் தொழிலும் பொருள் எனவும் படுமாதலின் இவற்றை உணர்த்தும் உரிச்சொல்லும் பெயர்ச்சொல் எனப்படுமாதலின் பல்வகைப் பண்பும் பகர்பெயராகி என்றார்.*★

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உரிச்சொல்லினது இயல்பு கூறுகின்றது.

இ–ள்.:– பலவகைப் பண்பும் – குணப்பண்பு தொழிற்பண்பு முதலாகிய பலவகைப்பட்ட பண்புகளையும், **பகர்பெயராகி** –அறிவிப்பனவான பெயர்ச்சொல்லாகி, **ஒருகுணம் பலகுணந்தழுவி**– ஒரு குணத்துக்கே உரியவாகியும் பல குணத்துக்கே உரியவாகியும், **பெயர்வினை ஒருவா** – ஏனைப் பெயர்ச் சொல்லையும் வினைச்சொல்லையும் தழுவி, **செய்யுட்குரியன** – செய்யுட்கே வரும் உரிமையுடையன, **உரிச்சொல்** – உரிச்சொல்லாவது, **எ–று.**

உரிய சொல் யாது அது உரிச்சொல்லென்க.

உ–ம்.:–

"உறுபுகழ்", "தவச்சேய் நாட்டா ரானும் " (நற்.115), " நனிபேதையே" (புறம்,227), " புண்கூர் யானை" எனவும் சாலக் கொண்டான், தவச் சென்றான் , நனி சொன்னான், நோய் கூர்ந்தது எனவும் பெயரொடும் வினையொடும் வந்தவாறு காண்க.

பெயர் வினைகட்கு பின் முன் வரும் என்னாமையின் ஏற்பது வருமென்க,

விசாகப் பெருமாளையர்

இது, நிறுத்தமுறையால் உரிச்சொல்லிலக்கணம் இவ்வியலால் உணர்த்தும்படித் தொடங்கி அவற்றின் பொதுவிலக்கண முணர்த்துகின்றது.

இ–ள்.:– பல்வகை – இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பலவேறு வகைப்பட்ட, **பண்பும்** – பண்புகளையும், **பகர்பெயராகிய** – உணர்த்துகிற பெயராகி, **ஒரு குணம்** – ஒருகுணத்தையும், **பலகுணம்**– பலகுணங்களையும், **தழுவி** – உணர்த்துவனவாய், **பெயர்வினை**– பெயர்வினைகளை விட்டு, **ஒருவா**– நீங்காவாய், **செய்யுட்கு**–செய்யுளுக்கு, **உரியன** – உரியனவாய்ப் பொருளுக்குரிமை பூண்டு நிற்பவை, **உரிச்சொல்**–உரிச்சொற்களாம், **எ–று.**

(இசை ஓசை, குறிப்பு – மனத்தாற் குறித்து உணரப்படுவது, பண்பு –பொறியாலுணரப்படுவது)

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உரிச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணங்கூறுஞ் சூத்திரம் யாது?

பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல்.

(பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி ஒரு குணம் பலகுணம் தழுவிப் பெயர் வினை ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்.)

இ—ள்.:— இசையுங் குறிப்பும் பண்புமாகிய பலவேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி அவ்வாறுணர்த்தும்போது ஒருசொல் ஒருகுணத்தையுணர்த்துவனவும் பலகுணங்களையுணர்த்துவனவுமாய்ப் பெயர் வினைகளைவிட்டு நீங்காவாய்ச் செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்குரிமைபூண்டு நிற்பவை உரிச்சொற்களாம். **எ—று.**

2. உரிச்சொல் என்னும்பெயர் யாதுபற்றி வந்தது?

தமக்கியல்பில்லா விடைச்சொற்போலாது இசை குறிப்புப்பண்பென்னும் பொருட்குத் தாமேயுரியவாதலின் உரிச்சொல் எனப்பட்டது.

இசை ஓசை. குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு பொறியாலுணரப்படுங் குணம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, நிறுத்தமுறையே உரிச்சொல் இலக்கணம் இவ்வியலா லுணர்த்தத் தொடங்கி, அவற்றின் பொதுவிலக்கண முணர்த்திற்று.

இ—ள்.:— பல்வகைப் பண்பும் பகர் பெயராகி — குணப்பண்புந் தொழிற்பண்புமாகிய விரண்டினுளடங்கும் பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, (அவ்வா றுணர்த்தும்போது) **ஒரு குணம் பல குணம் தழுவி** — ஒரு சொல் ஒரு குணத்தைத் தழுவியும் பல குணங்களைத் தழுவியும், **பெயர்வினை ஒருவா** — மற்றப்பெயர்ச் சொல்வினைச் சொற்களை விட்டு நீங்கா தனவாகி, செய்யுட்குரியன வுரிச் சொல் — செய்யுளுக்குரிமையுடையனவாகிப் (பொருளுக்குரிமை பூண்டு) வருவன வுரிச்சொல்லாம், எ—று.

இவ்வாறு வருவதை யினிக்காட்டு முதாரணங்களுட் காண்க. இவை பண்புப்பெயராயினும் மற்றப் பெயர் வினைகளைவிட்டு நீங்காமையின் உரிச்சொல் என வேறோதப்பட்டன வென்பதும் செய்யுளுக்கு உரியனவாதலின் இவற்றிற்கு உரிச்சொல் வெனக் காரணக் குறியாயிற்றென்பதும் பெறப்பட்டன. இனி நால்வகைச் சொற்களுஞ் செய்யுட் குரியனவாய் வருதலின் இவர் செய்யட்குரியன உரிச்சொல் என்றது பொருந்தா தென்பதும் — இசையுங்குறிப்பும்.

பண்புமாகிய மூவகைப்பொருளுக்கும் உரித்தாய் வருதலின் உரிச்சொல் என்பது பொருந்து மென்பதும் ஆசிரியர் தொல்காப்பியனார்,

"உரிச்சொற்கிளவி விரிக் குங்காலை

யிசையினுங் குறிப்பினும் பண்பினுந்தோன்றிப்
பெயரினும் வினையினு மெய்தடுமாறி
யொருசொற்பல பொருட்குரிமைதோன்றினும்,
பலசொல் லொரு பொருட்குரிமை தோன்றினும்
பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்த மரபிற் சென்றுநிலை மருங்கி
னெச்சொலாயினும் பொருள் வேறு கிளத்தல்"

எனக்கூறிய இச்சூத்திரத்தால் உய்த்துணர்ந்து கொள்க. இசை ஓசை, குறிப்பு மனத்தா லுணரப்படுவது, பண்பு ஐம்பொறிகளாலுணரப்படுவது, (உரியன வுரிச்சொல் என விச் சூத்திரத்தை முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: **பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி** – இசையுங் குறிப்பும் பண்புமாகிய பலவேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, **ஒருகுணம் பலகுணம் தழுவி** – அவ்வாறுணர்த்தும் போது ஒரு சொல் ஒருகுணத்தை உணர்த்துவனவும் பல குணங்களை உணர்த்துவனவுமாய், **பெயர்வினை ஒருவா** – பெயர் வினைகளை விட்டு நீங்காவாய், **செய்யுட்கு உரியன உரிச்சொல்** – செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்குரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாம், எ–று.

இசை–ஓசை, குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு பொறியாலுணரப்படுங் குணம்.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ன்.:- **பல்வகைப் பண்பும் பகர் பெயர் ஆகி** – இசையுங் குறிப்பும் பண்புமாகிய பல வேறுவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, **ஒரு குணம் பலகுணம் தழுவி** – அவ்வாறுணர்த்தும் போது ஒரு சொல் ஒரு குணத்தையுணர்த்துவனவும் பல குணங்களை யுணர்த்துவனவுமாய்,–**பெயர் வினை ஒருவா** – பெயர்வினைகளை விட்டு நீங்காவாய – **செய்யுட்கு உரியன உரிச்சொல்** – செய்யுளுக்கு உரியவையாய்ப் பொருட்குரிமைபூண்டு நிற்பவை உரிச்சொற்களாம். எ–று.

இசை ஓசை, குறிப்பு மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு பொறியாலுணரப்படுங் குணம்

வை.மு.சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **பல் வகை** (குணமும் தொழிலும் ஆகிய) – பலவகைப்பட்ட, **பண்பும்** – (பொருள்களின்) பண்புகளையெல்லாம், **பகர்பெயர் ஆகி**– தெரிவிக்கிற பெயராகி, (அவ்வாறு தெரிவிக்கும்போது), **ஒரு குணம்** –ஒருகுணத்தையும், பல

குணம் – பலகுணங்களையும், **தழுவி**– தெரிவிப்பவையாய், **பெயர் வினை ஒருவா** – பெயர்ச்சொல் வினைச்சொற்களை விட்டு நீங்காதவையாய், **செய்யுட்கு** – செய்யுளுக்கு, **உரியன** – உரியவையாய் (ப்பொருளக்கு உரிமை பூண்டு) வருபவை, **உரிச்சொல்** – உரிச்சொற்களாம், **எ–று.**

(இவ்வாறு வருவதை இனிக்காட்டும் உதாரணங்களுள் காண்க)

இவை–பண்புப்பெயராயினும், மற்றைப் பெயர் வினைகளை விட்டு நீங்காமையால் 'உரிச்சொல்' என வேறு ஓதப்பட்டன வென்றும், பெயர்வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பதனால் உரிச்சொல், எனக் காரணப்பெயர் பெற்றனவென்றும் அறிக. இனி, செய்யுளுக்கே உரியனவாய் வருதலால், உரிச்சொல்லெனப் பெயர்பெற்ற தென்பாரும் உளர்.

பவானந்தம் பிள்ளை

இ–ள். பல்வகைப் பண்பும்–இசையுங் குறிப்பும் பண்புமாகிய பலவேறு வகைப்பட்ட பண்புகளையும், பகர் பெயர் ஆகி – உணர்த்தும் பெயராகி, ஒருகுணம் பலகுணம் தழுவி– (அவ்வாறுணர்த்தும்போது ஒருசொல்) ஒருகுணத்தை யுணர்த்துவனவும் பலகுணங்களையுணர்த்து வனவுமாய், பெயர் வினை ஒருவா– பெயர் வினைகளைவிட்டு நீங்காவாய், செய்யுட்கு உரியன உரிச்சொல் – செய்யுளுக்கு உரியவையாய் பொருட்குரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாம். எ–று.

இசை–ஒசை. குறிப்பு–மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு–பொறியாலுணரப்படுங் குணம்.

இவை பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றிற்கு உரிமைப்பூண்டு நிற்பதனால் 'உரிச்சொல்' எனப் பெயர் பெற்றன.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ – ள்.:– பல்வகை – (இசையும் குறிப்பும் பண்பும்) ஆகிய பலவேறு வகைப்பட்ட, **பண்பும்** – பண்புகளையும், **பகர் பெயராகி**–உணர்த்துகிற பெயராகி, **ஒரு குணம் பல குணம் தழுவி** – ஒரு குணத்தையும் பலகுணங்களைம் உணர்த்துவனவாய், **பெயர் வினை ஒருவா** – பெயர்வினைகளை விட்டு நீங்காவாய், **செய்யுட்கு உரியன**–செய்யுளுக்கு உரியனவாய்ப் பொருளுக்குரிமை பூண்டு நிற்பவை, **உரிச்சொல்** – உரிச்சொற்களாம். (எ – று.)

பொ–ரை.:– (பண்புகள் குணப்பண்பும் தொழிற்பண்பும் ஆகிய இரண்டனுள் அடங்குமாயினும், இசை குறிப்புப் பண்பெனப்) பல்வேறு வகைப்படுதலின் பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, அங்ஙனம் உணர்த்துழி ஒரு சொல் ஒரு குணத்தை யுணர்த்துவனவும், பலகுணத்தை யுணர்த்து வனவுமாய் ஏனைப் பெயர் வினைகளை விட்டு நீங்காவாய்ச் செய்யுட் குரியனவாய்ப் பொருட்குரிமை பூண்டு வருவன உரிச்சொல்லாம்.

(இசை–ஓசை, குறிப்பு–மனத்தாற் குறித்து உணரப்படுவது, பண்பு–பொறியாலுணரப்படுவது.)

கா.நமச்சிவாய முதலியார்

பல்வகை – (இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய) பல வேறு வகைப்பட்ட, **பண்பும்** – பண்புகளையும், **பகர் பெயர் ஆகி** – உணர்த்துகின்ற பெயராகி, **ஒரு குணம்** – ஒரு குணத்தையும், **பல குணம்**– பல குணங்களையும், **தழுவி** – உணர்த்துவனவாய், **பெயர் வினை**– பெயர் வினைகளை விட்டு, **ஒருவா** – நீங்காவாய், **செய்யுட்கு** – செய்யுளுக்கு, **உரியன** – உரியவையாய்ப் பொருளுக்கு உரிமை பூண்டு நிற்பவை, **உரிச்சொல்** – உரிச்சொற்களாம்.

(இசை = ஓசை, குறிப்பு = மனத்தாற்குறித்து உணரப்படுவது. பண்பு= பொறியால் உணரப்படுவது.)

மோசசு பொன்னையா

இசை, குறிப்பு, பண்பு ஆகிய பண்புகளைத் தெரிவிக்கின்ற பெயராகி, அப்பண்புகளைத் தெரிவிக்குங்கால், ஒரு குணத்தையும், பல குணங்களையும் பொருந்திநின்று, பெயர், வினைச் சொற்களைவிட்டு நீங்காதனவாய்ச் செய்யுட்கட்கு உரிமை பூண்டு வருவன உரிச்சொற்களாம் எ–று.

இசை–ஓசை, குறிப்பு – மனத்தாலுணரப்படுவது; பண்பு; ஐம்பொறிகளாலுணரப்படுவது.

பின்னர் சிறப்பு நூற்பாக்களில் எடுத்துக்காட்டுக்கள் தரப்படும். இதனால், உரிச்சொல் பண்புப்பெயர் என்றும், அது குணந்தழுவிப் பெயர், வினைகளை விடாது பற்றி நின்று செய்யுட்கு உரியதாகும் தன்மைத்து என்றும் கொண்டார் என்பது போதரும். இவ்வாசிரியர்,

இன்ன தின்னுழி இன்னனம் இயலும்
என்றிசை நூலட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்திலிற் பிங்கல முதலா
நல்லோர் உரிச்சொல்லின் தயந்தனர் கொளலே,

எனப் பின்னர்க் கூறிவைத்துள்ளதும் அதற்கு அரணாகும். எனவே, நிகண்டு நூல்களிற் குண, குணிப் பெயராய் வருவனவே உரிச்சொல் எனப் பவணத்தியார் கொண்டார் என்பது வெளிப்படை.தொல்காப்பியர்,

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை
இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடு மாறி
ஒருசொல் பலபொருட் குரிமை தோன்றினும்
பல சொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலாத வற்றைப் பயின்றவை சார்த்தித்

தத்த மரபிற் சென்றுநிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்,

என உரியியலின் முகப்பிற் கூறியுள்ளார். அதன் உரையில், அஃது உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறியுள்ளதாக உரைத்தனர். உரிச்சொல் இசை, குறிப்பு, பண்புப் பொருளன வாய் முதற்கண் நின்றும், அதாவது அவற்றையே தற்பொருள் அல்லது உரிய பொருளாகப் பெற்றும், பல்வேறு இடைச் சொற்களால் ஒட்டப்பட்டு ஆக்கப்படும் பெயர் வினைகளாம் ஆக்கச் சொற்களில் உருமருவி அமைந்தும் தம்மோடு வந்து கூடும் விசேடிக்குஞ் சொற்களின் ஆற்றலால், ஓர் உரிச்சொல் பல்வேறு பொருளுக்கு உரிமைப்பட்டும் வழங்குவனவாயும், பயிற்சி குன்றிய உரிச்சொற்களைப் பயிற்சியுடையவற்றோடு சார்த்தி அவ்வவற்றிற்குரிய மரபு நிலை தவறாது ஒட்டி வழங்கும் நிலைக்கண் எவ்வெவ் வுரிச்சொல்லும் வெவ்வேறு தற்பொருள் உணர்த்தும் தன்மையவாயும் அமையும் என்பதே தொல்காப்பியர் கொண்ட பொருளாகும்.

அவர், எழுத்ததிகாரத்தில்,

உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்
குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச் சொற் கிளவி
....
.... மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றா,

எனவும், எச்சவியலில்,

குறைச்சொற் கிளவி குறைக்கும் வழி அறிதல்,
குறைத்தன ஆயினும் நிறைப்பெயர் இயல,

எனவும் கூறியுள்ளார். எனவே, உரிச்சொல் குறைச்சொல் அதாவது ஆக்கச் சொல்லாய் வழங்கும் பெயர், வினைச் சொற்களின் அடிப்படைக்கூறு அல்லது மூல அலகு என்றும்; அது பண்டுதொட்டுப் பெயர், வினைகளில் மூலமாக வழங்கும் வழக்காலேயே அதன் உண்மை தெரிந்து கொள்ளப்படுமாதலின் புணரியல் விதிப்படி நிலைமொழி வருமொழியாகக் கூறு செய்து அதனை அதன் இயல் உருவில் அமைத்துப் பொருள் காண்டல் மரபன்று, எளிது மன்று ஆதலின், அதனை அதன் இயல் உருவில் அமைத்துப் பொருள் காண்டல் அறிஞருக்கே சாலும் என்றும், அவ்வாறு குறைத்துப் பொருள் காணவல்லாருக்கு, முடிந்த ஆக்கச் சொற்கள் அனைத்தும் பொருள் குறித்து வருமாறே போல் உரிச்சொற்களும் தத்தம் பொருள் குறித்தே நிற்கும்[4] என்றும் புலனாகும்.

மேலும், தொல்காப்பியர் உரிச்சொல்லாம் தற்பொருளுடைய மூல அலகை மேலும் பிரித்துக் காணல் இயல்பன்று என்பாராய்,

எழுத்துப் பிரிந் திசைத்தல் இவணியல் பின்றே,

எனவும், அம்மூல அலகில் பொருள் அமைதி பண்டு தொட்டு மரபு வழிப்பட்டு வருவதாலின், அதற்குக் காரணம் விளங்கத் தோன்றாது என்பாராய்,

மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா,

எனவும் தெளிவுறுத்தினார்.

தொல்காப்பியர், பொருள் வெளிப்படப் புலப்படா நூற்று இருபது உரிச்சொற்களுக்கே பொருள் கூறியுள்ளமைக்குக் காரணம் கூறுவாராய்,

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா

வெளிப்பட வாரா வுரிச்சொன் மேன,

என்றும்; பொருள் கூறிய சொற்களின் பொருளை மாணாக்கருக்கு உணர்த்தும் முறைமையை,

மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்

முன்னும் பின்னும் வருபவை நாடி

ஒத்த மொழியால் புணர்த்தனர் உணர்த்தல்

தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே,

என்றும் கூறியுள்ளார். அதனால், பெயரடிகளாகவும், விகுதி பெற்ற பெயர்களாகவும், வினையடிகளாகவும், விகுதி பெற்ற வினைச்சொற்களாகவும், பெயரடைகளாகவும் தாம் எடுத்துக் கூறியுள்ள சொற்களில், உரிச்சொல் உருமாறியோ, இயல் உருவிலோ இருப்பதை அறிந்து, அம் மூலஅலகாம் உரிச் சொல்லை அதன் முன்னோ, பின்னோ ஒட்டி நின்று சொல்லாம் தன்மையில் வழங்க உதவி நிற்கும் இடைச்சொற்கள் இவை இவை என ஆய்ந்துகண்டு, அவ்வ வற்றை ஏற்றவாறு மொழிப்படுத்தி உரைப்பின் இளைஞருக்கும், மொழிக்குப் புதியருக்கும் உரிச்சொற்களின் பொருள் மரபுநிலை பிறழாது உணர்த்தப்படும் என அவர் அறிவுரை நல்கியுள்ளார் என்பது போதரும். உரையாசிரியர்கள் உரிச் சொற்களுக்கு இலக்கியஞ் சுட்டிச் செல்லும் முறையை நோக்கின், அவர்களும்இம்முறையைப் பின்பற்றினர் என்பது இனிது விளங்கும்.

உரிச்சொற்களும் சிற்சில இடங்களில் சாலப்பல, உறுவளி, தவச்சேய், நனிபேதை, என இவ்வாறு இடைச் சொற்களே போல் பிற உரிச் சொற்களின் பொருளை விசேடித்து நிற்றற்கும் உரியன என்பதைத் தொல்காப்பியர்,

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே,

உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய,
என எச்சவியலிற் கூறினார்.

இவற்றையெல்லாம் நன்கு சீர்தூக்கி ஆய்ந்து காண்பதெனின், உரிச்சொல் எனப்படுவது சொற்களின் தற்பொருள் கொண்ட மூலஅலகேயாம் என்பது போதரும். சொல்லின் பொருட்கு உரிய மூலம் உரிச்சொல் என வழங்கப்பட்டது சிறப்பேயாகும்.

தற்கால ஆராய்ச்சியாளருள் டாக்டர் P.S. சுப்பிரமணிய சாத்திரியாரும்,[1] டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும்,[2] டாக்டர். இலக்குவனார் அவர்களும்[3] உரிச்சொற்களைத் தற்பொருள் கொண்ட மூலஅலகாம் அடிச்சொற்கள் என்றே கருதுகின்றனர்.

புத்தம்புதிய சொற்களை ஆக்கும் முறைபற்றியும் தொல்காப்பியர் கூறிவைத்து உரிச்சொற்களின் சிறப்பு நிலையைப் புலப்படுத்துவாராயினார். அவர் எடுத்துக் கூறிய உரிச்சொற்களுக்கே, அவர் கூறாத, வெளிப்படவாராபுதுப் பொருள் தோன்றின், அவற்றையும் ஏற்க என்பாராய்,

கூறிய கிளவிப் பொருணிலை அல்ல
வேறுபிற தோன்றினும் அவற்றோடு கொளலே,
எனக் கூறி வைத்தார்.

இஃது இவ்வாறாகவும், தொல்காப்பிய உரியியலில் எச்சப் பொருள் தரும் இடைச்சொற் புணர்த்திக் கூறப்பட்ட சிலவற்றை எச்சவினைகள் எனவும், விகுதி புணர்த்திக் கூறப்பட்ட சிலவற்றை வினை அல்லது பெயர்கள் எனவும் பிறழ உணர்ந்து, சேனாவரையரை யுள்ளிட்ட உரைகாரர், 'பெரும்பான்மையுஞ்

குறிப்புகள்.:-

1. From a close study of the chapter in Tolkappiam dealing with uriccol and the commentary on the same by Deyvaccilaiyar it is evident that uriccol is nothing but nominal root and verbal root = comparative Grammar of the Tamil Language – P.S.S. – p.88.
2. Uriccol 'root' according to Tolkappiyar denotes sound, the physical qualities or mental conceptions. Some of the roots are synonyms, some others polysemes. It is important to note that these roots according to him can occur both as verb roots and noun roots. This is of fundamental importance, as the distinction between noun and verb is syntactic rather than morphological, inspite of attempts made by the speakers to differentiate them. He gives the meaning for a few of the roots. He cites the roots in the form of verbal nouns. If the suffixes are removed, the roots are either monosylabic or disyllabic – A History of the Tamil Language – T.P.M. – p.75.
3. It is to be presumed that Semantemes are termed Uriccol and Kuraiccol by Tholkappiyar – Tholkappiyam with critical studies – Prof. S. Ilakkuvanar.- p.355 .

செய்யுட்கு உரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பாருமுளர்' என்றதானாலும், இவ்வாசிரியர், 'செய்யுட் குரியன வுரிச்சொல்' என இந்நூற்பாவிற் கூறி,

இன்ன தின்னுழி யின்னன மியலும்

என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்

சொல்லாப் பரத்தலிற் பிங்கல முதலா

நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே,

எனத் தொடர்ச்சி காட்டி மொழிந்துள்ளதாலும், தொல்காப்பிய உரியியலையே நிகண்டுமரபின் தோற்றுவாய் எனப்பல அறிஞர் கருதினர். வேறு சிலர் உரிச் சொற்களிற் பல, பெயர் வினை அடைகளே எனவும் மயங்கினர். மொழியியல் வல்லுநர்

தமிழ் மொழியின் இயலை நன்கு கற்றற்குத் தொல்காப்பியம் உறு கருவி என்பதையும், அந்தக் கருவியாற் பிற கருவிகளை செப்பஞ் செய்த பின்னரே, தமிழ் மொழியின் இயல் பற்றித் தங்கருத்தைக் கூறுவதே இம்மொழிக்கு அவர் செய்யத் தகுவதாம் கடமை என்பதறிதல் வேண்டும். வடமொழிக் கல்வி மிகுதியால் தெய்வச்சிலையார் போன்ற சிறந்த உரைகாரரும் தமிழ் மொழியின் இயல்பை மறந்து 'எழுத்ததிகாரத்துள் இதனைக் குறைச் சொற்; கிளவி என்று ஓதினமையால், வடநூலாசிரியர் தாது என்று குறியிட்ட சொற்களே இவை யென்று கொள்ளப்படும்' எனத் தமிழ் மொழியின் இயலை மறைத்து உரை எழுதுவாராயினார்.

இனி, தொல்காப்பியர் 120 உரிச்சொற் கிளவிகளைக் காட்டினார். நன்னூலார் அவற்றின் கருத்தை உணரமாட்டாதவ ராய்ச் "செய்யுட்கே உரிய சொல் ஆதலின் உரிச் சொல்" என்று விளக்கந் தந்தார். "தொல்–ஆசிரியர் 100 சூத்திரங்கள் கூறி 120 சொற்களை விளக்கி இருக்க; நன்னூலார் சாலஉறுதவ', 'கடியென் கிளவி... ' போன்ற 4 சூத்திரங்கள் மட்டும் உரிச்சொல் பற்றிக் கூறிப் பின்னர் ஏதேதோ தொகைப் பற்றிப் பலபல 1,2,3, முதலிய எண்களின் தொடர்புகளையுடைய பொருள் குறித்து எழுதியுள்ளார்' என அ.கு. ஆதித்தனார் கூறுவது இவண் நோக்கத்தக்கது.

நேமிநாதமுடையாரும், இவ்வாசிரியரே போல்,

ஒண்பேர் வினையோடுந் தோன்றி உரிச்சொலிசை

பண்பு குறிப்பாற் பரந்தியலும் – எண் சேர்

பலசொல் லொருபொருட் கேற்றுமொரு சொற்றான்

பலபொருட் கேற்றவும் பட்டு,8

என்றே உரிச்சொல்லின் பொது இலக்கணங் கூறினார்.

442. [1]உயிருயிர் இல்லதாம் பொருட்குணம் பண்பே.

உயிர் உயிர் இல்ல தாம் பொருள் குணம் பண்பே.

uyir uyir alla ṭām porul̲ kuṇam paṇpē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Quality defined

By property are meant the qualities both animate and inanimate objects.

மயிலை நாதர்

எ–ன், மேல், "பண்பு "என்றார், அஃது இஃதென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: உலகத்து உயிருள்ளதும் உயிரில்லாததுமா யடங்கும் இரு வகைப் பொருள்களினுடைய குணம் பண்பாவது, **எ–று.**

சங்கர நமச்சிவாயர்

எ–னின், மேல் பண்பு என்றார் அஃது இஃது என **உணர்–ற்று.**

இ–ள்.: உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளும் என இருவகையுள் அடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்பாம், **எ–று.**

கடவுட்பொருளை ஒழித்தார், அதற்கு ஓர் குணம் இன்மை யானும், உண்டேல், சுட்டப்பட்டு உலகப்பொருளாம் ஆதலானும் என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மேற்பண்பு என்றார்; அஃது இஃதுதெனக் கூறுகின்றது.

இ–ள்.: உயிருயி ரில்லதாம் – உலகத்து உயிர்ப் பொருளும் உயிரில் பொருளுமாய, **பொருட்குணம் பண்பே** – இருவகைப் பொருள்களினுடைய குணம் பண்பாவது, எ–து.

விசாகப் பெருமாளையர்

இது, முன் பண்பென்றார் அது இது என்பது உணர்த்துகின்றது.

இ–ள்.: உயிர் – உயிராகிய பொருளும், **உயிரல்லது** – உயிரல்லாத பொருளும், **ஆம்** – ஆகிய, **பொருள்** – பொருள்களினுடைய, **குணம்** – குணங்கள், **பண்பு** – பண்புகளாகும், **எ–று.**

பாட **வேறுபாடு.:–**

1.உயிருயிரல்லதாம்

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பண்பாவது யாது?

உயிருயி ரல்லதாம் பொருட்குணம் பண்பே.

(உயிர் உயிர் அல்லது ஆம் பொருட்குணம் பண்பே.)

இ–ள்.: உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளுமென இருவகை யுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம். **எ–று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, மேற்பண்பென்றது இதுவென வுணர்த்திற்று.

இ–ள்.:– உயிராகிய பொருளும் உயிரல்லதாகிய பொருளும் என இருவகையுளடங்கும் உலகத்துப்பொருள்களின் குணங்கள் பண்பாம், எ–று.

இதனுட் கடவுட்பொருளை யொழித்தார், என்னெனின்; அதற்கோர் குணமில்லாததினாலும் உளதேற் குறிக்கப்பட்டு உலகப் பொருளாமாதலாலு மென்க. பொருட்குணம் பண்பென முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: உயிர் உயிர் அல்லது ஆம் பொருட்குணம் பண்பு– உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளுமென இருவகையுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம், எ–று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். உயிர் உயிர் அல்லது ஆம்பொருட்குணம் பண்பு – உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளுமென இருவகையுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம். எ–று.

வை.மு சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: உயிர் – உயிருடையதும், **உயிர் அல்லது**–உயிருடையதல் லாததும், **ஆம்**–ஆகிய இருவகையுள் அடங்குகின்ற, **பொருள்**– (உலகத்திலுள்ள) பொருள் களினுடைய, **குணம்**– குணங்கள், **பண்பு**– பண்புகளாம்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– உயிர் – உயிராகிய பொருளும், **உயிர் அல்லது** – உயிரல்லாத பொருளுமென, **ஆம்** –ஆகிய இருவகையு ளடங்கும், **பொருட்குணம்** – உலகத்துப் பொருள்களின் குணங்கள், **பண்பு** – பண்புகளாம். எ–று.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ – ள்.: உயிர் – உயிராகிய பொருளும், உயிர் அல்லது – உயிரல்லாத பொருளும், ஆம் – ஆகிய, பொருள் குணம் – பொருள்களினுடைய குணங்கள், பண்பு – பண்புகளாகும். எ – று.

பொ–ரை.:– உயிராகிய பொருளும் உயிரல்லாத பொருளும் என இரு வகையுளடங்கும் உலகத்துப் பொருள்களின் குணங்கள் பண்புகளாம்.

கா.நமச்சிவாய முதலியார்

உயிர் – உயிராகிய பொருளும், **உயிர்** அல்லது – உயிரல்லாத பொருளும், **ஆம்** – ஆகிய, **பொருள்** – பொருள்களினுடைய, **குணம்** – குணங்கள், **பண்பு** – பண்புகளாகும்

மோசசு பொன்னையா

உயிருள் பொருளும், உயிரில் பொருளுமான இருவகைப் பொருட்களின் குணமாகி, மாந்தர்தம் ஐம்பொறி வழி உறுவது பண்பெனப்படும் எ–று.

கடவுட் பண்பு ஐம்பொறி வழி உறுவதன் றாதலின் அதனைக் கூறாது விடுத்தார்.

(2)

443. மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொணடுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

மெய்ந் நா மூக்கு நாட்டம் செவிகளின்
ஒன்று முதலாக் கீழ்க் கொணடு மேல் உணர்தலின்
ஓர் அறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்.

meyn nā mūkku nāttam sevikaḻin
onru mutalāk kiḻk kontu mēl unartalin
ōr arivu ātiyā uyir aintu ākum.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Living creatures

All living creatures are divided into five classes, the lowest being those, which possess the first only of (the five organs of sense, viz.,)the body. tongue, nose, eyes, and ears; the next higher, the first two (organs) the next the first three and so on.

ஒப்புமைப் பகுதி

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

(தொல். பொருள்.: 571)

மயிலை நாதர்

எ–ன், மேல், "உயிர்" என்றார், அவ்வுயிர்க் கூறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– மெய்முதலான ஐந்தனுள்ளும் ஒன்று முதலாகக் கீழ் நின்ற தனையுங் கொண்டு மேல்நின்றது அறிதலான், ஓரறிவுயிர் முதலாக உயிர் ஐந்து கூறாம், எ–று.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், மேல் உயிராகிய பொருள் என்றார் அவை இவை எனத் தொகுத்து **உணர்–**ற்று.

இ–ள்.:– இங்ஙனம் மெய் முதலாகக் கூறிய ஐம்பொறிகளானும் பரிசம் இரதம் கந்தம் உருவம் சத்தும் என்னும் ஐம்புலனையும் உணருங்கால் மெய்யால் பரிசத்தை உணரும் உணர்ச்சி ஒன்று முதலாகக் கீழ்ப்போன உணர்ச்சியுங் கொண்டு மேல் வரும் புலன்களை ஒன்றோடு ஒன்றாக உணர்தலின் ஓரறிவுயிர் முதலாக ஐந்தாம் அவ்வுயிர், எ– று.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உயிர் என்றார் அவ்வுயிர்க் கூறுபாடு கூறுகின்றது.

இ–ள்.:– மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்– மெய், நா, மூக்குக் கண்,செவி என்னும் இவ் வைந்தினுள்ளும், **ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டு –** ஒன்று முதலாகக் கீழ் நின்றதனையுங் கொண்டு, **மேல் உணர்தலின் –** மேனின்றது அறிதலால், **ஓரறி வாதியா –** ஓரறி உயிர் முதலாக, **உயிரைந்தாகும் –** உயிர் ஐந்து கூறாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இது, முன் உயிராகிய பொருளென்றார் அவை இவை யெனத் தொகுத்து உணர்த்துகின்றது.

இ–ள்.:– மெய்–மெய்யும், **நா–**நாவும், **மூக்கு–**நாசியும், **நாட்டம்–**

கண்ணும், **செவிகளின்**—காதும் ஆகிய ஐம்பொறிகளாலும், **ஒன்றுமுதலா**— மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி யொன்று முதலாக, **கீழ்க் கொண்டு** — கீழ்ப்போன வுணர்ச்சியுங் கொண்டு, **மேல்**—இரசம் கந்தம் உருவம் சத்தம் என மேல்வரும் புலன்களை, **உணர்தலின்**—ஒன்றொன்றாக வுணர்தலின், **ஓரறிவாதியா**—ஓரறிவுயிர் முதலாக, **ஐந்தாகும்** — ஐந்துவகையாகும், **உயிர்** — அவ்வுயிர், எ—று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிரெத்தனை வகைப்படும்?

மெய்ந்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்
ஒன்றுமுத லாக்கீழ்க் கொண்டுமே லுணர்தலின்
ஓரறி வாதியா வுயிரைந் தாகும்.

(மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் ஒன்று முதலா கீழ்க்கொண்டு மேல் உணர்தலின் ஓரறிவு ஆதியா உயிர் ஐந்து ஆகும்.)

இ—ள்.:— மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் — மெய்யும் நாவும் நாசியுங் கண்ணுங் காதுமாகிய ஐம்பொறிகளாலும், **ஒன்று முதலா** — மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி யொன்று முதலாக, **கீழ்க்கொண்டு**—கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு, **மேல் உணர்தலின்**—இரதம உருவஞ் சத்தமென மேல்வரும் புலன்களை யொன்றோடொன்றாக உணர்தலின், **ஓர் அறிவு ஆதியாக ஐந்து ஆகும் உயிர்**—ஓரறிவுயிர் முதலாக ஐந்து வகையாகும் அவ்வுயிர்.எ—று.

முகவை இராமானுச கவிராயர்

இது, மேலுயிராகிய பொருளேன்றார் அவையிவை யெனத் தொகுத் துணர்த்திற்று.

இ—ள்.:— மெய்நா மூக்கு நாட்டஞ் செவிகளின்—உடல்முதலாகிய ஐம்பொறிகளாலும், (முறையே—பரிசம் இரதம் கந்தம் உருவம் சத்தம் என்னும் ஐம்புலன்களையுமுணருங்கால்) **ஒன்று** — தேகத்தாற் பரிசத்தை யுணரும் உணர்ச்சி யொன்று முதலாகக் கிழே கடந்து போனவுணர்ச்சியையுங் கொண்ட, மேலுணர்தலின்— மேல்வரும் புலன்களையொன் றொன்றாக வுணர்தலின், **ஓரறிவாதியா** —வுயிரையுந்தாகும் — ஓரறிவுயிர் முதலாக ஐவகைப்படும் மேலே சொல்லப்பட்ட வுயிரென்றவாறு.

ஆறுமுக நாவலர்

இ—ள்.: மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின்— மெய்யும் நாவும் நாசியுங் கண்ணும் காதுமாகிய ஐம்பொறிகளாலும், **ஒன்று முதலா**—மெய்யாற் பரிசத்தையுணரு முணர்ச்சி யொன்று முதலாக, **கீழ்க்கொண்டு** — கீழ்ப்போன வுணர்ச்சியுங் கொண்டு, **மேல் உணர்தலின்** — இரதங் கந்தம் உருவஞ் சத்தமென மேல் வரும் புலன்களை யொன்றோடொன்றாக உணர்தலின், **ஓரறிவு ஆதியா ஐந்து ஆகும்** — ஓரறிவுயிர் முதலாக ஐந்து வகையாகும், **உயிர்** — அவ்வுயிர், எ—று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் – மெய்யும் நாவும் நாசியுங் கண்ணுங் காதுமாகிய ஐம்பொறிகளாலும் – **ஒன்று முதலா** – மெய்யாற் பரிசத்தையுணருமுணர்ச்சி யொன்று முதலாக, – **கீழ்க்கொண்டு** – கீழ்ப்போனவுணர்ச்சியுங் கொண்டு, – **மேல் உணர்தலின்** – இரதங் கந்தம் உருவஞ்சத்தமென மேல்வரும் புலன்களை யொன்றோடொன்றாக உணர்தலின்,– **ஓரறிவு ஆதியா ஐந்து ஆகும்** – ஓரறிவுயிர் முதலாக ஐந்து வகையாகும்,– உயிர் – அவ்வுயிர். எ – று.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்

சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: மெய் – மெய்யும், **நா** – நாக்கும், **மூக்கு** – மூக்கும், **நாட்டம்**– கண்ணும், **செவிகளின்**– காதும் ஆகிய ஐந்து இந்திரியங்களிலும், (முறையே ஸ்பரிசம் ரசம் கந்தம் ரூபம் சப்தம் என்னும் ஐம்புலன்களையும் அறியுமிடத்து, **ஒன்று முதல் ஆ**–(தேகத்தால் ஸ்பரிசத்தை அறியும்அறிவு) ஒன்று முதலாக, **கீழ்க்கொண்டு** – கீழ்ப்போன புலனையும் கொண்டு, **மேல்** – மேல் வரும் புலன்களை, **உணர்தலின்** – (ஒவ்வொன்றாக) அறிதலால், **ஓர் அறிவு ஆதி ஆ**– ஓரறிவுயிர் முதலாக, **ஐந்து ஆகும்**– ஐந்துவகையாம்: **உயிர்**– அவ்வுயிருடைய பொருள், **எ–று**. அவை, முறையே மேற்கூறப்படும்.

> முறையே மெய் வாய் மூக்கு கண் செவி என்னும் ஐம்பொறிகளின் உணர்ச்சியாகிய பரிசம் ரசம் கந்தம் ரூபம் சப்தம் என்னும் ஐம்புலன்கள் ஊறு சுவை நாற்றம் ஒளி ஓசை எனப்படும்.

பவானந்தம் பிள்ளை

இ–ள். :–மெய் நா மூக்கு நாட்டம் செவிகளின் – மெய்யும் நாவும் நாசியுங் கண்ணும் காதுமாகிய ஐம்பொறிகளாலும், ஒன்று முதலா மெய்யாற் பரிசத்தையுணருமுணர்ச்சி யொன்று முதலாக, **கீழ்க்கொணடு** – கீழ்ப்போனவுணர்ச்சியுங்கொண்டு, **மேல் உணர்தலின்** – இரதங் கந்தம் உருவஞ் சத்தமென மேல் வரும் புலன்களை யொன்றோ டொன்றாக உணர்தலின், **ஓரறிவு ஆதியா** – ஓரறிவுயிர்முதலாக, **ஐந்து ஆகும்** – ஐந்துவகையாகும், **உயிர்** – அவ்வுயிர். **எ–று**

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ – ள்.:– மெய் . . . . செவிகளின்– மெய்ம் நாவும் நாசியும் கண்ணும் பாதும் ஆகிய ஐம் பொறிகளாலும், **ஒன்று முதல் ஆ** – (மெய்யாற் பரிசத்தை யுணரு முணர்ச்சி) ஒன்று முதலாக, **கீழ்க்கொண்டு**–கீழ்ப்போன உணர்ச்சியுங்கொண்டு, **மேல் உணர்தலின்** – (இரசம் கந்தம் உருவம் சத்தம் என) **மேல்வரும் புலன்களை** – (ஒவ்வொன்றாக) உணரலின், **ஓர் அறிவு ஆதியா**– ஓரறிவுயிர் முதலாக, **உயிர் ஐந்து ஆகும்** – அவ்வுயிர் ஐந்து வகையாகும். **எ –று**

> **பொ – ரை.;**– இங்ஙனம் மெய் முதலாகக் கூறிய ஐம் பொறிகளாலும், பரிசம், ரசம், கந்தம், உருவம், சத்தம் என்னும் ஐம்புலனையும் உணருங்கால் மெய்பால் பரிசத்தையுணரு முணர்ச்சி ஒன்று முதலாகக் கீழ்ப்போன உணர்ச்சியுங் கொண்டு மேல்வரும் புலன்களை ஒன்றோ டொன்றாக உணர்தலின் ஓரறிவுயிர் முதலாக ஐந்தாம் அவ்வுயிர்.

கா.நமச்சிவாய முதலியார்

மெய் – மெய்யும், **நா** – நாவும், **மூக்கு** – மூக்கும், **நாட்டம்** – கண்ணும், **செவிகளின்** – காதும் ஆகிய ஐம்பொறிகளாலும், **ஒன்று முதல் ஆ** – (மெய்யால் பரிசத்தை உணரும் முயற்சி) ஒன்று முதலாக, **கீழ்க்கொண்டு** – கீழ்ச்சொன்ன உணர்ச்சியுங்கொண்டு, **மேல்** – (இரதம் கந்தம் உருவம் சத்தம் என) மேல்வரும் புலன்களை, **உணர்தலின்** –(ஒன்றொன்றாக) உணர்தலின், **ஓர் அறிவு ஆதி ஆ** – ஓரறிவு உயிர்முதலாக, **ஐந்து ஆகும்** – ஐந்து வகையாகும், **உயிர்** – அவ்வுயிர்.

மோசசு பொன்னையா

மெய்யும், நாக்கும். மூக்கும் கண்ணும், காதும் ஆகிய ஐந்து பொறிகளிலும் ஊறு, சுவை மணம், ஒளி, ஓசை ஆகிய புலன்களை ஒன்று முதலாகக் கீழ் உள்ளவற்றையும் உணர்தலின், உயிர்ப்பொருள் ஓரறி உயிர் முதல் ஐயறிவுயிர் ஈறாக ஐந்து வகைகளாம் எ–று.

(3)

444. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

புல்மரம் முதல உற்று அறியும் ஓர்அறி உயிர்

pul maram muṭala uṟṟu aṟiyum ōr aṟivu uyir.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of one senses

Objects such as grass, trees, &c., possess (but) one sense viz., touch.

ஒப்புமைப் பகுதி

புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 572)

மயிலை நாதர்

எ–ன், ஓரறிவுயிராவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: மேற்சொன்ன ஓரறிவாதியான உயிர்களுட் புல்லும் மரமுமுதலானவை ஊற்றானறியும் ஓரறிவினை யுடைய உயிர்களாம், **எ–று.**

சங்கர நமச்சிவாயர்

எ-னின், மேற்கூறிய உயிர் ஐந்தனுள் ஓரறிவுயிர் இவை என **உணர்த்துதல் நுதலிற்று.**

இ-ள்.:- புல்லும் மரமும் முதலியன மெய்யால் பரிசித்துப் பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்களாம், **எ-று.**

கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், முறையே ஓரறிவுயிர் இவையெனக் கூறுகின்றது.

இ-ள்.: புன்மர முதல - மேற்சொன்ன ஓரறிவாதியான உயிர்களிற் புல்லும் மரமும் முதலானவை எல்லாம், **உற்றறியும்**-மெய் உற்றால் அறியும், **ஓரறிவுயிர்**- ஓர் அறிவினையுடைய உயிர்களாம், **எ-று.**

கல்லும் ஓரறிவுயிர்.

விசாகப் பெருமாளையர்

இது, முன் சொல்லப்பட்ட உயிர் ஐந்தனுள் ஓரறிவு உயிர்கள் இவையென உணர்த்துகின்றது.

இ-ள்.:- புல்-புல்லும், **மரம்**-மரமும், **முதல**-முதலியவை, **உற்றறியும்**- மெய்யாற் பரிசித்துப் பரிசத்ததை யறிகிற, **ஓரறிவுயிர்**-ஓரறிவுயிர்களம், **எ-று.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஓரறிவுயிர்களாவன யாவை?

புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர்.

(புல் மரம் முதல உற்று அறியும் ஓரறிவு உயிர்.)

இ-ள்.: புல்லும் மரமும் முதலியவை மெய்யாற் பரிசித்துப் பரிசத்தையறியும் ஓரறிவுயிர்களாம். **எ-று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, ஓரறிவுயிரிவை யென்கின்றது.

இ-ள்.:- புல்லும்மரமு முதலியன தேகத்தாற் பரிசிக்கப்பட்டு அப்பரிசத்தை யறியும் ஓரறிவுயிர்களாம், **எ-று.**

புன்மர முதல - ஓரறிவுயிரென முடித்துக்கொள்க.

ஆறுமுக நாவலர்

இ-ள்.:- புல் மரம் முதல - புல்லும் மரமும் முதலியவை, **உற்று அறியும் ஓரறிவு உயிர்** - மெய்யாற் பரிசித்துப் பரிசத்தையறியும் ஓரறிவுயிர்களாம், **எ-று.**

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.;— புல் மரம் முதல — புல்லும் மரமும் முதலியவை, — **உற்று அறியும் ஓரறிவு உயிர்** — மெய்யாற் பரிசித்துப் பரிசத்தை யறியும் ஓரறிவுயிர்களாம். **எ—று.**

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— புல்—புல்லும், **மரம்** — மரமும், **முதல** — முதலியவை, **உற்று அறியும்** — தேகத்தால் ஸ்பரிசிக்கப்பட்டு ஸ்பரிசத்தை அறிகிற, **ஓர் அறிவு உயிர்** — ஓரறிவுடைய உயிர்களாம்; **எ—று.**

முதல—புதல், கொடி, புழு முதலியன, பயிலத்தொடுங்கால் புலருமாகலின் இவற்றுக்கு ஓரறிவு உண்மை உணர்க.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— புல் மரம் முதல — புல்லும் மரமும் முதலியவை, **உற்று அறியும் ஓரறிவு உயிர்** — மெய்யாற் பரிசித்துப் பரிசத்தையறியும் ஓரறிவுயிர்களாம். **எ—று.**

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள் .:—புல் மரம் முதல் — புல்லும் மரமும் முதலியவை, **உற்று அறியும்** — (மெய்யாற்) பரிசித்துப் பரிசத்தை அறிகிற, **ஓர் அறிவு உயிர்** — ஓரறிவு உயிர்களாம். **எ—று**

பொ—ரை.:— புல்லும் மரமும் முதலியன (மெய்யால்) பரிசித்துப் பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்களாம்.

முதல என்பது புதல், கொடி, புழு முதலியன. (பயிலத் தொடுங்கால் புலருமாகலின், இவற்றிற்கு ஓரறிவு உண்மையுணர்க.)

கா.நமச்சிவாய முதலியார்

புல் — புல்லும், **மரம்** — மரமும், **முதல** — முதலியவை, **உற்று அறியும்** — (மெய்யால் பரிசித்துப்) பரிசத்தை யறிகின்ற, **ஓர் அறிவு உயிர்**— ஓரறிவு உயிர்களாம்.

மோசகு பொன்னையா

புல், மரம் முதலியன மெய்யால் உற்றறியும் ஓரறிவுயிர்களாம் எ—று.

(4)

445. [1]**முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.**

முரள் நந்து ஆதி நா அறிவொடு ஈரறிவு உயிர்.

muraḻ nanṭu āṭi nā aṟivotu īraṟivu uyir.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of two senses

Objects such as shell-fish, chank &c., possess the first two senses, viz., touch and taste.

ஒப்புமைப் பகுதி

நந்தும் முரளும் ஈரறவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 573)

மயிலை நாதர்

எ–ன், ஈரறிவுயிராவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இப்பியும் நந்து முதலானவை மெய்யுடனே நாவானுமறியும் அறிவுடன் ஈரறிவினையுடைய உயிர்களாம், **எ–று.**

சங்கர நமச்சிவாயர்

எ–னின், ஈரறிவுயிர் இவை என **உணர்–ற்று.**

இ–ள்.: இப்பியும் சங்கும் முதலியன கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவால் இரதத்தை அறியும் அறிவொடு ஈரறிவுயிர்களாம், **எ–று.**

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஈரறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

இ–ள்.: முரணந் தாதி – இப்பியும் நந்தும் முதலானவை, **நாவறிவோடு** – மெய்யுற்று அறிதலுடனே நாவாலும் அறியும், **ஈரறிவுயிர்** – ஈரறி வினையுடைய உயிர்களாம், **எ–று.** முரண் என்றது அந்தென்று மாம்.

விசாகப் பெருமாளையர்

இது, ஈரறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது.

பாட வேறுபாடு.:–

1. (1) முறணந்தாதி

(2) உறணந்தாதி

இ—ள்.: முரண்—இப்பியும், **நந்து**—சங்கும், **ஆதி**—முதலியவை, **நாவறிவொடு** – கீழ்ப்போன மெய்யறிவே யன்றி நாவாலிரதத்தையும் அறிகிற, **ஈரறிவுயிர்** – ஈரறியுயிர்களாம், **எ—று.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஈரறிவுயிர்களாவன யாவை?

முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர்.

(முரண் நந்து ஆதீ நா அறிவொடு ஈரறிவு உயிர்.)

இ—ள்.:– இப்பியுஞ் சங்கும் முதலியவை கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவா லிரதத்தையறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம். **எ—று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, ஈரறிவுயிரிவை யென்கின்றது.

இ—ள்.:– **முரள்** – இப்பியும், **நத்தாதி** – சங்கும் முதலியன, **நாவறிவோடு** – கீழ்போன ஓரறிவையுங் கொண்டு நாவால் இரசத்தையறிபுமறிவோடு, **ஈரறிவுயிர்** – ஈரறிவுயிர்களாம், **எ—று.**

ஆறுமுக நாவலர்

இ—ள்.:– **முரள் நந்து ஆதி** – இப்பியுஞ் சங்கும் முதலியவை, **நா அறிவொடு ஈரறிவு உயிர்** – கீழ்ப்போன மெய்யறிவே யன்றி நாவாலிரசத்தை யறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம், **எ—று.**

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:– **முரள் நந்து ஆகி** – இப்பியுஞ் சங்கும் முதலியவை, – **நா அறிவோடு ஈரறிவு உயிர்** – கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவாலிரதத்தையறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம். **எ—று.**

வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: முரண் – சிப்பியும், **நந்து** – சங்கும், **ஆதி** – முதலியவை, **நா அறிவொடு** – (கீழ்ப்போன ஓரறிவுடனே) நாவினால் ரசத்தையும் அறிகிற அறிவோடு, **ஈர் அறிவு உயிர்** – இரண்டறிவுடைய உயிர்களாம்; **எ—று.**

> ஆதி—கிளிஞ்சில் முதலியன. இவை பிறிதொன்று தாக்கியவழி
> அறிதலும், இரைசுவைகொள்ளுதலு முடைமையின், மெய்யுணர்
> வோடு நாவுணர்வும் உடையனவாம்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: **முரன்**–இப்பியும், **நந்து**–சங்கும், **ஆதி** – முதலியவை, **நா அறிவொடு** – கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவா லிரதத்தையறியும் அறிவோடு, **ஈரறிவு உயிர்** – ஈரறிவுயிர்களாம். எ–று.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– **முரண் நந்து ஆதி** – இப்பியும் சங்கும் முதலியவை, **நாவு அறிவொடு** – (கிழ்ப்போன மெய்யறிவே யன்றி) நாவல் இரசத்தையும் அறிகிற அறிவுடனே, **ஈர் அறிவு உயிர்** – ஈரறிவுயிர்களாம். எ–று

பொ–ரை.:– இப்பியும் சங்கும் முதலியன(கீழ்ப்போன மெய்யறிவே யன்றி) நாவால் இரசத்தை அறியும் அறிவோடு ஈரறிவுயிர்களாம்.

ஆதி என்பது கிளிஞ்சில் முதலியன. (இவை பிறிதொன்று தாகியவழி அறிதலும் இரைச்சுவை கொள்ளுதலு முடைமையின், மெய்யுணர்வோடு நாவுணர்வும் உடையனவாம்.)

கா.நமச்சிவாய முதலியார்

முரள் – இப்பியும், **நந்து** – சங்கும், **ஆதி** – முதலியவை, **நா அறிவொடு** – (கீழ்ச் சொன்ன மெய்யறிவேயன்றி) நாவாலே சுவையையும் அறிகின்ற அறிவோடு, **ஈர் அறிவு உயிர்** – ஈரறிவு உயிர்களாம்.

மோசசு பொன்னையா

இப்பி, சங்கு முதலியன உற்றறிவோடு நாவல் சுவைத்தும் அறிவும் ஈரறிவுயிர்களாம் எ–று.

(5)

446. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூ அறிவு உயிர்.

sital erumpu āti mūkku arivin mū arivu uyir.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of three senses

Objects like White-ants, ants and other (creeping things) possess the first three senses, viz., touch, taste and smell.

ஒப்புமைப் பகுதி

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 574)

மயிலை நாதர்

எ–ன், மூவறிவுயிராவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– கறையானையும் எறும்பையும் முதலாகவுடையன, கீழிலிரண் டொடு மூக்கானுமறியும் அறிவுடன் மூவறிவுடைய உயிர்களாம், எ–று.

இன்னை ஒடுப்பொருளிற் கொள்க.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், மூவறிவுயிர் இவை என உணர்–ற்று.

இ–ள்.:– கறையானும் எறும்பும் முதலியன கீழ்ப்போன இரண்டு அறிவுகளே யன்றி மூக்கால் கந்தத்தையும் அறியும் அறிவினொடு மூவறிவுயிர்களாம், எ–று.

மேல் ஒடுவை ஈண்டும் வருவித்துக் கொள்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மூவறிவுயிர் ஆமாறு கூறகின்றது,

இ–ள்.:– **சிதலெறும் பாதி** – கறையானையும் எறும்பையும் முதலாக வுடையன, **மூக்கறிவின்** – முற்கூறிய இரண்டினொடு மூக்காலும் அறியும், **மூவறிவுயிர்**– மூவறிவையுடைய உயிர்களாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இது, மூவறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது.

இ–ள்.: **சிதல்** – கறையானும், **எறும்பு** – எறும்பும், **ஆதி** – முதலியவை, **மூக்கறிவின்** – கீழ்ப்போன இரண்டறிவுகளே யன்றி மூக்காற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, **மூவறிவுயிர்**– மூவறி வுயிர்களாம், எ–று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மூவறிவுயிர்களாவன யாவை?

சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.

(சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின் மூவறிவு உயிர்.)

இ–ள்.:– கறையானும் எறும்பும் முதலியவை கீழ்ப்போன இரண்டறிவுகளே யன்றி மூக்காற் கந்தத்தையறியும் அறிவோடு மூவறிவுயிர்களாம். எ–று.

முகவை இராமானுச கவிராயர்

இது, மூவறி வுயிரிவையென்கின்றது.

இ–ள்.:– செல்லும் எறும்பும் முதலியன கீழ்ப்போன இரண்டறிவையுங் கொண்டு மூக்கினாலே கந்தத்தையறியும் அறிவொடு மூவறிவுயிர்களாம், எ–று.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **சிதல் எறும்பு ஆதி** – கறையானும் எறும்பும் முதலியவை, **மூக்கு அறிவின் மூவறிவு உயிர்** – கீழ்ப்போன இரண்டறிவுகளே யன்றி மூக்காற் கந்தத்தை யறியும் அறிவோடு மூவறிவுயிர்களாம், எ–று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.;– **சிதல் எறும்பு ஆதி** – கறையானும் எறும்பும் முதலியவை, **மூக்கு அறிவின் மூவறிவு உயிர்** – கீழ்ப்போன இரண்டறிவுகளே யன்றி மூக்காற் கந்தத்தையறியும் அறிவோடு மூவறிவுயிர்களாம். எ – று.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **சிதல்** – செல்லும், **எறும்பு** – எறும்பும், **ஆதி** – முதலியவை, **மூக்கு அறிவின்** – (கீழ்ப்போன இரண்டறிவுகளுடனே) மூக்கினாற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, **மூ அறிவு உயிர்**– மூன்றறிவுடைய உயிர்களாம்.

ஆதி –ஈயல் மூதா, அட்டை முதலியன. இவை உற்றுணர்ந்து மீளுதலும், நாச்சுவை கொள்ளுதலும் இரையுள்வழி மோந்தறிதலும் என மூன்றறிவினை யுடையவாறு கண்டு கொள்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: **சிதல் எறும்பு ஆதி**–கறையானும் எறுமபும் முதலியவை, **மூக்கு அறிவின்** – கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி மூக்காற் கந்தத்தையறியும் அறிவோடு, **மூவறிவு உயிர்** – மூவறிவுயிர்களாம். எ–று.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ–ள்.:– **சிதல் எறும்பு ஆதி** – கறையானும் எறும்பும் முதலியவை, **மூக்கு அறிவின்** – (கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி) மூக்காற் கந்தத்தையும் அறிகிற அறிவோடு, **மூவறிவு உயிர்** – முவறிவுயிர்களாம். எ–று

(பொ–ரை.) கறையானும் எறும்பும் முதலியன (கீழ்ப்போன இரண்டறிவகளேயன்றி) மூக்கினால் கந்தத்தை அறியும் அறிவினோடு மூவறிவுயிர்களாம்.

ஆதி என்பது ஈயல், மூதா, அட்டை முதலியன. (இவை உற்றுணர்ந்து மீளுதலும், நாச்சுவை கொள்ளுதலும், இரையுள்வழி மோந்தறிதலும் என மூன்றறிவினை யுடையவாறு கண்டுகொள்க.)

கா.நமச்சிவாய முதலியார்

சிதல்– கரையானும், **எறும்பு** – எறும்பும், **ஆதி** – முதலியவை, **மூக்கு அறிவின்** – (கீழ்ச்சொன்ன இரண்டு அறிவுகளேயன்றி) மூக்காலே மணத்தையும் அறிகின்ற அறிவோடு, **மூவறிவு உயிர்** – மூவறிவு உயிர்களாம்.

மோசசு பொன்னையா

கறையான், எறும்பு முதலான உற்றுச் சுவைத்து அறிதவோடு மூக்கால் மணநுகரும் அறிவையும் பெற்ற மூவறி வுயிர்களாம் எ–று.

(6)

447. [1]தும்பிஞெண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்

தும்பி ஞெண்டு ஆதி கண் அறிவினால் அறி உயிர்

ṭumpi vaṇtu āṭi kaṇ aṟiviṉ nāl aṟivu uyir.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of four senses

Objects like the bee, beetle, and other (winged insects) possess the first four senses, viz, touch, taste, smell and sight.

ஒப்புமைப் பகுதி

நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 575)

மயிலை நாதர்

எ–ன், நானகறிவுயிராவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– தும்பியும் [2]ஞெண்டு முதலான உயிர்கள் மேலனவற்றோடு கண்ணானு மறியும் அறிவுடன் நான்கறிவு உயிர்களாம், எ–று.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், நாலறிவுயிர் இவை என உணர்–ற்று.

இ–ள்.:– தும்பியும் வண்டும் முதலியன கீழ்ப்போன மூன்று அறிவேயன்றிக் கண்ணால் உருவத்தை அறியும் அறிவினொடு நாலறிவுயிர்களாம், எ–று.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், நாலறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

இ–ள்.:– தும்பிவண் டாதி – தும்பியையும் வண்டையும் முதலாக

பாட வேறுபாடு.:–

1.தும்பிவண்டாதி

2. வண்டுமுதலான

வுடையவை, **கண்ணறிவின்** – முற்கூறிய மூன்று அறிவினோடுங் கண்ணாலும் அறியும், **நாலறிவுயிர்** – நாலறிவுயிர்களாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இது, நாலறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது.

இ–ள்.:– தும்பி – தும்பியும், **வண்டு** – வண்டும், **ஆதி** – முதலியவை, **கண்ணறிவின்** – கீழ்ப்போன மூன்றறிவுகளே யன்றிக் கண்ணால் உருவத்தையும் அறிகிற வறிவோடு, **நாலறிவுயிர்**– நாலறி வுயிர்களாம், எ–று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

நான்கறிவுயிர்களாவன யாவை?

தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்.

(தும்பி வண்டு ஆதி கண் அறிவின் நாலறிவு உயிர்.)

இ–ள்.:– தும்பியும் வண்டும் முதலியவை கீழ்ப்போன மூன்றறிவுயிர்களே யன்றிக் கண்ணால் உருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம். எ–று.

முகவை இராமானுச கவிராயர்

இ–ள்.:– **தும்பியும் வண்டும்** – முதலியின கீழ்ப்போன மூன்றறிவையுங் கொண்டு கண்ணாலுருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம், எ–று. தும்பி வண்டினுள் ஓர்சாதி

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– தும்பி வண்டு ஆதி – தும்பியும் வண்டும் முதலியவை, **கண் அறிவின் நாலறிவு உயிர்** – கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக் கண்ணால் உருவத்தை யறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம், எ–று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **தும்பி வண்டு ஆதி** – தும்பியும் வண்டும் முதலியவை, – **கண் அறிவின் நாலறிவு உயிர்** – கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக் கண்ணால் உருவத்தையறியும் அறிவோடு நாலறிவுயிர்களாம். எ–று.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– தும்பி – தும்பியும், **வண்டு** – வண்டும், **ஆதி**–முதலியவை, **கண் அறிவின்** (கீழ்ப்போன மூன்றறிவுகளுடனே) கண்ணால் ரூபத்தையும் அறிகிற அறிவோடு, **நால் அறிவு உயிர்**– நான்கறிவுடைய உயிர்களாம்; எ–று.

தும்பி – வண்டுகளில் ஒரு சாதி. ஆதி–நண்டு, தேனீ முதலியன. இவை மெய்யுடைமையின் ஊற்றுணர்வும், இரை கொள்ளு தலின் நாவுணர்வும், நாற்றங் கொள்ளுதலின் மூக்குணர்வும், கண்

உடைமையின் கண்ணுணர்வும் உடையனவாயின. சிறுபான்மை தும்பிக்குச் செவியறிவும் உண்டென்பர்.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.: தும்பி வண்டு ஆதி – தும்பியும் வண்டும் முதலியவை, கண் அறிவின் – கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக் கண்ணால் உருவத்தையறியும் அறிவோடு, நாலறிவு உயிர் – நாலறிவுயிர்களாம். எ—று.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.:– **தும்பி வண்டு ஆதி** – தும்தியும் வண்டும் முதலியவை, **கண் அறிவின்** – (கீழ்ப்போன மூன்றறிவுகளேயன்றிக்) கண்ணால் உருவத்தை அறிகிற அறிவோடு, **நால் அறிவுஉயிர்** – நாலறிவு உயிர்களாம். எ—று

பொ—ரை.:– தும்பியும் வண்டும் முதலியன (கீழ்ப்போன மூன்றறிவுகளே யன்றிக்) கண்ணால் உருவத்தை அறியும் அறிவினோடு நாலறிவுயிர்களாம்.

தும்பி – வண்டுகளில் ஒரு சாதி. ஆதி என்பது நண்டு, தேனீ முதலியன.

கா.நமச்சிவாய முதலியார்

தும்பி – தும்பியும், **வண்டு** – வண்டும், **ஆதி** – முதலியவை, **கண் அறிவின்** – (கீழ்ச்சொன்ன மூன்று அறிவுகளேயன்றிக்) கண்ணாலே உருவத்தையும் அறிகின்ற அறிவோடு, **நால் அறிவு உயிர்** –நாலறிவு உயிர்களாம்.

மோசசு பொன்னையா

தும்பி, வண்டு முதலியன உற்றுச் சுவைத்து முகர்ந்து அறிதலோடு காட்சி யறிவையும் பெற்ற நாலறிவுயிர்களாம் எ—று.

(7)

**448. வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோ டையறி வுயிரே**

**வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்
ஆதி செவி அறிவோடு ஐ அறிவு உயிரே**

vāṉavar makkaḷ narakar vilaṅku puḷ
āṭi sevi aṟivu ōtu ai aṟivu uyirē

இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of five senses

Celestials, men, infernals, beasts, birds, &c., possess all the five senses, viz., touch, taste, smell, sight, and hearing.

ஒப்புமைப் பகுதி

மாவும் புள்ளும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 576)

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

(தொல். பொருள்.: 577)

ஒருசார் விலங்கும் உளவென மொழிப

(தொல். பொருள்.: 578)

மயிலை நாதர்

எ–ன், ஐயறிவு உயிராவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவை மேலனவற்றோடு செவியானும் அறியும் அறிவுடன் ஐந்தறிவினை யுடைய உயிர்களாம், எ–று.

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே மூன்றறி வதுவே
யவற்றொடு மூக்கே நான்கறி வதுவே யவற்றொடு
கண்ணே ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே"

"புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே",

"நந்து முரளு மீரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

"சிதலு மெறும்பு மூவறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

"ஞெண்டுந் தும்பியு நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

[2]"மாவு மாக்களு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

(மரபியல் 27–32)

என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரு மென்க.

அஃதேல், அவர் ஆறறிவுயிரும் ஒன்றுண்டென்றாராலோ

வெனின், அவர் மனத்தையும் ஒரு பொறியாக்கி, அதனான் உணருமக்களையும் விலங்கினுள் ஒருசாரனவற்றையும் ஆறறிவுயிரென்றார். இவர் அம் மனக்காரிய மிகுதி குறைவாலுள்ள வாசியல்லது அஃது எல்லாவுயிர்க்கும் உண்டென்பார் மதம்பற்றி இவ்வாறு சொன்னாரென்க.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், ஐயறிவுயிர் இவை என உணர் — ற்று.

இ—ள்.:— வானவரும் மக்களும் நரகரும் விலங்கும் புள்ளும் முதலியன கீழ்ப்போன நாலறிவேயன்றிச் செவியால் சத்தத்தை அறியும் அறிவினொடு ஐயறிவுயிர்களாம், **எ—று.**

சித்துப்பொருள் சடப்பொருள் என்பார் உயிருயிரல்லதாம் பொருள் எனக் கூறியவாறும், சித்தாகிய உயிரறிவு சடமாகிய உடலோடு கூடிய விழியன்றி நிகழாமையானும் அந்நிகழ்ச்சி கண்டல்லது உயிருண்டு என்பதூஉம் அதற்கோர் அறிவுண்டு என்பதூஉம் தோன்றாமையானும் உயிரைப் பிரித்து ஓதாது உடலோடு கூட்டிப் 'புல் மரம் முதல்' (445) என முறையே கூறியவாறும், அவ்வுயிரறிவு உடலோடு கூடிநிகழ்வழி ஐம்பொறி யானும் ஐந்தாய் நிகழ்தலின் ஐயறிவு எனக் கூறியவாறும், இவ் ஐம்பொறியும் எல்லா உடற்கண்ணும் ஒருங்கு நில்லாது இங்ஙனம் கூறிய முறையே நின்று அறிவை நிகழ்த்தலின் உயிர்கள் பலவாயினும் அறியும்வகையான் உயிர் ஐந்து எனக் கூறியவாறும் காண்க.

ஆசிரியர் தொல்காப்பியர் "மக்கள் தாமே ஆறறிவுயிரே" எனக் கூறியிருக்கு, மக்கள் முதலியோரை ஐயறிவுயில் எனக் கூறல் மாறுகொளக் கூறலாம் பிறவெனின், மக்கள் முதலியோர் மன அறிவோடு ஆறறிவுயிர் என்பது நோக்கியன்றே முன்னர் "மக்கள் தேவர் நரகர் உயர்திணை" (261) எனக் கூறிப் போந்ததூஉம்; ஆதலின் இங்ஙனம் ஐம்புலன் மாத்திரையே நுகரும் அறிவுரைய மக்கள் முதலியோரை விலங்கு முதலியவற்றோடு எண்ணி ஐயறிவுயிர் எனக் கூறினார் என உய்த்துணர்ந்து கொள்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், ஐயறிவுயிர் ஆமாறு கூறுகின்றது.

இ—ள்.:— வானவர் மக்கள் — தேவரையும் மக்களையும், **நரகர் விலங்கு** — நரகரையும் விலங்கையும், **புள் ஆதி** — புள்ளையும் முதலாகவுடையவை, **செவியறிவொடு** — முற்கூறிய நாலறிவினோடுஞ் செவியாலும் அறியும், **ஐயறிவுயிரே** — ஐந்தறிவினையுடைய உயிர்களாம், **எ—று.**

விசாகப் பெருமாளையர்

இது, ஐயறிவுயிர்கள் இவையென உணர்த்துகின்றது.

இ–ள்.: **வானவர்** – தேவரும், **மக்கள்** – மனிதரும், **நரகர்** – நரகரும், **விலங்கு** –மிருகங்களும், **புள்** – பறவைகளும், **ஆதி**– முதலியவை, **செவியறிவோடு** – கீழப்போன நாலறிவுயிர்களே யன்றிச் செவியாற் சத்தத்தையும் அறிகிற அறிவோடு, **ஐயறிவுயிர்** – ஐயறிவுயிர்களாம், எ–று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஐயறிவுயிர்களாவன யாவை?

வானவர் மக்க ணரகர் விலங்குபுள்
ஆதிசெவி யறிவோ டையறி வுயிரே.

(வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி செவி அறிவோடு ஐயறிவு உயிரே.)

இ–ள்.:– தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச் செவியாற்சத்தத்தையறியும் அறிவோடு ஐயறிவுயிர்களாம். எ–று.

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரல்பொருளிவை யென்கின்றது.

இ–ள்.: **உணர் வியலாமுயிரொன்று மொழித்த** – அறிவு மயாகிய வுயிரொன்றையு நீக்கியுள்ள, **உடன் முதலனைத்து முயிரல் பொருளே**– உடம்பும் முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம், எ–று.

> முன்னேயுயிர்மாத்திரமே கூறுவார் உடம்பொடு கூட்டிக் கூறிய தல்லது உடம்பையுங் கூட்டி யுயிர்ப்பொருளென் றாரல்லரென்பது இதினாலே பெறப்பட்டது. அனைத்தும் பொருளென முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி** – தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை, **செவி அறிவோடு ஐயறிவு உயிர்**– (கீழ்ப்போன நாலறிவுகளே யன்றிச்) செவியால் சத்தத்தையறியும் அறிகிற அறிவோடு, ஐயறிவுயிர்களாம், எ–று.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– **வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி** – தேவரும் மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை, **செவி அறிவோடு ஐயறிவு உயிர்** – கீழ்ப்போன நாலறிவுகளே யன்றிச் செவியாற் சத்தத்தையறியும் அறிவோடு ஐயறிவுயிர்களாம். எ–று.

ஆசிரியர் தொல்காப்பியனார் (சூத்.) மக்கடாமே யாறறிவுயிரே. எனக் கூறியிருக்க இவர் ஐயறிவுயிரெனக் கூறுதல் மாறுகொளக் கூறலாமெனின்; அன்றென்க.

பொறிகள் ஐந்து புலன்கள் ஐந்தாதலின் அறியும் வகையால் உடலறிவு முதற்செவியறிவீறாக உயிர் ஐவகையாயின வென்றது மனவறிவை நீக்கி யன்றோ அதனைக் கூட்டுங்கால் ஆறறிவுயிர் மக்கண் முதலியோ ரென்பது இவர்க்கும் உடன்பாடாதலாலென்க. இங்கே மக்கண் முதலியோரை, "வானவர்மனிதர் கீழ்போய் மாழ்கியநரகரோடு" கானுறு விலங்கு புள்ளுக்கருது நாலறிவி னோடே, யூனமில் செவியுமாங்கே யுறலினை யறிவிற் சீவன், மானமர் நோக்கினல்லாய் மனமுமொன்றதிகமாமே." எனக்கூறிய மண்டலபுருடர் போல மிருக முதலியவற்றோடு கூட்டி யெண்ணி ஐயறிவுயிரென்றார்.

வை.மு சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: வானவர் – தேவரும், **மக்கள்** – மனிதரும், **நரகர்** – நரகரும், **விலங்கு** – மிருகங்களும், **புள்** – பறவைகளும், **ஆதி**– முதலியவை, **செவி அறிவோடு** – கீழ்ப்போன நாலறிவுகளுடனே செவியால் சப்தத்தையும் அறிகிற அறிவோடு, **ஐ அறிவு உயிர்**– ஐந்தறிவுடைய உயிர்களாம்; **எ—று.**

ஆதி பாம்பு முதலியன. '**நாகர்**' என்றும் பாடங்கொள்ளலாம். இப்பிராணிகள் ஐந்தறிவுயிராதல் வெளிப்படை.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:– வானவர் மக்கள் நரகர் விலங்கு புள் ஆதி – தேவரும மனிதரும் நரகரும் மிருகங்களும் பறவைகளும் முதலியவை, **செவி அறிவோடு** – கீழ்ப்போன நாலறிவுகளேயன்றிச் சொவியாற் சத்தத்தையறியும் அறிவோடு, ஐயறிவு உயிர் – ஐயறிவுயிர்களாம். **எ—று.**

கா.நமச்சிவாய முதலியார்

வானவர் – தேவரும், **மக்கள்** – மனிதரும், **நரகர்** – நரகரும், **விலங்கு** – மிருகங்களும், **புள்** – பறவைகளும், **ஆதி** – முதலியவை, **செவி அறிவோடு** (கீழ்ச்சொன்ன நாலறிவுகளே யன்றிச்) செவியாலே சத்தத்தையும் அறிகின்ற அறிவோடு, **ஐயறிவு உயிர்** – ஐயறிவு உயிர்களாம்.

மோசகு பொன்னையா

வானவர், மக்கள், நரகர், விலங்கு, பள் முதலியன உற்று சுவைத்து முகர்ந்து கண்டு அறிதலோடு கேட்டறியும் அறிவையும் பெற்ற ஐயறிவுயிர்களாம். எ—று.

ஓரறிவுயிர் முதல் ஐயறிவுயிர் ஈறாக நெறிப்படுத்தியும்,[1] அவற் றிற்கு உரியவை இவையிவை யென வகைப்படுத்தியும்[2] தொல் காப்பியர், மரபியலிற் கூறி,

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே,[3]

என ஆறறிவுயிருக்கும் இலக்கணம் ஓதினார். மயிலைநாதர், அவர் (தொல்காப்பியர்) மனத்தையும் ஒரு பொறியாக்கி, அதனான் உணரு மக்களையும் விலங்கினுள் ஒரு சாரனவற் றையும் ஆறறிவுயிரென்றார்; இவர் (நன்னூலார்) அமமனக் காரிய மிகுதிக் குறைவாலுள்ள வாசியல்லது அஃது எல்லாவுயிர்க்கும் உண்டென்பார் மதம் பற்றி இவ்வாறு சொன்னாரென்க என்றார். உலகத்து உயிர்த்தொகுதிகளைப் பெறியுணர்வு பற்றி ஓரறிவுயிர் முதலாக ஐயறிவுயி ரிறுதியாகப் பகுப்பது சயினமுறை எனவும், மனத்தோடு ஆறறிவுயிரெனல் வைதிகமுறையெனவும் கொள் வாருமுண்டு. திருவள்ளுவர்,

கொலை வினைய ராகிய மாக்கள்,[4]

ஐயுணர்வின் மாக்கள்,[5]

அறிவறிந்த மக்கள்,[6]

விலங்கொடு மக்க ளனையர்,[7]

மக்களே போல்வர் கயவர்,[8] என மக்களை ஐயறிவாட்சி பற்றி மாக்களெனவும், மனத்தாட்சி பற்றி மக்கள் எனவும், வேறு பிரித்துக் குறியிட்டாண்டுள்ளமை மனங்கொளற் பாலது.

(8)

குறிப்புகள்.:–

1. **தொல். மரபியல். 27;**
2. **தொல். மரபியல். 28–32;**
3. **தொல். மரபியல். 33;**
4. **குறள் 379;**
5. **குறள்.420,**
6. **குறள் 61,**
7. **குறள் 410;**
8. **குறள் 1071.**

449. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த
உடன்முத லனைத்து[1]முயிரில் பொருளே.

உணர்வு இயலாம் உயிர் ஒன்றும் ஒழித்த
உடன் முதல் அனைத்தும் உயிர் இல் பொருளே

uṇarvu iyalām uyir oṉṟum oḻitta
uṭal mutal aṉaittum uyir al poruḷē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Creatures of five senses

Celestials, men, infernals, beasts, birds, &c., possess all the five senses, viz., touch, taste, smell, sight, and hearing.

மயிலை நாதர்

எ—ன், உயிரில் பொருளாவன உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— அறிவுமயமாயுள்ள உயிரொன்றையு மொழிந்து நின்ற உடம்பு முதலான உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரில் பொருள்களாம், எ—று.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், உயிரல் பொருளாவன இவை என **உணர்—**ற்று.

இ—ள்.:— அறிவுமயமாம் உயிர் ஒன்றுமே அன்றி அவ்வுடம்பு முதலிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம், எ—று.

முன்னர் உயிர்மாத்திரையே கூறுவார் உடம்பொடு கூட்டிக் கூறினார் அன்றி உடம்பையும் உளப்படுத்தி உயிர்ப்பொருள் என்றார் அல்லர் என்பது இதனான் உணர்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், உயிரில் பொருளாவது இன்னதெனக் கூறுகின்றது.

இ—ள்.:— உணர்வியலாமுயிர் — அறிவு மயமாயுள்ள உயிர், **ஒன்று மொழித்த** — ஒன்றையும் ஒழித்து ஒழிந்து நின்ற, **உடன்முத லனைத்தும்** — உடம்பும் முதலான உலகத்துப் பொருள்கள் எல்லாம், **உயிரில் பொருளே** — உயிர் இல்லாத பொருள்களாம், எ—று.

விசாகப் பெருமாளையர்

இது, உயிரல்லாத பொருள்கள் இவையென உணர்த்துகின்றது.

பாட வேறுபாடு.:—

1.உயிரல்பொருளே

இ—ள்.:— **உணர்வியலாம்** – அறிவுமயமாகிய, **உயிரொன்று மொழிந்த** – உயிரொன்றுமே யன்றி, **உடன்முதல்** – உடம்பு முதலாகிய, **அனைத்தும்** – உலகத்துப் பொருள்களெல்லாம், **உயிரலபொருள்** –உயிரல்லாத பொருள்களாம், எ—று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சடப்பொருளாவன யாவை?

உணர்விய லாமுயி ரொன்று மொழித்த

உடன்முத லனைத்து முயிரல் பொருளே.

(உணர்வு இயல் ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த உடல் முதல் அனைத்தும் உயிர் அல்பொருளே.)

இ—ள்.:— அறிவுமயமாகிய உயிரொன்றுமேயன்றி உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ—று.

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரல் பொருளிவை யென்கின்றது.

இ—ள்.:— **உணர்வியலா முயிரொன்று மொழித்த** – அறிவு மயமாகிய வுயிரொன்றையு நீக்கியுள்ள, **உடன்முதலனைத்து முயிரில் பொருள்**– உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம், எ—று.

முன்னே யுயிர் மாத்திரமே கூறுவார் உடம்பொடு கூட்டிக் கூறியதல்லது உடம்பையுங் கூட்டியுயிர்ப் பொருளென்றாரல்ல ரென்பது இதினாலே பெறப்பட்டது – அனைத்தும் பொருளென முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:— **உணர்வு இயல் ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த** – அறிவு மயமாகிய உயிரொன்று மேயன்றி, **உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருள்** – உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம், எ—று.

வ. குமாரசாமிப்புலவர்

இ—ள்.:— **உணர்வு இயல்ஆம் உயிர் ஒன்றும் ஒழித்த** – அறிவு மயமாகிய உயிரொன்றுமேயன்றி, – **உடல் முதல் அனைத்தும் உயிர் அல் பொருள்** – உடம்பு முதலாகிய உலகத்துப் பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ—று.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— **உணர்வு இயல் ஆம்** – அறிவுமயமாகிய, **உயிர் ஒன்றும்** – சீவன் ஒன்றையும், **ஒழித்த** – நீக்கியுள்ள, **உடல் முதல்** – உடம்பு முதலாகிய, **அனைத்தும்**

– (உலகத்துப்) பொருள்களெல்லாம், **உயிர் அல் பொருள்** – உயிருடையனவல்லாத பொருள்களாம்; எ–று.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– **உணர்வு, இயல் ஆம்** – அறிவுமயமாகிய, **உயிர் ஒன்றும் ஒழித்த** – உயிரொன்றுமேயன்றி, **உடல் முதல் அனைத்தும் உயிர் அல்பொருள்** – உடம்பு முதலாகிய உலகத்துப்பொருள்களெல்லாம் உயிரல்லாத பொருள்களாம். எ–று.

கா.நமச்சிவாய முதலியார்

உணர்வு இயல் ஆம்– அறிவு வடிவாகிய, **உயிர் ஒன்றும் ஒழித்த** – உயிரொன்றுமே அல்லாத, **உடல் முதல்** – உடம்பு முதலாகிய, **அனைத்தும்** – உலகத்துப் பொருள்களெல்லாம், **உயிர் அல் பொருள்** – உயிரல்லாத பொருள்களாம்.

மோசசு பொன்னையா

உணர்தல் இயல்புடைய உயிர் ஒன்றையும் நீங்கப் பெற்ற உடம்பு முதலாகிய அனைத்துப் பொருள்களும் உயிரில் பொருள்களாம் எ–று.

(9)

450. ஒற்றமை நயத்தி னொன்றெனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்

ஒற்றமை நயத்தின் ஒன்று எனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர்

oṟṟamai nayattiṉ oṉṟu eṉat tōṉṟiṉum
vēṟṟumai nayattiṉ vēṟē utal uyir.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Special rule

Though the body and soul may appears as one by reason of their intimate connection, yet are they diverse by reason of the real difference (that exists between their respective qualities)

மயிலை நாதர்

எ–ன், மேலதற்கு ஒருபுறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– ஒன்றுபட்ட தன்மையான் ஒன்றுபோலத் தோன்றுவன வாயினும் வேறுபட்டதன்மையான் உடலும் உயிரும் தம்முள் வேறாம், எ–று.

இஃது என்னை சொன்னவாறோவெனின், மேல் புல்மர முதல

உற்றறியும் ஓரறிவுயிரென்றற் றொடக்கத்தன வானவற்றையே உயிராக ஒற்றுமை பற்றிச் சொன்னாரெனினும் அவ்வுடல் களும் வேறே; உயிர்களும் வேறே யேன்றவாறென்க.

ஏகாரம் தேற்றேகாரம்.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், மேலதற்கோர் புறனடை **உணர்–ற்று.**

இ–ள்.:– பசுவுடம் பெடுத்துழித் தன் கன்றினுக்கு இரங்கி நன்கிழைத்த உயிர் அவ்வுடம்பு நீங்கிப் புலியுடம்பு எடுத்துழி இரங்காது அக்கன்றினுக்கே தீங்கு இழைக்குமாதலின் எவ்வுயிர் எவ்வுடம்பு எடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும் ஒற்றுமைநயம் கருதியவழி ஒன்றுபோல் தோன்றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி அவ்விரண்டும் தம்முள் வேறாம் ஆதலின் உயிரோடு கூடிநின்ற காலத்தும் அவ்வுடம்பினை உயிரல்பொருள் என்றாம், **எ–று.**

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மேலதற்கோர் புறநடை கூறுகின்றது.

இ–ள்.:– ஒற்றுமை நயத்தின் – ஒன்றுபட்ட தன்மையால், **ஒன்றெனத் தோன்றினும்** – ஒன்றுபோலத் தோற்றுவன ஆயினும், **வேற்றுமை நயத்தின்** – வேற்றுமைப் பட்ட தன்மைகளால், **வேறே யுடலுயிர்** – உடம்பும் உயிரும் தம்முள் வேறேயாம், **எ–று.**

புல் மரம் முதலானவை அறிவுடலும் உயிரும் அவ்வாறாம் என்க.

விசாகப் பெருமாளையர்

இது, முன்னதற்கு ஓர் புறனடை யுணர்த்துகின்றது.

இ–ள்.:– ஒற்றுமைநயத்தின் – எவ்வுயிர் எவ்வுடம்பை யெடுத்ததோ அவ்வுடம்பின்மயமாய் நிற்கிற ஒற்றுமைநயங் கருதியவழி, **ஒன்றென**–ஒன்றுபோல, **தோன்றினும்**–தோன்று மாயினும், **வேற்றுமைநயத்தின்** – உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கிற வேற்றுமை நயமாகிய வுண்மை கருதியவழி, **உடலுயிர்** – அவ்வுடலும் உயிரும் வேறு வேறாம், **எ–று.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உடலுமுயிரும் வேறுவேறென்பது எவ்வாறு துணியப்படும்?

ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்
வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர்.

(ஒற்றுமை நயதத்தின் ஒன்று எனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறே உடல் உயிர்.)

இ—ள்.: எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும் ஒற்றுமைநயங் கருதியவழி ஒன்றுபோற்றொன் றுமாயினும் உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி அவ்வுடலு முயிரும் வேறாம். **எ—று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, மேலதற்கோ புறனடை யுணர்த்திற்று.

இ—ள்.:— பசுவுடம் பெடுத்தபோது தன் கன்றினுக் கிரங்கி நலஞ் செய்த அவ்வுயிர் புலியுடம் பெடுத்தபோது இரக்கமின்றி அந்தக் கன்றினுக்கே தீங்கு செய்யுமாதலால் எந்தவுயிர் எந்த உடம் பெடுத்ததோ அந்த உடம்பின் மயமாய்நிற்கும் ஒருமைப்பாட்டு நியாயங் குறித்தபோது ஒன்று போலத் தோன்றுமாயினும், (உயிர்ச்சித்துப்பொருளாகியும் உடம்புசடப் பொருளாகியும் நிற்கும் வேறுபாட்டு நியாயமாகிய உண்மை குறித்தபோது அந்த இரண்டும் தம்முள் வேறாமாதலின் உயிரொடு கூடிய காலத்தும் அந்தவுடம்பு உயிரல்பொருளெனப்படும், **எ—று.** உடலுயிர் வேறெனமுடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.: **ஒற்றுமை நயத்தின்** — எவ்வுயிர் எவ்வுடம்பை யெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும் ஒற்றுமைநயங் கருதிய வழி, **ஒன்று எனத் தோன்றினும்** — ஒன்றுபோற் றோன்றுமாயினும், **வேற்றுமை நயத்தின்** — உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, **உடல் உயிர் வேறு** — அவ்வுடலுமுயிரும் வேறாம், **எ—று.**

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— **ஒற்றுமை நயத்தின்** — எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின்மயமாய் நிற்கும் ஒற்றுமை நயங்கருதியவழி, — **ஒன்று எனத் தோன்றினும்** — ஒன்று போற்றோன்றுமாயினும், — **வேற்றுமை நயத்தின்** — உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும் வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, — **உடல் உயிர் வேறு** — அவ்வுடலுமுயிரும் வேறாம். **எ—று.**

வை.மு. சடகோபரமானு சாசாரியார்

சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— ஒற்றுமை நயத்தின் — (உயிர் தான் அடைந்த உடம்பின் மயமாய் நிற்கிற) ஒருமைப்பாட்டின் தன்மையால், **ஒன்று என** —(உடம்பும் உயிரும்) ஒன்றுபோல, **தோன்றினும்** — தோன்றினாலும், **வேற்றுமை நயத்தின்**—(உயிர் சித்தாகியும் உடம்பு அசித்தாகியும் நிற்கிற) வேறுபாட்டின் தன்மையால், **உடல் உயிர்** — உடலும் உயிரும், **வேறே** — வேறாகும்; **எ—று.** சித்து, அறியுந்தன்மையுள்ளது. அசித்து, சடம்; அறியுந்தன்மையில்லாதது.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— ஒற்றுமை நயத்தின் – (எவ்வுயிர் எவ்வுடம்பையெடுத்ததோ அவ்வுடம்பின் மயமாய் நிற்கும்) ஒற்றுமைநயங் கருதியவழி, **ஒன்று எனத் தோன்றினும்** – ஒன்றுபோல் தோன்றுமாயினும், **வேற்றுமை நயத்தின்** – (உயிர் சித்தாயும் உடம்பு சடமாயும் நிற்கும்) வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, உடல் உயிர் வேறு – அவ்வுடலும் உயிரும் வேறாம். **எ—று.**

கா.நமச்சிவாய முதலியார்

ஒற்றுமை நயத்தின் – (எவ்வுயிர் எவ்வுடம்பை எடுத்ததோ அவ்வுடம்பின் வடிவாய் நிற்கின்ற) ஒற்றுமை நயங்கருதிவழி, **ஒன்று என** – ஒன்றுபோல, **தோன்றினும்** – தோன்றுமாயினும், **வேற்றுமை நயத்தின்** – வேற்றுமை நயமாகிய உண்மை கருதியவழி, **உடல் உயிர்**– அவ்வுடலும் உயிரும், **வேறே** – வேறேயாம்.

மோசசு பொன்னையா

உயிர் உடலுடன் ஒன்றிநிற்கும் பண்பால் இரண்டும் ஒன்றெனத் தோன்றினாலும், உணர்தல் தன்மையதான உயிரும், உணர்தல் தன்மை யற்ற உடலும் வேறுபாடுடைய தன்மையால் வேறாவனவாம் எ—று.

(10)

451. **அறிவரு ளாசை யச்ச மானம்**
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவர்ப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் [1]பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

அறிவு அருள் ஆசை அச்சம் மானம்
நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் அறம் மதம்
மறவி இனைய உடல்கொள் உயிர்க்குணம்.

aṟivu aruḻ āsai assam māṉam
niṟai poṟai ōrppuk kataippiti maiyal
niṉaivu veṟuppu uvappu irakkam nāṇ vekuḻi

ṭuṇivu aḻukkāṟu aṉpu eḻimai eyṭṭal
ṭuṉpam iṉpam iḷamai mūppu ikal
veṉṟi possāppu ūkkam maṟam maṭam
maṟavi iṉaiya utalkoḷ uyirkkuṇam.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Qualities of living creatures

The following are the principal qualities of the embodie soul: Knowledge, kindness, desire, fear, honour, firmness, patience, discernment, retentiveness, lust, though, aversion, gladness, mercy, shame, anger, clearness, envyt affection, want, weariness, pain, pleasure, youth, old age, hatred, triumph, forgetfulness, courage, presumption, valour and failing.

ஒப்புமைப் பகுதி

அறிவு அருள் ஆசை மானம்
நிறைபொறை ஓர்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண்வெகுளி
துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல்
துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல்
வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம்
மறவி இனைய உடல்கொள் உயிர்க் குணம்

(தொ.வி.: 139: 1–7)

மயிலை நாதர்

எ–ன், உயிர்பண்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– அறிவு முதலான இம் முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடம்பொடு கூடிய உயிர்க்குணமாம், எ–று.

உடம்பொடுகூடிய உயிர்க்குணவமெனவே கூடாவுயிரும் உளவென்பதூஉம் அவை இனைய ல்லவென்பதூஉங் கொள்க.

வ–று.:–

"அறிவுடையாராவ தறிவா ரறிவிலார்
அஃதறி கல்லா தவர்" (குறள் 427)

"அருளிலார்க் கவ்வுலக மில்லை" (குறள் 247)

"ஆசை மாக்களோ டந்தணர்க் காகென" (சீவக. 911)

"கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம்" (நாலடி. 145)

"மானமுடையார் மனம்" (நாலடி. 291)

"நிறையுடைமை நீங்காமை வேண்டிற்
பொறையுடைமை போற்றி யொழுகப் படும்" (குறள். 154)

"ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்,

பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" (குறள். 357)
"அற்ற தறிந்து கடைப் பிடித்து" (குறள். 944)
"மையல் யானையின் மும்மத மார்ந்து" (சீவக. 37)
"நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனும்"(பழ. 102)
"வெறுப்ப வெறுப்பச் செயினும்" (நாலடி. 222)
உறுவர்ப் பேண லுவர்ப்பின்மை"(சீவக. 2816)
"இரக்கமி லுள்ளத் தவர்"
"நாணாமை நாடாமை நாரின்மை" (குறள். 833).
"வெல்வது வேண்டின் வெகுளி விடல்" (நான்மணி. 17)
"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்" (குறள். 671)
"அழுக்கா றெனவொரு பாவி" (குறள்.168)
"அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை"
(குறள். 78) "எளியனென் றெள்ளி யுரைப்பின்" (பு.வெ. 4:24)
"எய்த்த மெய்யே னெய்யே னாகி" (பொருந. 68)
"துன்ப முற்ற வர்கலால் இன்ப மில்லை யாகலினன்ப மற்றி யானுனைத், துன்பத் தாற்றொ டக்கி னேன்" (சீவக. 579)
"இளமை நிலைதளர மூப்போ டிறைஞ்சி" (பு.வெ. 272)
"இகலே துணையா வெரிதவழச் சீறி" (பு.வெ.1 :8)
"வென்றி விளையா விழுமதிலோர்" (பு.வெ. 6:31)
"பொச்சாப்புக் கொல்லும் புகழை" (குறள். 532)
"ஊக்க முடையா னொடுக்கம்" (குறள். 486)
"மறங்கந் தாக வாளமர்" (புறநா. 93)
"மாதர் வாண்முக மதைஇய நோக்கே" (அகநா 130)
"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று" (குறள்.108) எனவும் முறையே காண்க. பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின் உயிரின் குணம் என்றார் அவை இவை என உணர்–ற்று

இ–ள்::– அறிவு முதலிய முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடலோடு கூடிய உயிர்க்குணங்களாம், எ–று.

உடலோடு கூடாவழி உயிர்க் குணங்கள் தோன்றா என்பார் உடல்கொள் உயிர்க்குணம் என்றார். பின் வருவதும் அது.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உடலொடு கூடிய உயிர்ப்பொருட் பண்பு கூறுகின்றது.

இ—ள்.:— அறிவு அறிவுடையா ராவ தறிவார் (குறள். 427) **அருள்—** அருளில்லார்க் கவ்வுலக மில்லை (குறள் 247) **ஆசை** — ஆசை மாக்களோ டந்தணர்க் காகென (சீவக 911) **அச்சம்** — 'கல்லாமை யச்சம் கயவர் தொழிலச்சம்' (நாலடி. 145) **மானம்** — மான முடையார் மனம் (நாலடி 291) **நிறை** — நிறையுடைமை நீங்காமை (குறள் 154) **பொறை—** பொறையுடைமை போற்றி யொழுகப்படும் (குறள்145) ஓர்ப்பு ஓர்த்துள்ள முள்ள துணரின் (குறள் 357), **கடைப்பிடி** — "அற்ற தறிந்து கடைடிபிடித்து" (குறள்944) **மையல்** — "மையல் யானையின் மும்மத மார்ந்து" (சீவக. 37),

நினைவு — நினைத்துதன் கைகுறைத்தான் (பழமொழி 102) **வெறுப்பு** — வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே (நாலடி. 222) **உவப்பு** — பேணலு முவப்பின்மை (சிவக 2816)

இரக்கம் — "இரக்கமிலுள்ளத் தவர்" **நாண்—** "நாணாமை நாடாமை" (குறள் 833) வெகுளி வெல்வது, "வேண்டில் வெகுளி விடல்"(நான்மணி 17) **துணிவு** —சூழ்ச்சி முடிவு "துணிவெய்தல்" (குறள். 671) **அழுக்காற** — "அழுக்காறு றெனவொரு பாவி" (குறள் .168). அன்பு — அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை (குறள்.78) எளிமை— "எளிய **ளென்றெள்ளி யுரைப்பின்**" (பு.வெ.84).

"எய்த்தல் எய்த்த மெய்யேன்" (பொருந 68) "துன்பம் — துன்ப முற்ற வர்க்கலால்" (சீவக 579) இன்பம்— இன்ப மில்லை(சீவக 579) **இளமை** — இளமையானடக்க மடக்கம்— (நாலடி 65)

"**மூப்பு** — மூப்புவந்த தெய்தல், **இகல்** — வலிய லிகலே" **வென்றி—** "வென்றிவிளையா விழுமதிலோர்" (பு.வெ.125) **பொச்சாப்பு** — பொச்சாப்புக் கொல்லும் புகழை (குறள் 532) **ஊக்கம்** — ஊக்க முடையா னொடுக்கம் " (குறள் 486)

மறம் — மறங்கந் தாக வாளமர்(புறம் 93) வாண்முக மதைஇய நோக்கே (அகம் 130), மறவி — மறவியுடையான் மாயந்த தோடோக்கி" **இனைய** —இம் முப்பத்திரண்டும் இவை போல்வன பிறவும், **உடல்கொ ளுயிர் குணம்** —உடம்பொடு கூடிய உயிர்க்குணமாம், எ—று.

உடம்பொடு கூடா உயிர்க்குணம் இவை அல்லவென்க.

விசாகப் பெருமாளையர்

இது, உயிரின் குண மென்றார் அவை யிவையென வுணர்த்துகின்றது.

இ—ள்.:— அறி...மறவி — அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்கிற முப்பத்திரண்டும், **இனைய** — இவைபோல்வன பிறவும், **உடல் கொள்** — உடம்போடுகூடிய, **உயிர்க்குணம்** — உயிர்களினுடைய குணங்களாகும், **எ—று.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிர்க்குணம் யாவை?

அறிவரு ளாசை யச்ச மான
நிறைபொறை யோர்ப்புக் கடைப்பிடி மையல்
நினைவு வெறுப்புவப் பிரக்கநாண் வெகுளி
துணிவழுக் காறன் பெளிமை யெய்த்தல்
துன்ப மின்ப மிளமை மூப்பிகல்
வென்றி பொச்சாப் பூக்க மறமதம்
மறவி யினைய வுடல்கொ ளுயிர்க்குணம்.

(அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி இனைய உடல் கொள் உயிர்க்குணம்.)

இ–ள்.:– அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவியென்னு முப்பத்திரண்டும் இவைபோல்வன பிறவும் உடம்போடு கூடிய உயிர்களினுடையகுணங்களாம். **எ–று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிர்க்குண மென்றவையிவை யென்கின்றது.

இ–ள்.:– அறிவு முதலிய முப்பத்திரண்டு மிவை போல்வனபிறவு முடலொடு கூடியவுயிரின் குணப்பண்புகளாம், **எ–று.**

இவற்றுள் நிறை என்பது மன அடக்கம் ஓர்ப்பு ஆராய்ந்து தெளிதல் கடைப்பிடி மறவாமை, மையல் காமமயக்கம், உவப்பு– மகிழ்ச்சி, துணிவு–தெளிவு அழுக்காறு – பொறாமை, இகல்– பகை, பொச்சாப்பு– மறப்பு, உளக்கம் – மனவெழுச்சி, (தைரியம்) மறம் – வீரம், மறவி–மறந்து செய் யுங்குற்றம், ஒழித்தன பொருள் விளங்கிக் கிடந்தன. உடலொடு கூடாக்கால் உயிர்க் குணங்கள் வெளிப்படா வென்று சொல்ல வந்தவர், உடல் கொளுயிர்க் குண மென்றார், பின்வருதுமஃது, இதன் முடிவு உரையால் விளங்கிற்று.

ஆறுமுக நாலவர்

இ–ள்.: அறிவு.... மறவி – அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி யென்னு முப்பத் திரண்டும், **இனைய** – இவை போல்வன பிறவும், **உடல் கொள் உயிர்க்குணம்** – உடம்போடு கூடிய உயிர்களினுடைய குணங்களாம், **எ–று.**

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **அறிவு .... மறவி** – அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி யென்னும் முப்பத்திரண்டும், – **இணைய** – இவைபோல்வனபிறவும், – **உடல்கொள் உயிர்க்குணம்** – உடம்போடு கூடிய உயிர்களினுடைய குணங்களாம். **எ–று.**

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– அறிவு – புத்தியும், **அருள்** – கிருபையும், **ஆசை**– விருப்பமும், **அச்சம்** – பயமும், **மானம்** – மானமும், **நிறை** – மன அடக்கமும், **பொறை** – (பிறர்செய்த குற்றங்களைப்) பொறுத்தலும், **ஓர்ப்பு**–ஆராய்ந்து தெளிதலும், **கடைப்பிடி** – மறவாமல் உறுதியாய்ப் பிடித்தலும், **மையல்** – (காம) மயக்கமும், **நினைவு** – எண்ணமும், **வெறுப்பு**–வெறுத்தலும், **உவப்பு** – மகிழ்ச்சியும், **இரக்கம்** – மனம் இரங்குதலும், **நாண்** – வெட்கமும், **வெகுளி** – கோபமும், **துணிவு**– தைரியமும், **அழுக்காறு** – (பிறர் செல்வம் முதலியவற்றைக் கண்டு) பொறாமையும், **அன்பு** – அன்பும், **எளிமை** – எளியதாந் தன்மையும், **எய்த்தல்** – தளர்ச்சியும், **துன்பம்** – துக்கமும், **இன்பம்** – சுகமும் **இளமை** – இளந்தன்மையும், **மூப்பு** – முதுமையும், **இகல்** – பகைமையும், **வென்றி** – சயமும், **பொச்சாப்பு** – மறத்தலும், **ஊக்கம்** – மனவெழுச்சியும், **மறம்** – வீரமும், **மதம்** – களிப்பும், **மறவி** –மறந்து செய்யுங் குற்றமும் (என்கிற முப்பத்திரண்டும்) **இனைய** – இவைபோல்வன பிறவும், **உடல் கொள் உயிர்** – உடம்போடு கூடிய உயிர்களினுடைய, **குணம்** – குணப்பண்புகளாம்; **எ–று.**

> அருள் ஒருவகைச் சம்பந்தமும் இல்லாமல் உண்டாவ தென்றும்; அன்பு சம்பந்தம் பற்றி உண்டாவதென்றும் வேறுபாடு அறிக. பொச்சாப்புக்கும் மறவிக்கும் வேறுபாடு பதவுரையால் விளங்கும். மானம் தன்நிலையினின்று தாழாமை.
>
> உடலோடு கூடா விடின் உயிர்க்குணங்கள் வெளிப்படா வாதலின், **'உடல் கொளுயிர்க் குணம்'** என்றார்; மேலும், **உடலுயிர்த் தொழிற்குணம்** என்பர். இவைபோல்வன பிறவாவன கற்பு மடமை நடுவு நிலைமை முதலியன.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– அறிவு....மறவி – அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவியென்னு முப்பத் திரண்டும், இனைய – இவை போல் வன பிறவும், உடல் கொள் உயிர்க்குணம் – உடம்போடு கூடிய உயிர்களினுடைய குணப்பண்புகளாம். **எ–று.**

> நிறை – மன அடக்கம். ஓர்ப்பு – ஆராய்ந்து தெளிதல். கடைப்பிடி – மறவாமை. பொச்சாப்பு – மறப்பு. மறம் – வீரம். மறவி – மறந்து செய்யுங் குற்றம்.

கா.நமச்சிவாய முதலியார்

அறிவு.... மறவி – அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்னும் முப்பத்திரண்டும், **இனைய** – இவை போல்வன பிறவும், **உடல் கொள்** – உடம்போடு கூடிய, **உயிர்க்குணம்** – உயிரினுடைய குணங்களாம்.

மோசசு பொன்னையா

அறிவு முதல் மறவி ஈறாகக் கூறப்பட்ட முப்பத்திரண்டும் பிறவும் உடலோடு கூடிய உயிரின் குணங்களாம் எ–று.

(11)

452. துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்
உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்,

துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல்
உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழில் குணம்,

ṭuyttal ṭuñsal ṭoḷuṭal aṇiṭal
uyttal āṭi utal uyirṭ ṭoḷil kuṇam,

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Faculties of living creatures

The principal actions of the embodies soul are such as eating, sleeping, serving, wearing, moving, &c.

ஒப்புமைப் பகுதி

துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல்
உடல் உயிர்த் தொழிற் குளம்

(தொ.வி.: 139: 8–9)

மயிலைநாதர்

எ–ன், உயிர்த்தொழிற் பண்புணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– மெய் வாய் மூக்குக் கண் செவி யென்னும் ஐம்பொறிகளானும் ஊறு சுவை நாற்றம் ஒளி ஒலியென்னும் ஐம்புலன்களையும் நுகர்தலும் உறங்குதலும் பிறரைத் தொழுதலும் வேண்டினவற்றை அணிதலும் மடைத்தொழில், உழவு, வாணிகம், கல்வி, எழுத்துச், சிற்பமென்னும் ஆறுதொழில் (ஆறுதொழில்:

திவாகரம்) களையுமுயறலும் இவைபோல்வன பிறவும் உடம்பொடுகூடிய உயிர்த் தொழிற் பண்பாம், எ—று.

வ—று.:—

"தீண்டியுங் கண்டும் ப்யிற்றியுந் தன்செவியால்
வேண்டியுங் கங்குல் விடிவளவும் – ஈண்டிய
மங்கல மாய நுகர்ந்தான் மறமன்னர்
வெங்களத்து வேலுயர்த்த வேந்து." (பு.வெ.9:11)

"துஞ்சுபுலி யிடறிய சிதடன் போல" (புறநா.73)

"கையிற்றொழு தார்கழிய மூப்பிற்செவி கேளார்,
மையலவர் போலமனம் பிறந்தவகை சொன்னார் பையநடக்
கென்றுபசிக் திரங்கியவர் விடுத்தார் தொய்யின்முலை
யவர்கள்கடை தோன்றனனி புக்கான்"

(சீவக. 2013)

"பரியக நூபுரம் பாடகஞ் சதங்கை
அரியகங் காலுக் கணிபெற வணிந்து" (சிலப் 6:84–5)

"உழுது பயன்கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து – முழுதுணர
ஓதியழல் வழிபட் டோம்பாத வீகையான்
ஆதி வணிகர்க் கரசு" (பு.வெ 8:10)

"வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை" (குறள் 872)

எனவரும். பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், உயிர் தொழிற்குணம் உணர்—ற்று

இ—ள்.:— ஐம்புலனையும் நுகர்தல் முதலிய இவ் ஐந்தும் இவை போல்வன பிறவும் உடலோடு கூடிய உயிர்த் தொழிற் குணங்களாம், எ—று.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், உடலொடு கூடிய உயிர்த் தொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது

இ—ள்.:— துய்த்தல் – மெய் வாய் கண் மூக்குச், செவி யென்னும் ஐம்பொறியாலும் ஊறு, சுவை நாற்றம், ஒளி இசையென்னும் ஐம்புலன்களை நுகர்தலும், துஞ்சல் – இவ்வைம் பொறி முதலான கருவி ஒடுக்கமான உறங்கலும், தொழுதல் – மனம் வாக்குக் காயத்தாற் பிறரைத் தொழுதலும், **அணிதல்** – வேண்டினவற்றை அணிதலும், **உய்த்தல்** – படைத்தொழில் உழவு வாணிகம், **கல்வி** .... என்னும் அது தொழில்களை முயறலும், **ஆதி** – இவை முதலாக இவை போல்வன

பிறவும், **உடலுயிர்த் தொழிற்குணம்** – உடம்பொடு கூடிய உயிர்த்தொழிற் பண்பாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இது, உயிரின் றொழிற்குண முணர்த்துகின்றது.

இ–ள்.:– துய்... லுய்த்தல் – துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்கிற ஐந்தும், **ஆதி** – இவைபோலவன பிறவும், **உடலுயிர்** – உடம்பொடுகூடிய வுயிரினுடைய, **தொழிற்குணம்** – தொழிற் குணங்களாம், **எ–று.**

ஆ- முத்துத்தம்பிப் பிள்ளை

உயிர்த்தொழிற்குணம் யாவை?

துய்த்த றுஞ்ச றொழுத லணிதல்

உய்த்த லாதி யுடலுயிர்த் தொழிற்குணம்.

(துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் ஆதி உடல் உயிர்த் தொழிற்குணம்.)

இ–ள்.:– துய்த்தல்–உண்ணல், துஞ்சல்–உறங்கல், **தொழுதல்**–பணிதல், **அணிதல்**–அலங்கரித்தல், **உய்த்தல்**–செலுத்துதல் என்னும் ஐந்தும், **ஆதி**–இவைபோல்வன பிறவும், **உடல் உயிர்த் தொழிற்குணம்**–உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாம். எ–று.

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரின் தொழிற் பண்புணர்த்திற்று.

இ–ள்.:– இவ்வைந்துமிவை போல்வனவு முடலொடுகூடிய உயிரின் தொழிற்பண்புகளாம், **எ–று.**

துய்த்தல்– உண்டல்

துஞ்சல்– உறங்கல்

உய்த்தல்–செலுத்தல்.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– துய்த்தல்.... உய்த்தல் – துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தலென்னும் ஐந்தும், **ஆதி** – இவை போல்வன பிறவும், **உடல் உயிர்த் தொழிற்குணம்** – உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாம், **எ–று.**

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– துய்த்தல் .... உய்த்தல் – துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தலென்னும் ஐந்தும், – **ஆதி** – இவைபோல்வன பிறவும்,–**உடல் உயிர்த் தொழிற்குணம்**–உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களாம். **எ–று.**

வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— **துய்த்தல்** — அனுபவித்தலும், **துஞ்சல்** — தூங்குதலும், **தொழுதல்**—வணங்குதலும், **அணிதல்**—தரித்தலும், **உய்த்தல்**— செலுத்துதலும், (என்கிற ஐந்தும்) **ஆதி** — முதலானவை, **உடல் உயிர்**— உடம்போடு கூடிய உயிரினுடைய, **தொழில் குணம்** — தொழிற் பண்புகளாம்; எ—று.

'ஆதி' என்றதனால் வாழ்த்தல் அராற்றுதல் வரைதல், முதலியன கொள்க.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— துய்த்தல்.... உய்த்தல் — துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் அய்த்தலென்னும் ஐநதும், ஆதி — இவை போல்வனபிறவும், உடல் உயிர்த் தொழிற்குணம் — உடம்போடு கூடிய உயிரினுடைய தொழிற்குணங்களா. எ—று.

துய்த்தல் — அனுபவித்தல். துஞ்சல் — உறங்கல். உய்த்தல் — செலுத்தல்.

கா.நமச்சிவாய முதலியார்

துய்த்தல்...... உய்த்தல் — துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்னும் ஐந்தும், **ஆதி** — இவை போல்வன பிறவும், **உடல் உயிர்** — உடம்போடு கூடிய உயிரினுடைய, **தொழிற்குணம்** — தொழிற் குணங்களாம்.

மோசகு பொன்னையா

ஐம்புலனையும் நுகர்தல், உறுங்குதல், பிறரைத் தொழுதல், ஏற்றவை அணிதல், பல் தொழில் முயறல் முதலியன உடம்போடு கூடிய உயிரின் தொழிலாம் எ—று.

(12)

453. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரில் பொருட்குணம்

பல்வகை வடிவு உரு நாற்றம் அமை வண்ணம்
அறு சுவை ஊறு எட்டு உயிர் இல் பொருள் குணம்

pal vakai vativu iru nāṟṟam ai vaṇṇam
aṟu suvai ūṟu ettu uyir il poruḻ kuṇam

இலாசரகு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Qualities of lifeless matter

The properties of lifeless matter are as follows: Various forms (such as square, circular, triangular, &c.), the two smells (good and bad), the five

colours (white, red, black, yellow and green), the six tastes(bitter, acid, astringent, saline, pungent and sweet),and the eight sensations of touch (hot, cold, soft, hard, light, heavy, smooth and rough).

ஒப்புமைப் பகுதி

பல்வகை வடிவு இருநாற்றம் ஐவண்ணம்
அறுசுவை ஊறெட்டு உயிரல் பொருட்குணம்

(தொ.வி.: 140)

மயிலை நாதர்

எ–ன், உயிரியல் பொருட்பண் புணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: சதுரம் ஆயதம் வட்டம் முக்கோணம் சிலை துடி [1]தோரை முழா எறும்பு கூன் குறள் முதலான வடிவுகளும், நன்றும் தீதுமான இருவகை நாற்றமும், வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமையான ஐந்து வண்ணங்களும், கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு காழ்ப்பு [2]தித்திப் பென்னும் ஆறுசுவைகளும், வெம்மை தண்மை மென்மை வன்மை திண்மை நொய்ம்மை இழுமெனல் சருச்சரை யென்னும் எட்டு ஊறும் உயிரில்லாத பொருட்பண்பாம், எ–று.

வ–று.:–

"சதுரம்வட்ட மாயத முக்கோண......" "கயற்புலால் புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப" (நாலடி. 97) "பிறவிக் குருடனுக் கைவண்ணங் காட்டி" "அறுசுவையுண்டி" (நாலடி.1) "நீரின் றன்மையுந் தீயின் வெம்மையும்" (யா.வி) எனவரும், பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், உயிரல்லாத பொருள்களின் குணம் **உணர்–ற்று.**

இ–ள்.:– வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் முதலிய பலவகை வடிவும், நற்கந்தம் துர்க்கந்தம் என்னும் இருநாற்றமும், வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்னும் ஐந்து வண்ணமும், கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்புக் கார்ப்பு இனிப்பு என்னும் ஆறு இரதமும், வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழும் எனல் சருச்சரை என்னும் எட்டு ஊறும் உயிரல்லாத பொருள்களின் குணங்களாம், எ–று.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், உயிரில் பொருட்பண்பு வருமாறு கூறியது.

இ–ள்.: பல்வகை வடிவு – வட்டம், சதுரம், ஆயதம், முக்கோணம் சிலை துடி தோரை, முழா, எறும்பு கூன் குறள் முதலான முடிவுகளும், இரு நாற்றம் நற்கந்தம் துற்கந்தமான இரு வகை நாற்றமும், **ஐ வண்ணம்** – வெண்மை, செம்மை, பொன்மை, கருமை, பசுமையான ஐந்து வண்ணமும், **அறுசுவை** – கைப்பு துவர்ப்பு, புளிப்பு கார்ப்பு, தித்திப்பு, உவர்ப்பு என்னும் அறு சுவைகளும், **ஊறெட்டும்** – வெம்மை தண்மை மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல் சருச்சரை என்னும் எட்டூறும், **உயிரில் பொருட்குணம்** – உயிரில்லாத பொருட் பண்பாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இ—ள்.:— பல்வகை வடிவு — வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இவை முதலாகிய பலவகை வடிவுகளும், **இருநாற்றம்** — நற்கந்தந் துர்க்கந்த மென்னும் இருநாற்றங்களும், **ஐ வண்ணம்**—வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை யென்கிற ஐந்து வண்ணங்களும், **அறுசுவை** — கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்கிற அறுசுவைகளும், **ஊறெட்டு** — வெம்மை தண்மை, மென்மை வன்மை, நொய்மை சீர்மை, இழுமெனல் சருச்சரை யென்கிற எட்டூறுகளும், **உயிர் அல்பொருள்**— உயிரல்லாத பொருள்களினுடைய, **குணம்** — குணங்களாம், **எ—று.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிரல்லாத பொருட்குணங்கள் யாவை?

பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்
அறுசுவை யூறெட் டுயிரல் பொருட்குணம்.

(பல்வகை வடிவு இருநாற்றம் ஐவண்ணம் அறுசுவை ஊறு எட்டு உயிர் அல் பொருட்குணம்.)

இ—ள்.:— வட்டம் இருகோணம் முக்கோணஞ் சதுரமுதலிய பலவகை வடிவுகளும் நற்கந்தந் துர்க்கந்தமென்னும் இருநாற்றங்களும் வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமையென்னும் ஐந்து வண்ணங்களும் கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்புக் கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளும் வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும் எட்டூறுகளும் உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம். **எ—று.**

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புணர்த்திற்று

இ—ள்.:— பல்வகைவடிவு — வட்டம் இருகோணம் முக்கோணம் நாற் கோண முதலிய பல வகைப்பட்ட வடிவுகளும், **இருநாற்றம்** — நற்கந்தந் துர்க்கந்தங்களும், **ஐ வண்ணம்**— வெண்மை கருமை செம்மை பொன்மை பசுமைகளும், **அறுசுவை** — இனிப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு கைப்புகளும், **சுவை** —இரதம் (ரசம்) **ஊறெட்டு** — வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை என்பது (கனமிலாதது — இலேசு) சீர்மை என்பது (கனமாயிருப்பது) இழுமெனல் என்பது (வழுவழுத்தல்) சருச்ச ரை என்பது இதற்கு எதிர் (பருபருக்கை) என்னும் எட்டுவகைப் பரிசங்களும், **உயிரல்பொருட்குணம்**—உயிரல்லாத பொருள்களின் குணப்பண்புகளாம், **எ—று.**

வடிவு முதலியன குணப்பண்புகளென முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:— பல்வகை வடிவு — வட்டம் இருகோணம் முக்கோணஞ் சதுர முதலாகிய பலவகை வடிவுகளும், **இருநாற்றம்** — நற்கந்தந் துர்க்கந்த மென்னும் இரு நாற்றங்களும், **ஐவண்ணம்** — வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை யென்னும் ஐந்து வண்ணங்களும், **அறுசுவை** — கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்புக் கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளும், **ஊறு எட்டு** — வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும்

எட்டூறுகளும், **உயிர் அல்பொருட் குணம்** – உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம், எ–று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.;– பல்வகை வடிவு – வட்டம் இருகோணம் முக்கோணம் சதுர முதலிய பலவகை வடிவுகளும், – **இருநாற்றம்** – நற்கந்தந் துர்க்கந்தமென்னும் இருநாற்றங்களும், – **ஐவண்ணம்** – வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை யென்னும் ஐந்து வண்ணங்களும், – **அறுசுவை** – கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்னும் அறுசுவைகளும், – **ஊறு எட்டு** – வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும் எட்டூறுகளும், – **உயிர் அல்பொருட் குணம்** – உயிரல்லாத பொருள்களினுடைய குணங்களாம்.

சீர்மை – கனமாயிருக்குந்தன்மை, இழுமெனல் – வழுவழுப்பு, சருச்சரை – மரமரப்பு. (பருபருக்கை)

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– பல் வகை வடிவு – (வட்டம் முக்கோணம் சதுரம் முதலிய) பலவகைப்பட்ட வடிவுகளும், **இரு நாற்றம்** – (நறுநாற்றம் தீநாற்றம் என்னும்) இருவகை நாற்றங்களும், **ஐ வண்ணம்**– (வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்கிற) ஐவகை நிறங்களும், **அறுசுவை** – (கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு இனிப்பு கார்ப்பு என்கிற) அறுவகை ருசிகளும், **ஊறு எட்டு** – (வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்கிற) எட்டுவகை ஸ்பரிசங்களும், **உயிர் அல் பொருள்** – உயிருடையனவல்லாத பொருள்களினுடைய, **குணம்** – குணங்களாம்; எ–று.

(நொய்மை – கனமில்லாமை, இலேசு. சீர்மை – கனமாயிருத்தல். இழுமெனல் – வழுவழுத்தல்; இதற்கு எதிர் – சருச்சரை)

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– பல்வகை வடிவு – (வட்டம் இருகோணம் முக்கோணஞ் சதுரமுதலிய) பலவகை வடிவுகளும், **இருநாற்றம்** – (நற்கந்தந் துர்க்கந்த மென்னும்) இருநாற்றங்களும், **ஐ வண்ணம்** – (வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை யென்னும்) ஐந்து வண்ணங்களும், **அறு சுவை** – (கைப்புப் புளிப்புத் துவர்ப்பு உவர்ப்புக் கார்ப்பு இனிப்பு என்னும்) அறுசுவைகளும், **ஊறு எட்டு** – (வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்சரை யென்னும்) எட்டூறுகளும், **உயிர் அல் பொருட் குணம்** – உயிரல்லாத பொருள் களினுடைய குணப்பண்புகளாம். எ–று.

வெம்மை–சூடு–. தண்மை–குளிர்ச்சி–. மென்மை –. வன்மை – கடினம் –. நொய்மை – இலேசு – சீர்மை – கனம். இழுமெனல் – வழுவழுத்தல் – சருச்சரை – ஒப்புரவின்மை.

கா.நமச்சிவாய முதலியார்

பல்வகை வடிவு (வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இவை முதலாகிய) பலவகை வடிவுகளும், **இரு நாற்றம்** – (நறுநாற்றம் தீ நாற்றம் என்னும்) இரு நாற்றங்களும், **ஐவண்ணம்** – (வெண்மை செம்மை கருமை பொன்மை பசுமை என்னும்) ஐந்து வண்ணங்களும், **அறுசுவை** – (கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பு என்னும்) ஆறுசுவைகளும், **ஊறு எட்டு** – (வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்ம்மை சீர்மை இழுமெனல் சருச்சரை என்னும்) எட்டு ஊறுகளும், **உயிர் அல்பொருள்** – உயிரல்லாத பொருள்களின், **குணம்** – குணங்களாம் (சருச்சரை – சுரசுரப்பு).

மோசசு பொன்னையா

வட்டம், கோணம், முக்கோணம், நாற்கோணம் முதலிய பலவகை வடிவங்களும், நல்ல, கெட்ட நாற்றங்களும், வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்னும் ஐவண்ணமும்; கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, காழ்ப்பு, இனிப்பு, என்னும் அறு சுவையும்; வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்ம்மை, இழுமெனல், சருச்சரை என்னும் ஊறு எட்டும் உயிரில்லாத பொருள்களின் குணங்களாம் எ–று.

(13)

454. தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
[1]நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் [2]இன்ன அவ் இருபொருள் தொழில் குணம்

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் இன்ன அவ் இரு பொருள் தொழில் குணம்

ṯōṉṟal maṟaital vaḻartal suruṅkal
nīṅkal ataiṭal natuṅkal isaiṭṭal
īṭal iṉṉaṉa iruporuḷ toḻil kuṇam

பாட வேறுபாடு:–

1. நீங்க லடுங்க லடைதல்

2. இன்னனவிரு

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Common principal qualities

The following are the principal qualities common to both (animate and in animate bodies): Appearing and disappearing; increasing and decreasing; losing and gaining; trembling, sounding, and yielding; &c.

ஒப்புமைப் பகுதி

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல்
ஈதல் இன்னனஎ இருபொருள் தொழிற்குணம்

(தொ.வி.: 141)

மயிலை நாதர்

எ-ன், அவ்விரு பகுதிப் பொருட்கும் பொதுவான தொழிற்பண்பு உணர்த்து தல் நுதலிற்று.

இ-ள்.:- தோன்றல் முதலான ஒன்பதும் இவைபோல்வன பிறவும் மேற்கூறிய உயிர்ப்பொருட்கும் உயிரில்பொருட்கு முரிய தொழிற்பண்பாம், எ-று.

வ-று.:-

(பிள்ளை)+(பிறந்தான், தோன்றினான்); [1](பிறை)+ (பிறந்தது, தோன்றிற்று) எனவும், (சாத்தன்)+ (செத்தான், மாய்ந்தான்); கதிர் மறைந்தது, பொருள் மாய்ந்தது எனவும், சாத்தன்வளர்ந்தான், மரம் பெருத்தது; பிறை வளர்ந்தது, நத்தம் உயர்ந்தது, நிலாப் பரந்தது எனவும், (வீரன்)+ (மெலிந்தான், ஒய்ந்தான்); பிறை தேய்ந்தது, ஒளி மழுங்கிற்று, நூல் நொள்கிற்று எனவும், ஊரின் நீங்கினான், தமரிற் றீர்ந்தான், கிழத்தியிற் பிரிந்தான்; ஆ ஒடிற்று, இருள் நீங்கிற்று, நோய் தீர்ந்தது, நீர் ஒடிற்று எனவும், அரசை அடைந்தான், ஊரைச் சேர்த்தான்; நீர்வந்தது காற்ற றைந்தது எனவும், (நம்பி)+ (நடுங்கினான், அதிர்ந்தான், தடுமாறினான் சுழன்றான், கூத்தாடினான்) பூமி கம்பித்தது, கொடி ஆடிற்று, சுடர் நடுங்கிற்று எனவும், (நம்பி)+(சென்னான், ஆர்த்தான், கூவினான், அழைத்தான், பாடினான்); கடல் ஒலித்தது, மழை முழங்கிற்று, இடி இடித்தது, பறை பட்டது எனவும், (ஏந்தல்)+ (ஈந்தான் பயந்தான், கொடுத்தான்); (மழை)+ (உதவிற்று, பயந்தது, விளைந்தது) எனவும், முறையே காண்க

இவ்வுதாரணங்களினாலே அத்தொழில் வேறுபாடுக ளெல்லா மறிக.

பாட வேறுபாடு.:-

1.பிள்ளை பிறந்தது

சங்கர நமச்சிவாயர்

எ—னின், உயிரல்பொருட்கே உரிய தொழிற்குணம் அருகிக் கிடத்தலின் அதனை ஒழித்து, அவ்விரு பொருட்கும் பொதுவான தொழிற்குணம் **உணர் —ற்று.**

இ—ள்.:— தோன்றல் முதலிய ஒன்பதும் இவைபோல்வன பிறவும் உயிர்ப் பொருள் உயிரல்பொருள் என்னும் இரண்டற்கும் பொதுவான தொழிற் குணங் களாம், **எ—று.**

வ—று.:—

உயிர் தோன்றி மறைந்தது, உடல் தோன்றி மறைந்தது, நெருப்புத் தோன்றி மறைந்தது என இத்தொடக்கத்தன எல்லாம் இரு பொருட்கும் பொதுவாகிய தொழிற்குணமாதல் காண்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், உயிர்ப்பொருள் உயிரில் பொருள் என்னும் இவ்விரு பொருட்டும் பொதுவான தொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது.

இ—ள்.:— தோன்றல் மறைதல் — தோற்றமும் நாசமும், **வளர்தல் சுருங்கல்** — வளர்தலும் குறைதலும், **நீங்கலடைதல்** — அகலுதலும் அணுகலும், **நடுங்க லிசைத்தல்** — அசைத்தலும் இசைத்தலும், **ஈதலின்னன** — ஈதலும் இவ்வொன்பதும் இவை போல்வன பிறவும், **இரு பொருட் டொழிற் குணம்** — உயிர்ப்பொருட்கும் உயிரில் பொருட்குமுரிய தொழிற் பண்பாம், **எ—று.**

உ—ம்.:—

பிள்ளை பிறந்தான், தோன்றினான்; உயிர்ப் பொருட்டோற்றம், பிறை பிறந்தது, தோன்றிற்று; உயிரில் பொருட்டோற்றம். சாத்தன் செத்தான், மாய்ந்தான்; உயிர்ப்பொருள் மறைதல். பொருள் இறந்தது, மறைந்தது; உயிரில்பொருள் மறைதல். சாத்தன் வளர்ந்தான் மரம் பெருத்தது; உயிர்ப் பொருள் வளர்தல். பிறை வளர்ந்தது, நத்தம் உயர்ந்தது, நிலாப் பரந்தது உயிரில் பொருள் வளர்தல் வீரன் மெலிந்தான், நேர்ந்தான்; உயிர்ப்பொருள் சுருங்கல். பிறை தேய்ந்தது, நூல் நொள்கிற்று, ஒளி அருகிற்று; உயிரில் பொருள் சுருங்கல். ஊரின் நீங்கினான் தமரிற் றீர்ந்தான், கிழத்தியிற் பிரிந்தான்; உயிர்ப் பொருள் நீங்கல். இருள் நீங்கிற்று நோய் தீர்ந்தது, நீர் ஒடிற்று உயிரில் பொருள் நீங்கல். அரசை அடைந்தான் மாதரைப் புணர்ந்தான் ஊரை அடைந்தான், உயிர்ப்பொருள் அடைதல். நீர் வந்தது, காற்று அறைந்தது, உயிரின் பொருள் அடைதல். நம்பி அயர்ந்தான், நடுங்கினான், தடுமாறினான், கூத்தாடினான்; உயிர்ப் பொருள் நடுங்கல் பூமி கம்பித்தது, கொடி ஆடிற்று, சுடர் நடுங்கிற்று; உயிரில் பொருள் நடுங்கல். சொன்னான், ஆர்த்தான் கூவினான் பாடினான்; உயிர்ப்பொருள் இசைத்தல். கடல் ஒலித்தது, மழை முழங்கிற்று,

இடி இடித்தது; உயிரிலப் பொருள் இசைத்தல், பயந்தான் கொடுத்தான் உயிர்ப்பொருள் ஈதல், மழை பயந்தது, கொடுத்தது உயிரில் பொருள் ஈதல் எனவும் முறையே காண்க.

விசாகப் பெருமாளையர்

இது, அவ்விரு பொருள்களுக்கும் பொதுவான தொழிற்குண முணர்த்து கின்றது.

இ–ள்.:– தோன்றல்... ஈதல் – தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற ஒன்பதும், **இன்னன –** இவை போல்வன பிறவும், **இருபொருள் –** உயிர்ப்பொருளும் உயிரல் பொருளும் ஆகிய விரண்டற்கும் பொதுவாகிய, **தொழிற்குணம் –** தொழிற் குணங்களாம், **எ–று.**

வ–று.:–

உயிர்தோன்றி மறைந்தது, உடறோன்றி மறைந்தது, நெருப்புத் தோன்றி மறைந்தது என வரும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

உயிர்ப்பொருள் உயிரல்பொருள் இரண்டற்கும் பொதுக்குணம் யாவை?

தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல்
நீங்க லடைத லடுங்க லிசைத்தல்
ஈத லின்னன விருபொருட் டொழிற்குணம்.

(தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் இன்னன இருபொருட் டொழிற்குணம்.)

இ–ள்.:– தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதலென்னும் ஒன்பதும் இவைபோல்வன பிறவும் உயிர்ப்பொருளும் உயிரல்பொருளுமாகியஇரண்டற்கும் பொதுவாகிய தொழிற்குணங்களாம். **எ–று.**

வ–று.:–

உயிர் தோன்றி மறைந்தது; உடறோன்றி மறைந்தது; நெருப்புத் தோன்றி மறைந்தது எனவரும்.

முகவை இராமானுச கவிராயர்

இது, உயிரல்பொருட்குரிய தொழிற்பண்புகள் கல்லு வெடித்தது, பட்டமரம் மூச்சுவிட்டது என்பன போலச் சுருங்கிக் கிடத்தலால் அதனையொழித்து அவ்விருவகைப் பொருட்கும் பொதுவாகிய தொழிற் பண்புணர்த்துகின்றது.

இ–ள்.: தோன்றல் முதலிய ஒன்பதும் இவைபோல்வனவும் உயிர்ப்பொருள் உயிரல் பொருளென்னும் இருவகைப்பொருட்கும் பொதுவாகிய தொழிற்பண்பு களாம், **எ–று.**

வ–று.:–

உயிர் தோன்றி மறைந்தது, உடல் தோன்றிமறைந்தது, உயிர் வளர்ந்து சுருங்கிற்று, உடல் வளர்ந்து சுருங்கிற்று, உயிர் நீங்கியடைந்தது, வெயில் நீங்கியடைந்தது, உயிர் நடுங்கிற்று, உடல் நடுங்கிற்று, உயிரொலி, அலையொலி, ஈயாதுவீயுமுயிர்

தவப்பலவே, வெயில் சூடுதந்தது, எனவிவை முறையே யிரு பொருட்கு முரியவாய் வருதல் காண்க. ஈதலுமின்னனவுந் தொழிற் குணமென முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:— தோன்றல்... ஈதல் — தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற ஒன்பதும், **இன்னன** — இவை போல்வன பிறவும், **இருபொருள் தொழிற்குணம்** — உயிர்ப்பொருளும் உயிரல் பொருளுமாகிய விரண்டற்கும் பொதுவாகிய தொழிற் குணங்களாம், **எ—று.**

வ—று.:—

உயிர் தோன்றி மறைந்தது; உடறோன்றி மறைந்தது, நெருப்புத் தோன்றி மறைந்தது என வரும்.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— **தோன்றல் .... ஈதல்**—தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதலென்னும் ஒன்பதும், — **இன்னன** இவைபோல்வனபிறவும், — **இருபொருட்டொழிற் குணம்** — உயிர்ப் பொருளும் உயிரல்பொருளுமாகிய இரண்டற்கும் பொதுவாகிய தொழிற்குணங்களாம். **எ—று.**

வ—று.:—

உயிர்தோன்றிமறைந்தது; உடறோன்றிமறைந்தது; நெருப்புத் தோன்றிமறைந்தது என வரும்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: தோன்றல்...ல்... — இவ்வொன்பதும், **இன்னன** — இவை போல்வன பிறவும், **இரு பொ...** — (உயிர்ப்பொருளும் உயிரல் பொருளும் ஆகிய) இரண்டுக்கும் பொதுவாகி... **தொழில் குணம்** — தொழிற் பண்புகளாம், **எ—று.**

இசைத்தல் — ஒலித்தல். இவைபோல்வன பிறவாவன — அசைதல் முதலியன.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.: தோன்றல்.....ஈதல் — 1 தோன்றல் 2மறைதல் 3 வளர்தல் 4 சுருங்கல் 5 நீங்கல் 6 அடைதல் 7 நடுங்கல் 8 இசைத்தல் 9ஈதலென்னும் ஒன்பதும், இன்னன— இவை போல்வன பிறவும், இருபொருள் —உயிர்ப் பொருளும் உயிரல்பொருளுமாகிய, இரண்டற்கும் பொதுவாகிய, தொழிற்குணம் — தொழிற் பண்புகளாம். **எ—று.**

	உயிருடைப்பொருள்.	உயிரில்லாப்பொருள்.
(உ—ம்.)	உயிர் தோன்றி மறைந்தது.	உடல் தோன்றி மறைந்தது.
	பிள்ளை பிறந்து மாய்ந்தான்.	நிலாத் தோன்றி ஒழிந்தது.
	உயிர் வளர்ந்து சுருங்கிற்று.	உடல் வளர்ந்து சுருங்கிற்று.
	மரம் வளர்ந்து சிறுத்தது.	மதி வளர்ந்து குறைந்தது.
	உயிர் நீங்கி யடைந்தது.	வெயில் நீங்கி யடைந்தது.

உயிர் நடுங்கிற்று.	உடல் நடுங்கிற்று.
நம்பி ஆடினான்.	கொடி ஆடிற்று.
உயிர்ஒலி.	கடல்ஒலி.
நம்பிசொன்னான்.	இடிஇடித்தது.
'ஈயாது வீயு முயிர்'.	வெயில் சூடு தந்தது.
நம்பி தந்தான்.	மழை உதவிற்று.

கா.நமச்சிவாய முதலியார்

தோன்றல்.... ஈதல்– தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்னும் ஒன்பதும், **இன்னன** – இவை போல்வன பிறவும், **இருபொருள்** – (உயிர்ப்பொருளும், உயிரல் பொருளும் ஆகிய) இரண்டற்கும் பொதுவாகிய, **தொழிற்குணம்** – தொழிற் குணங்களாம்.

உதாரணம்

உயிர்தோன்றி மறைந்தது. உடல்தோன்றி மறைந்தது.

நெருப்புத்தோன்றி மறைந்தது.

மோசசு பொன்னையா

தோன்றல் முதல் ஈதல் ஈறாக உள்ள ஒன்பதும் அவை போல்வன பிறவும் இருபொருள்களுக்கும் பொதுவான தொழிற் பண்புகளாம் எ–று.

(14)

455. சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

சால உறு தவ நனி கூர் கழி மிகல்.

sāla uṟu ṭava naṉi kūr kaḻi mikal.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Words implying one quality

Excess is denoted by The six words, cala, uru, tava, nani, kur and kali denote excess.

ஒப்புமைப் பகுதி

அவைதாம்
உறுதவ நனியென வரூஉ மூன்றும்
மிகுதி செய்யும் பொருள என்ப

(தொல். சொல்.: 299)

உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வாகலும்

(இ.வி.: 281: 1–2)

உறுதவ நனிமிகு திப்பொரு ளுணர்த்தும்

(மு.வீ.: 670)

மயிலை நாதர்

எ–ன், ஒரு பண்பிற்குரிய பல சொல்லுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இவ்வாறு சொல்லும் மிகுதி யென்னும் ஒரு பண்பை விளக்கும் பெயர்களாம், **எ–று.**

வ–று.:–

"பருவந்து சாலப் பலர் கொலென் றெண்ணி" "உறுவளி தூக்கு முயர்சினை மாவின்" (கலி. 84) **"தவச் சேய் நாட்டா ராயினும்"** (நற். 115) **"நனிபே தையே நயனில் கூற்றம்"** (புறநா. 227) **"பொறை நில்லா நோய்கூரப் புல்லென்ற நுதலிவள்"** (கலி. 3) **"சினனே காமங் கழி கண் ணோட்டம்"** (பதிற். 22) என முறையே காண்க.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், 'பல்வகைப்பண்பு' என்றார் அவை இவை என இதுகாறும் உணர்த்தி, அப்பண்புகளுள் ஒருகுணம் பலகுணம் தழுவி வரும் என்னும் உரிச் சொற்கள் இவையென உணர்த்துவான் தொடங்கி, அவற்றுள் ஒரு குணம் தழுவிய உரிச் சொல்லுள் சில **உணர் –**ற்று.

இ–ள்.:– சால என்பது முதல் கழி என்பது ஈறாகக் கூறிய ஆறு உரிச்சொல்லும் மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் சொற்களாம், எ–று.

வ–று.:–

1. "பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி"
2. "ஊறுவளி தூக்கும் உயர்சினை மாவின்"
3. "தவச்சேய் நாட்ட ராயினும்"
4. "நனிபே தையே நயனில் கூற்றம்"
5. "பொறைநில்லா நோய்கூரப் புல்லென்ற நுதலிவள்"
6. "சினனே காமம் கழிகண் ணோட்டம்"

என முறையே காண்க. இவற்றுள் சால என்பது சால் என்னும் உரிப் பெயரடியாகப் பிறந்த வினையெச்சக்குறிப்பு, சாலப் பல ஆம் என ஆம் என்னும் வினைப்பயனிலை தொக்கு நின்றது.

இப்பண்படிகளை நோக்கிப் **'பல்வகைப் பண்பும் பகர் பெயராகி'** என்றார்.

சால் எனப் பண்படியாகச் சூத்திரம் செய்யாது சால என வினையெச்சக் குறிப்பாகச் சூத்திரஞ் செய்தல் அவ் வுரிப்பெயரடி யாக வினைவிகற்பங்கள் எல்லாம் பிறக்கும் என்பது தோன்ற உடம்பொடு புணர்த்தலாம் என்க. அவை யெல்லாம் வந்தவழிக் காண்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஒரு பண்பிற்குரிய உரிச்சொல் இவையெனக் கூறுகின்றது.

இ–ள்.: சால – "பருவந்து சாலப் பலர்கொலென் றெண்ணி", **உறு** "உறுவளி தூக்கு முயர்சினை மாவின்" (கலி84), **தவ** –," "தவச் சேய் நாட்டா ராயினும்"(நற் 115) **நனி** "நனிபே தையே நயனில் கூற்றம்" (புறம். 227) "**கூர்** – பொறை நில்லா நோய் கூரப் புல்லென்ற" (கலி. 3) **கழி** – "சினனே காமங்கழி கண்ணோட்டம்" (பதிற்22) **மிகல்**– இவ்வாறு உரிச்சொல் மிகுதியின் பொருண்மை விளக்கம் பெயர்களாம், **எ–று**.

விசாகப்பெருமாளையர்

இது, பலவகைப் பண்பும் இதுவரைக்கு முணர்த்தி அப்பண்புகளுள் ஒரு குணம் பல குணந்தழுவி வருமென்ற உரிச்சொற்களை உணர்த்தத் தொடங்கி அவற்றுள் ஒரு குணந்தழுவிய உரிச்சொற்களிலே சில உணர்த்துகின்றது.

இ–ள்.:– சால.... கழி – சாலவென்பது முதலாகிய இவ் வாறுரிச் சொற்களும், **மிகல்** – மிகுதியாகிய ஒரு குணத்தை யுணர்த்துகிற உரிச்சொற்களாம், **எ–று**.

வ–று.:–

"பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி", "உறுவளி தூரக்கு முயர் சினைமாவின்", "தவச்சேய் நாட்டாராயினும், நனி பேதையே நயனில் கூற்றம்", "பொறையில்லா நோய்கூரப் புல்லென்றிசினே", "காமங்கழிகண் ணோட்டம்" என முறையே காண்க.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மிகுதிப்பொருட்கண் வரும் உரிச்சொற்கள் யாவை?

சால வுறுதவ நனிகூர் கழிமிகல்.

(சால உறு தவ நனி கூர் கழி மிகல்.)

இ–ள்.: சாலவென்பது முதலாகிய இவ்வாறுரிச்சொற்களும் மிகுதியாகிய ஒரு குணத்தையுணர்த்தும் உரிச்சொற்கள். **எ–று**.

வ.று:–

சால – "பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி"

உறு – "உறுவளி துரக்கு முயர்சினை மாவின்"

தவ – "தவச்சேய் நாட்டா ராயினும்"

நனி – "வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே"

கூர் – "துனிகூ ரெவ்வமொடு"

கழி – "காமங் கழிகண் ணோட்டம்"

சாலவென்பது சாலென்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக்குறிப்பு.

17. உரிச்சொல் எத்தனை வகைப்படும்?

ஒரு குணந் தழுவிய வுரிச்சொல்லும் பலகுணந் தழுவிய உரிச்சொல்லுமென விருவகைப்படும்.

முகவை இராமனுச கவிராயர்

இது, ஒருகுணந் தழுவிய வுரிச் சொற்களிவை யென்கின்றது.

இ–ள்.: சால என்பது முதலாகக் கூறிய ஆறு உரிச் சொற்களும் மிகுதி என்னும் ஒரு குணத்தையுணர்த்துஞ் சொற்களாம், எ–று.

வ–று.:–

இலங்கு நூல்கற்றாரைக்கா முறுவர் சாலப்பலர், (மிகவும் பலர்) உறுவளி தூக்கு முயர்சினை – (உறுவளி மிக்ககாற்று, கடுங் காற்று) தவச்சேய் நாட்டாராயினும், (மிகவுந் தூரதேசத்தா ராயினும்)

நனிபேதையே நயனில் கூற்றம், (நனிபேதை– மிகவும் பேதை) பேதை பெண் நோய் கூரப்புல் லென்றிசினே, (நோய்மிக மெலிந்தேன் கழி கண்ணோட்டம், (மிக்கதா க்ஷண்ணியம்) என முறையே காண்க. இவற்றுள் நோய்கூர என்பது கூர் என்னும் உரிப் பெயரடியாகப் பிறந்த செயவென்னும் வாய்பாட்டு வினை யெச்சக்குறிப்பு.

சால என்பதுமது. சால் எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது சால வெனவினை யெச்சக் குறிப்பாகச் சூத்திஞ் செய்தது, இந்தவுரிப் பெயரடியாக வினை விகற்பங்க ளெல்லாம் பிறக்கு மென்பது தோன்று உடம்படுபுணர்த்தலா மென்க, அவை யெல்லாம் வந்தவந்த இடங்களிற் கண்டு கொள்க, சால வுறுதவநுதலியன உரிச் சொற்கள் என முடித்துக் கொள்க.

"அவைதாம்

உறுதவ நனியென வருஉமூன் றுமிகுதி

செய்யும் பொருள வென்ப"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– சால.... கழி – சால வென்பது முதலாகிய இவ்வாறுரிச் சொற்களும், மிகல் – மிகுதியாகிய ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச் சொற்களாம், எ–று.

வ–று.:–

சால– "பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி"

உறு– "உறுவளி துரக்கு முயர்சினை மாவின்"

தவ– "தவச் சேய் நாட்டாராயினும்"

நனி– "வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே"

கூர்–துனிகூ ரெவ்வமொடு"

கழி– "காமங் கழிகண்ணோட்டம்"

சால வென்பது சாலென்னுமுரிச் சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக் குறிப்பு.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– சால .... கழி–சாலவென்பது முதலாகிய இவ்வாறுரிச் சொற்களும், – மிகல் – மிகுதியாகிய ஒரு குணத்தையுணர்த்தும் உரிச்சொற்கள்.

வ–று.:–

சால---"பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி"

உறு---"உறுவளிதுரக்கு முயர்சினைமாவின்"

தவ---"தவச்சேய் நாட்டா ராயினும்"

நனி---"வந்துநனிவருந்தினை வாழிய நெஞ்சே"

கூர்---"துனிகூ ரெவ்வமொடு"

கழி---"காமங் கழிகண் ணோட்டம்"

சாலவென்பது சாலென்னு முரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக் குறிப்பு.

வை.மு. சடகோபராமாநுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: சால....கழி – இந்த ஆறும், மிகல் – மிகுதியாகிய ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம், எ–று.

உ–ம்.:

சால–சாலப்பலர்	நனி–நனிபேதை
உறு–உறுபுகழ்	கூர்– கனிகூர்மனம்
தவ– தவப்பல	கழி– கழிபெருங்காதல்

சால என்பது சால் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த குறிப்பு

வினையெச்சம். சால் எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாமல், **'சால'** என வினையெச்சமாகச் சூத்திரஞ் செய்தது, இவ்வுரிச் சொல்லி னடியாக மற்றை வினை விகற்பங்களெல்லாம் தோன்று மென்றற்கு. சால் – **'சீர்சால கத்தியன்'**

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– சால....கழி – சாலவென்பது முதலாகிய இவ்வாறுரிச் சொற்களும், **மிகல்** – மிகுதியாகிய ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச் சொற்களாம். **எ–று.**

உம்.:–

சால – "பருவந்து சாலப் பலகொலென் றெண்ணி."

உறு – "உறுவளி துரக்கு முயர்சினை மாவின்."

தவ– "தவச்சேய் நாட்டா ராயினும்."

நனி – "வந்துநனி வருந்தினை வாழிய நெஞ்சே."

கூர் – "துணிகூர் எவ்வமொடு."

கழி – "காமங் கழிகண்ணோட்டடம்."

'சால'வென்பது சாலென்னுமுரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சக்குறிப்பு. 'சால்' எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது 'சால' என வினையெச்ச குறிப்பாகச் சூத்திரஞ் செய்தது இந்த உரிப்பெயரடியாக வினைவிகற்பங்களெல்லாம் தோன்றுமென்றற்கு. இது 'உடம்பொடு புணர்த்தல்' என்னும் உத்மதி.

கா.நமச்சிவாய முதலியார்

சால.... கழி – சால உறு தவ நனி கூர் கழி ஆகிய இவ்வாறு உரிச்சொற்களும், மிகல் – மிகுதியாகிய ஒரு குணத்தை யுணர்த்துகின்ற உரிச்சொற்களாம்.

உதாரணம்

பருவந்துசாலப் பலகொலென்றெண்ணி	– சால
உறுவளிதுரக்கு முயர்சினை மாவின்	– உறு
தவச்சேய் நாட்டா ராயினும்	– தவ
நனிபேதையே நயனில் கூற்றம்	– நனி
பொறைநில்லா நோய்கூரப்புல்லென்ற நுதல் இவள் சினனே	
காமம் கழிகண் ணோட்டம்	– கழி.

சால் எனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது சால எனக்குறிப்பு வினையெச்சமாகச் சூத்திரஞ் செய்தது, இந்த உரிப்பெயரடியாக வினைவிகற்பங்களெல்லாம் பிறக்கும் என்பது தோன்ற **உடம்படு புணர்த்தலாம்** என்க.– கூர்.

மோசகூ பொன்னையா

சால, உறு, தவ, நனி, கூர், கழி, மிகல் என்னும் ஆறும் மிகுதிப் பொருளுணர்த்தும் உரிச் சொறளாம் **எ–று.**

1. பருவந்து சாலப் பலகொல்லென் றெண்ணி[1] – சால
2. உறுவளி தூக்கு முயற்சினை மாவின்[2] – உறு
3. தவச்சேய் நாட்டா ராயினும்[3] – தவ
4. நனிபே தையே நயனில் கூற்றம்[4] – நனி
5. பொறைநில்லா நோய்கூரப் புல்லென்ற நுதலிவள்[5] –கூர்
6. சினனே காமங் கழிகண் ணோட்டம்[6] – கழி

சால உறு முதலியன வினையெச்சக் குறிப்பு உருவினதாக இருப்பினும், அவற்றுள் பொருட்கு உரித்தாகித் தற்பொருள் உடைய உரிச்சொல்லை அறிவு நுட்பத்தாற் பிரித்தறிந்தே இஃது உரிச்சொல் என உணர்தல் கூடும். சங்கரநமச்சிவாயர் 'சாலெனப் பண்படியாகச் சூத்திரஞ் செய்யாது சாலவென வினையெச்சக் குறிப்பாகச் செய்தல் அவ்வுரிப் பெயரடியாக வினைவிகற்பங்க ளெல்லாம் பிறக்குமென்பது தோன்ற உடம் பொடு புணர்த்தலாமென்க' என உரைத்தவற்றை 'அனைத்துப் பெயர்களும் வினைவிகற்பங்களு மெல்லாம் பிறக்கும்' என்ற திருத்தத்தோடு ஏற்க. தொல்காப்பியர், 'முன்னும் பின்னும் வருபவை நாடி' உரிச்சொல்லைக் காண்க என விதித்ததால் சால என்பதன்கண் உரிச்சொல் சால் என்பதாகும் எனத் துணிவதோ டமைதியுறாமல், சான்றோர் ஆன்றோர்; என்னும் மொழிவழக்கு நோக்கி, சகர ஒற்றை முன்வந்த ஒலித்துணை என நீக்கி, உரிச்சொல்லின் உருவம் ஆல் என்பதே எனக் கொள்வதும் பொருந்துமெனில் அவ்வாறுங் கொள்க.

தொல்காப்பியர்

அவை தாம்,
உறுதவ நனியென வரூஉ மூன்று
மிகுதி செய்யும் பொருள வென்ப,

என்றே ஓதினார். இவற்றை மேல் எடுத்துக்காட்டப்பட்ட முறையன்றி, உறுபலர், தவப்புகழ், நனிமனம் என்றோ பிறவாறோ

குறிப்புகள்.:–

1.வளையாபதி;
2. கலி. 84;
3. நற். 115,
4. புறம்.227,
5. கலி. 3;
6. பதிற்.22.

கூறின், பொருள்மரபு முரணுமாதலின் தொல்காப்பியர், 'தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே' என்றார் எனவும், அவர், 'உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய' என்றது சாலமுதலியன இவ்வாறு அடுத்து வரும் பெயர்களை விசேடித்து நிற்கும் இயல்பை அறிவுறுத்தவே எனவும் கொள்க.

(15)

456. கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை[1] யாப்பு
வரைவே மன்றல் கரிப்பி னாகும்

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யாப்பு
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்

kati en̲ kil̲avi kāppē kūrmai
viraiyē vil̲akkam assam siṛappē
viraivē mikuṭi puṭumai ārṭṭal
varaivē man̲ṛal karippin̲ ākum

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

Word expressing many qualities

The word 'kati' denotes protection, sharpness, fragrance, explication, fearfulness, beauty, abundance, freshness, sonorousness, rejection, marriage and pungency.

ஒப்புமைப் பகுதி

கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்ச முன்தேற்று ஆயீ ரைந்தும்
மெய்படத் தோன்றும் பொருட்டா கும்மே

(தொல். சொல்.: 383)

பாட வேறுபாடு.:-

1. யாத்தல்

கடியென் கிளவி வரைவே கூர்மை
காப்பே புதுமை விரைவே விளக்க
மிகுதி சிறப்பே யச்சமும் தேற்றோடு
ஐயமும் கரிப்பும் மணமும் அறைதலும்
முறையென மொழிப முறையுணர்ந் தோரே

(இ.வி.: 282: 11–15)

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரைவே விளக்க மிகுதிப் பொருள

(மு.வீ.: 689)

மயிலை நாதர்

எ–ன், பலபண்பிற்குரிய ஒரு சொல் உணர்த்துதல் நுதலிற்று

இ–ள்.:– கடி யென்னஞ் சொல் இப் பதின்மூன்று பொருட் கண்ணும் வரும், எ–று.

வ–று.:–

"ஒண்சுடர் நல்லி லருங்கடி நீவி" (அகநா.7) என்பது காப்பு. "கடிநுனைப்பகழி" என்பது கூர்மை. "கடிமாலைசூடி" (சீவக 1574) என்பது, நாற்றம். "கண்ணாடி யன்ன கடிமார்பன்" (சீவக 2327) என்பது விளக்கம். [1]"கடியாமங்காக்குங் கைவிளக்காகி" என்பது அச்சம். கடிமலர் மிசை பூத்துக் கம்புளோ டன்ன மார்க்கும்" என்பது விரைவு. "கடுங்கா லொற்றலிற் சுடர்சிறந் துருத்து" (பதிற் 25:6) என்பது மிகுதி. "கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்" (குறுந். 105) "அளந்தறியாப் பலபண்டம் வரம்பறியாமல் வந்தீண்டி, அருங்கடிப் பெருங் காப்பின்" (பட்டின.131–3) என்பது யாப்புடைய காப்பு. "கடித்துக் கரும் பினை" (நாலடி.156) எனவும் "ஊர்கடிந்தார்" எனவும் வரும் இவை வரைதற்கண் வந்தன. கடிவினை முடிகென நொடியினு ளெணிநனி" என்பது மணத்தின் கண்வந்தது; "கடிமிளகு தின்ற கல்லா மந்தி" என்பது காழ்க்குமிள கென்ற வாறு.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், பலகுணம் தழுவிய உரிச்சொல்லுள் ஒன்று உணர்–ற்று.

பாட வேறுபாடு.:–

1. கடியர மகளிர்க்குக் கைவிளக்காகி

இ–ள்.: கடி என்னும் உரிச்சொல் காப்பு முதலிய பதின்மூன்று குணத்தையும் உணர்த்தும், **எ–று.**

வ–று.:–

"ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவி" என்பது காப்பு

"கடிநுனைப் பகழி" என்பது கூர்மை

"கடிமாலை சூடி" என்பது நாற்றம்.

"கண்ணாடியன்ன கடிமார்பன்" என்பது விளக்கம்.

"கடியர மகளிர்க்கே கைவிளக் காகி" என்பது அச்சம்.

" கடிமலர் மிசைபூத்துக் கம்புளோ டன்னம் ஆர்க்கும்" என்பது சிறப்பு.

"நும் அம்பு கடிவிடுதும் நம் அரண் சேர்மின்" என்பது விரைவு.
"கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்" என்பது மிகுதி.

இது புதிதுண் கடவுள் என்றுமாம். " கடி முரசு" என்பது ஆர்த்தல். "கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி" என்பது வரைவு. "கடிவினை முடிகென" என்பது மன்றல். " கடி மிளகு தின்ற கல்லா மந்தி" என்பது கரிப்பு.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பல பண்பிற்குரிய உரிச்சொல் இதுவெனக் கூறுகின்றது.

இ–ள்.: கடியென் கிளவி – கடியென்று சொல்லப்படும் **உரிச்சொல், காப்பு** – ஒண்சுடர் நல்லி லருங்கடி நீவி (அகம் 7) எனக் காப்புப் பொருண்மையிலும், **கூர்மை** – கடிநுனைப் பகழி" எனக் கூர்மையின் கண்ணும், **விரையே** – "கடிமாலை சூடி"(சீவக. 1574) என நாற்றத்தின் கண்ணும், **விளக்கம்** – " கண்ணாடி யன்ன கடிமார்பன் "(சீவக 2327) என விளக்கத்தின் கண்ணும், **அச்சம்** – கடியர மகளிர்க்கும் கைவிளக்காகி" என அச்சத்தின் கண்ணும், **சிறப்பே**– "கடிமலர் மிசை பூத்துக் கம்புளோடன்ன மார்க்கும்" எனச் சிறப்பின்கண்ணும், **விரைவே** – எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்"(புறம். 9) **மிகுதி** – "கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல் (குறு 105) **புதுமை** – புதிதுண்ட கடவுள் எனப் புதுமைக்கண்ணும், **ஆர்த்தல்**– அளந்தறியாப் பல பண்ட..... அருங்கடிப் பெருங்காப்பின் (பட்டின 131–33) என யாப்புடைக் காப்பின் கண்ணும், **வரைவே** – கடித்துக் கரும்பினை (நலாடி 156) ஊர் கடிந்தான் என வரைதற்கண்ணும், **மன்றல்** – கடிவினை முடிகென நொடியினில் என மணத்தின்கண்ணும் **கரிப்பின்** – கடிமிளகு தின்ற கல்லாமந்தி எனக் கரிப்பின்கண்ணும், **ஆகும்** – என இப்பதின்மூன்று பொருண்மைக் கண்ணும் வரும், **எ–று.**

விசாகப் பெருமாளையர்

இது, பலகுணந் தழுவிய உரிச்சொற்களுள் ஒன்றுணர்த்துகின்றது,

இ–ள்.:– **கடியென்கிளவி** – கடியென்னு உரிச்சொல், **காப்பு**– காவலும், **கூர்மை** – கூர்மையும், **விரை** – வாசனையும், **விளக்கம்**–விளக்கமும், **அச்சம்**– அச்சமும், **சிறப்பு** –சிறப்பும், **விரைவு** –விரைவும், **மிகுதி**–மிகுதியும், **புதுமை** – புதுமையும், **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு**–நீக்கலும், **மன்றல்**–மணமும், **கரிப்பின்** – கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், **ஆகும்**–வரும், எ–று.

வ–று.:–

கடிநகர்காப்பு, கடிநுனைப்பகழி–கூர்மை. கடிமாலை– நாற்றம். 'கண்ணாடியன்ன கடிமார்பன்'– விளக்கம். 'கடியர மகளிர்க்கே கைவிளக்காகி' – அச்சம். விழாக்கடி – சிறப்பு. 'எம்மம்புகடி விடுதும்'– விரைவு. 'கடியுண்கடவுட் கிட்ட செழுங்குரல்' – மிகுதி. இதுபுதிதுண்கடவு ளென்றுமாதலால் புதுமை. கடிமுரசு – ஆர்த்தல். 'கடித்துக்கரும்பினைக் கண்ட கரநூறி' – வரைவு. 'கடிவினைமுடுகி'–மன்றல். 'கடிமிளகுதின்ற கல்லாமந்தி' – கரிப்பு.

வ–று.:–

''கோவலர்வாய் மாற்ற முணர்ந்து''

''இரு பிறப்பாளர் பொழுது அறிந்து நுவல''

''தெருண்டாரவை செப்பலுற்றேன்''

''உரைப்பார் உரைப்பவை யெல்லாம்''

''அறங்கரை நாவின் நான்மறை முற்றிய''

''அஞ்சொற் பெரும்பணைத்தோள் ஆயிழையாள்
தான் நொடியும்''

''நசையு நர்க்கு அடையா நன்பெரு வாயில் இசையெனப் புக்கு''

''உற்றது நாங்கள் கூற உணர்ந்தனை''

''புகன்ற அன்றியும் புற மிக வருமே''

''காமம் செப்பாது கண்டது மொழிமோ''

''கிளக்கும் கிளவி பாண கேளினி''

''மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்''

''அறிவன தடிதொழுது அறைகுவன் எண்ணே''

''ஒருவன் செய்தி கொன்றார்க் குய்தியில்லென அறம்பாடின்றே'' ''வார்த்தை பகர்குற்றேன்''

''இடிபோல இயம்பி னானே'' என முறையே காண்க.

ஆ- முத்துத்தம்பிப் பிள்ளை

பலகுணந்தழுவிய உரிச்சொற்களுள் கடியென்னுஞ்சொல் எத்தனை பொருளில் வரும்?

கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சஞ் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
வரைவே மன்றல் கரிப்பின் ஆகும்.

இ—ள்.:— கடியென்னுமுரிச்சொல் காவலும் கூர்மையும் வாசனையும் விளக்கமும் அச்சமும் சிறப்பும் விரைவும் மிகுதியும் புதுமையும் ஒலித்தலும் நீக்கலும் மணமும் கரிப்புமாகிய பதின் மூன்று குணங்களிலும் வரும். **எ—று.**

வ—று.:—

"கடிநகரடைந்து"........................... காப்பு.
"கடிநுனைப்பகழி"................................ கூர்மை.
"கடிமாலைசூடி".. நாற்றம்.
"கண்ணாடியன்ன கடிமார்பன்".......... .விளக்கம்.
"கடியரமகளிர்க்கே கைவிளக்காகி"...... அச்சம்.
"அம்புதுஞ்சுங்கடியரண்".................. சிறப்பு.
"எம்மம்பு கடிவிடுதும்"..................... விரைவு.
"கடியுண் கடவுட்கிட்ட செழுந குரல்"..... மிகுதி.
"கடிமணச்சாலை"............................... புதுமை.
"கடிமுரசு".. ஆர்த்தல்.
"கடிமதுநுகர்வ"............................... வரைவு.
"கடிவினைமுடுகினி"........................... மன்றல்.
"கடிமிளகுதின்ற கல்லாமந்தி"................ கரிப்பு.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது,

இ—ள்.:— முழக்கு முதலிய இருபத்திரண்டும் இவை போல்வன பிறவும் ஓசை

யென்னு மோர் குணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம், எ–று.

வ–று.:–

முழங்கடல் ஒலிக்கின்றகடல், குடிஞையிரட்டும் – ஆறு ஒலிக்கின்றது, ஒலிக்குமொலி, கலிகெழு மூதூர் – ஒலி பொருந்திய பழையவூர், பறையிசையருவி – பறைபோலொலிக்கும் அருவி, (தோல்துவைத்தல்) தோறுவைத்தல் தோலொலித்தல், பிளிறுவார் முரசம்– ஒலிக்கின்ற வார்முரசம், இரைக்குமஞ் சிறைப்பறவைகள் ஒலிக்கின்ற அழகிய சிறைகளையுடைய பறவைகள், இரங்கு சினவேழம்–ஒலிக்கின்ற கோபத்தையுடையயானை, மாரிய முங்கினமூதூர் மேகம்முழுங்கிய மூதூர், முரசமதியம்ப– முரசம் ஒலிக்க, இழிழ்கடல்–முழுங்குகடல், குளிறுமுரசம்–ஒலிக்கின்ற முரசம், களித்ததிருங்கார் – களித்து முழுங்கும் மேகம், குரைபுனல்– ஒலியையுடைநீர், கனைகடல் – ஒலிக்குங்கடல், சிலைத்தார் முரசம்– ஒலித்து நிறைதரு முரசம், கம்மை மிகுதக்கணநாடு – ஒலிமிகுந்த தென்னாடு, கவ்வை நீர்வேலி– ஒலிக்கின்ற நீர்சூழந்தபூமி, வினைக்கம்பலை–தொழிற் செய்யு மொலி, அரவத்தானை– முழுக்கத்தை யுடையசேனை, ஆர்த்த பல்லியம்–ஒலித்தன பல வாத்தியம், என முறையே காண்க. இவை போல்வன பிற வென்றதினாலே உரு என்பது அச்சத்தையும் புரை எது உயர்வையும் உணர்த்தும் உதாரணம் உருகெழு ஞாயிற் றொண்கதிர்–அச்சம் பொருந்திய சூரியகிரணம், புரையோர் கேண்மை – உணர்ந்தோர் நட்பு என வரும்.

(சூத்திரம்) உருவுட்காகும் புரையுயர்வாகும் எனவும், குரு–கெழு என்பன நிறத்தையுணர்த்தும்.

உ–ம்.:

குருமணித்தாலி நிறம்பொருந்திய மணித்தாலி, கேழ்கிளரகலம்– நிறம் பொருந்திய மார்பு என வரும். கெழு கேழ் என விகாரப்பட்டு நின்றது. குருகு ரூஉ என நீண்டள பெடுத்து நிற்றலும் கொள்க. இன்னும் கெழு வென்பது வேல்கெழுதடக்கை எனப் பொருத்தத்தை யுணர்த்தலுங் கொள்க.

குருவுங்கெழுவுநிறனாகும்மே செல்லல் இன்னல் என்பன துன்பத்தை யுணர்த்தும்.

உ–ம்.:– அணங்கிய செல்லல் – வருந்திய துன்பம், வெயில் புறந்தரூ உமின்னலியக்கத்து வெயில் வெளியிலே துன்பந்தரும் பிரயாண நடையிலே.

செல்லலின் னலின்னாமைய்யே எம், அலமரல் தெருமரல் என்பன சுழலுதலை யுணர்த்தும்.

உ—ம்.:—

அலமரலாயம் – சுழலுதலையுடைய பெண்கூட்டம். தெருமரலுள்ள மோடன்னை துஞ்சாள்—மறுகிய நெஞ்சமோடன்னை யுறங்காள்

அலமரறெருமரலாயிரண்டுஞ்சுழற்சி எ—ம், மழவுங்குழவும் இளமையை யுணர்த்தும்.

உ—ம்.:—

மண்யாத்த கோட்டமழகளிறு (நிலத்துப்பாய்தலால்) மண்கட்டிய கொம்புகளையுடைய இளமை பொருந்திய யானை,

குழக்கன்று – இளங்கன்று மழவுங்குழவுமின்மைப் பொருள் எனவும், கதழ்வு துனைவு என்பன விரைவுணர்த்தும்.

உ—ம்.:—

கதழ்பரி நெடுந்தேர்—வேகம்பொருந்திய குதிரை கட்டிய நெடுந் தேர்,

துனைபரி துரக்குந் துஞ்சாச் செலவின் – வேகமாகக் குதிரையை நடத்துகின்ற தூங்காப் பிரயாணத்தில்.

கதழ்வுந்துனைவும் விரைவின் பொருள் எனவும், அதிர்வு விதிர்ப்பு என்பன நடுக்கத்தையுணர்த்தும்.

உ—ம்.:—

அதிர வருவதோர் நோய் – நடுங்க வருவதோர் நோய், விதிர்ப்புறவறி யாவேமக்காப்பு – நடுங்குறலறியாத வின் பக் காவல். அதிர்வும் விதிர்ப்பு நடுக்கஞ்செய்யும் எனவும்,

வார்தல் போகல் ஒழுகல் என்பன நேர்வையும் நெடுமையை யுமுணர்த்தும்.

உ—ம்.:—

வார்ந்திலங்கும் வையெயிற்றரிவை – நேராகி விளங்குங்கூர்மை பொருந்திய பல்லுக்களை யுடைய மாது,

வார் மணலடைகரை – நீண்ட மணலடைகரை, போகுகொடி மருங்குல்— நேராகிய கொடிபோன்ற இடை,

திரிகாயவிடத் தேரொடுகாரு டைபோகி – திரிந்த காய்களை யுடையனவாகிய விடத்தேரென்னும ரத்தோடு கருவேலமரமும் நீண்டு,

ஒழுகுகொடிமருங்குல் – நேராகிய கொடி மருங்குல், மால்வரை

யொழுகியவாழை – பெருமை பொருந்திய மலையிலே நீண்ட வாழை.

வார்தல் பேகலொழகன்மூன்று, நேர்வு நெடுமையுஞ் செய்யும் பொருள எனவும், கெடவரல் பண்ணையென்பன விளையாட்டுக் கறிப்புணர்த்தும்.

உ–ம்.:–

கெடவரலபாயமோடு விளையாட்டுக் குறிப்புடையமாதர் கூட்டத் தோடு, பண்ணைத்தோன்றிய விளையாட்டுக் குறிப்பிற்றோன்றிய.

கெடவரல் பண்ணையாயிரண்டும் விளையாட்டு எனவும், தடவு பெருமையும் வளைவையுமுணர்த்தும்.

உ–ம்.: –

தடக்கை – பெருமை பொருந்திய கை தடமருப் பெருமை – வளைந்த கொம்புகளையுடைய எருமை, கயவு – பெருமையையு மேன்மையை யுமுணர்த்தும்.

உ–ம்.:–

கயவாய்–பெருவாய், கயந்தலை – மேன்மையாகிய தலையினை யுடைய யானைக்கன்று, இது அன்மொழித்தொகை. நளி– பெருமையையுஞ் செறிவையுமுணர்த்தும்.

உ–ம்.:–

நாளிமலை நாடன் பெருமை பொருந்தியமலை நாடன், நளிகொடண்கதை – செறிவு கெண்ட குளிர்ச்சி பொருந்திய வமிர்தம்.

தடவுங்கயவு நளியும் பெருமை, அவற்றுட்டட வென்கிளவி கோட்டமுஞ் செய்யும், கயவென்கிளவி மேன்மையுஞ் செய்யும், நளியென்கிள விசெறிவுமாகும், எனவும், பழுது பயனின்மை யையும் சாயல் ஐம்பொறியாலனுபவிக்கப்டும் மேன்மையையு முணர்த்தும்.

உ–ம்.:–

பழுது கழிவாழ் நாள் – பிரயோசன மில்லாமலே கழிந்த வாழ்நாள், மயிற்சாயல்மகள்–மயில்போன்ற மேன்மையை யுடைய மகள். இது ஒளியாற் பிறந்த மேன்மை, சாயன்மார்பு– இது பரிசத்தாற் பிறந்த மேன்மை, அமிர்தன்னசாயல் என்பது தன்னையனுபவித்தவர் பிறிதொன்றை யனுபவித்தற்கு ஏதுவாகாமையை யுணர்த்திற்று. உணர்த்தவே, இ ரத முதலிய பல மேன்மைகளு மிதனுளடங்கி நின்றன, ஒழிந்தவன வந்த வழிக் காண்க.

உ—ம்.:—

கழுமியஞாட்பினுள்—மயங்கியபோரினுள், கமஞ்சூன் மாமழை நிறைசூற் கொண்ட பெருமை தங்கியமேகம், கவ்வுக்கடுங் குரையள்—அகத்திட்டவேகம் பொருந்திய குதிரையை யுடையாள், குதிரை குரை என இடைக்குறைந்து நின்றது.

பாய்ச்சலில் குதிரை தனக்குட்படத் தான் வெளிப்பட்டு நிற்றல் கருத்து. ஆரங்கவை இ யமார்பு — மாலையையகத் திட்டமார்பு என எச்சமாங் காலத்து திரிந்து நிற்கும்.

கழு மென்கிளவிமயக்கஞ் செய்யும் கம நிறைந்தியலும் கவ்வகத் திடுவே எனவும் ஞெமிர்தல் பாய்தல் என்பன பரத்தலாகிய குறிப்பையுணர்த்தும்.

உ—ம்.:—

கருமணல் ஞெமிரிய திருநகர் முற்றத்து— கருமணல் பரந்த திருநகர் முன்றிலில், புண்ணுமிழ் குருதி முகம் பாய்ந்திழதர — புண்ணிலே நின்றுமிழிகின்ற இரத்தமுக மெல்லாம், பரந்து ஒழுக, வில்ஞொமிர்ந்தது—என ஞெமிர்தல் ஒடிதலிலும், நீர் பாய்கழனி பாய்மான்றேர்— எனப் பாய்தல் ஒழுகலிலுந் தாண்டுதல் குதித்த லிலும் வரும்.

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள் எனவும், கவர்வு சேர் வியல் என்பன முறையே விருப்பமும் திரட்சியும் அகலமுமாகிய குறிப்பையுணர்த்தும்.

உ—ம்.:—

கவர்நடைப்புரவி — கண்கவர் வனப்பு விரும்பத்தக்க நடையினை யுடைய குதிரை, கண்விரும்பப்படும் அழகு எனக் கவர்வு விருப்பத்தை யுணர்திற்று. கொள்ளை மாந்திரின்னா து கவரும்— கொள்ளையிடுவோர் துன்புறங் கைக் கொள்ளும் எனக் கவர்தல் கைக் கொள்ளுதலிலும் வரும்.

சேர்ந்து செறிகுரங்கின்— திரண்டு நெருங்கிய குரங்கின் எனக்சேர் திரட்சியை யுணர்த்திற்று. ஊரைச்சேர்ந்தான் ஊரையடைந்தான் என அடைதற் பொருளு ணர்த்தி முதனிலையாகவும் நிற்றல் கொள்க.

இருக்கல்வியலறை — பெருமை பொருந்திய அகன்ற கற்பாறை என வியல் அகலத்தை யுணர்த்திற்று. இது வியனுலகத்து என லகரவொற்று னகர வொற்றாகத் திரிந்து நின்றும் அகலத்தை யுணர்த்து மெனக்கொள்க. கவர்வு விருப்பமாகும் சேரே திரட்சி

வியலென் கிளவியகலப் பொருட்டே, எனவும், பேம் நாம் உரும் என்பன அச்சங் குறிப்புணர்த்தும்.

உ–ம்.:–

மன்றமராத்தபேமுதிர்கடவுள் – ஊர்ப்பொது மரத்திலிருக்கின்ற அச்சமுற்றியகடவுள் நாமநல்லார்க்கு அச்சத்தையுடைய மகளிர்.

உ–ம்.:–

கோடுபலமுரஞ்சிய கோளியாலத்து – கோடுபல முதிர்ந்த அத்தி மரத்திலும் ஆல மரத்திலும், ஏம வெங்காமம் – இன்பத்தை தரும் விருப்பத்தையுடை காமம்.

முரஞ்சன் முதிர்வே வெம்மை வேண்டல் எனவும், ஏற்றம் எது நினைவிலுந் துணிவிலும் வரும்.

உ–ம்.:–

கானல ஞ்சேர்ப்பன் கொடுமையேற்றி – நெய்தல்தலைவன் கொடுமையை நினைத்து, ஏற்றமிலாட்டி– துணிவிலாமனையாள், இது ஏற்றத்தாழ்வு என மிகுதியிலும், ஆனையேற்றம் குதிரை யேற்றமென ஏறுதலிலும் வரும்.

ஏற்றநினைவுந்துணிவுமாகும் எனவும், எய்யாமை என்பது அறியாமையை யுணர்த்தும்.

உ–ம்.:–

எய்யாமையல்லை நீயும் வருந்துதி– அறியாமையை யுடையை யல்லை நீயும் வருந்திகின்றாய்.

எய்யாமையேயறியாமையே, எனவும், நன்று என்பது பெரிதென் னுங் குறிப்புணர்த்தும். தெவு எது கொள்ளுதற் குறிப்புணர்த்தும்.

உ–ம்.:–

நன்றுமரிதுற்றனை – பெரிதுமரிதாக வந்தனை, நீர் தெவு நிரைத் தொழுவர்– நீர்கொள்ளும் பொருட்டு வரிசையாக நின்றமருத நிலமாக்கள்.

நன்று பெரிதாகுந் தெவுக் கொளற் பொருட்டே எனவும், விறப்பு உறப்பு வெறுப்பு என்பன செறிவுக் குறிப்புணர்த்தும்.

உ–ம்.:–

விறந்த காப்பொடு – செறிந்த காவலோடு, இடையறாக்காவ லென்பது கருத்து, உறந்த விஞ்சியுயர் நிலைமாடத்து செறிந்த கோட்டை மதிலின் மேலுயர்ந்த நிலைவீட்டில், வெறுத்தகேள் வி விளங்கு புகழக்கபிலன்–செறிந்த கேள்வியையும் விளங்கு

புகழையுமுடைய கபிலன், இவற்றுள் விறப்பு – அச்சத்தையு முணர்த்தும்.

உ–ம்.:–

அவலெறியுலக்கைப்பாடுவிறந்து – அவலிடியுலக்கைத் தொழி லினையஞ்சி, இன்னும் – உறப்பு ஊட்டியையுறந்தது புலி– தொண்டையைக் கடித்துத் திறந்ததுபுலி எனப்புண் படக்கிழித்துத் திறத்தலிலும், உறக்குத் துணைய தோராலம் வித்து– சுருங்கி யவள வினையுடையதோர் ஆலம் வித்து – எனச் சுருக்கத்தை யுணர்த்துதலும், வெறுப்பு – வெறுத்தஞானி வீட்டை யடைந் தான்– உலகத்தை யருவருத்த ஞானி மோக்கத்தை யடைந்தான், என அருவருப்பையும் சினத்தையும் வேண்டா மையையு முணர்த்தலுங் கொள்க.

(சூ) விறப்புமுறப்பும் வெறுப்புஞ்செறிவே, அவற்றுள் விறப்பே வெரூ உப்பொருட்டுமாகும் எனவும், கழும் என்பது மயக்கக் குறிப்பையும், கமம் என்பது நிறைவாகிய குறிப்பையும், கவ் என்பது அகத்திட்ட குறிப்பையுமுணர்த்தும். பழுது பயமின்மை சாயன் மேன்மை எனவும், முழுது – குறைவில்லாமையையும், வம்பு – நிலையில்லாமையையும், மாதர் – ஆசையினையு முணர்த்தும்.

உ–ம்.:–

மண்முழுதாண்ட – நிலமுழுமையும் ஆண்ட, வம்புமாரியைக் காரென மதித்து – நிலையில்லா மேகத்தைக் கண்டு கார்கால மென்றெண்ணி, மாதர் கொண்மானோக்கின் ஆசையைக் கொண்ட மான்போன்ற விழிகளையுடைய.

(சூ) முழு தென்கிளவியெஞ்சாப்பொருட்டே, வம்புநிலையின்மை மாதர் காதல் எனவும், நம்பு மேவு என்பன ஆசையையுணர்த்தும்.

உ–ம்.:–

நன் மொழி நம்பி – நல்வார்த்தையை விரும்பி, நவிர மேவுங் காரிகை – மயிலுமாசைப் படுகின்ற மாது, நம்பென்பது இக்காலத்து – இதை நம்பு என உறதியிலும் நம்பத்தக்க மனிதன் எனத் தெளிவிலும் உன்னை நம்பினேன் என ஒருமைப்பாட்டிலும், நம்பினவரை நட்டாற்றிற் கை விட்டான் எனச் சார்ந்து கீழ்ப்படி தலிலும் வருதல் **புதியன புகுதல்.**

நம்புமேவுநசையாகும்மே எனவும்,

நசை ஆசையென்பதை வரநசை இயின்னுமுளேன் – என்னும்

இதினாலுணர்க. ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாய்தல் என்பன உள்ள தினுணுக்கத்தை யுணர்த்தும்.

உ–ம்.:–

ஓய்களிறு – உள்ள யானைகளில் இது நுணுகிய யானை, பாய்ந்தாய்ந்ததானை – பரந்த ஆராய்ந்தெடுத்த சேலை, நிகழ்த்தயானை மேய்புலம் படா – நுணுகி யானை மேயுமிடந் தேடிச் செல்லாது, செருக்கியுண்ணக் கவள மூட்டிப் போற்றுவ ரென்பது கருத்து. வேகந் தங்கிய நீர் நுணுகி, கலங்கிய கயலறலெதிரக் கரும்புனல் சாஅய் – மீன்களுங் கடலின் அலைகளுமெதிர்க்கப் பாய்ந்த வேகந் தங்கிய நீர் நுணுகி கலங்கிய நீர் தெளிந் தென்பது கருத்து. இந்த நுணுக்கத்தை ஆயிழை யெனச் செய்யுளிலே பெருவழக்காக வழங்கிவருகின்ற இதினாலே யுணர்க. எவ்வாறெனின் ஒரு சாதியாயுள்ள பல ஆபரணங்களி லொன்றைக் கண்ணோட்டக்காரன் தெரிந் தெடுத்தபோது மற்ற ஆபரணங்களெல்லாம் பரும் படியாதலால் இது உள்ளதினுணுகிற்றென்க.

நுண்ணறி வென்பதையு மிவ் வாறே மற்றப்பரும்படியறிவுகளை நோக்கி நுணுகிற் றெனவுய்த் துணர்ந்து கொள்க. இக்காலத்து ஓய்தல் செயலறலிலும், விடாய்த்தலிலும் ஆய்தல் தேடுதலிலும் ஆராய்தலிலும் சாய்தல் கண்ணோட்டத்திலும் நீதிதவறுதலிலும் கோணுதலிலும் வருதல் காண்க.

ஓய்தலாய்தனிழத்தல்சா அ யாவயினான்கு முள்ள தனுணுக்கம் எனவும் முரஞ்சல் முதிர்விலும் வெம்மை விருப்பத்திலும் வரும்.

க்கு. இதில் நாம் என்பது நாமனெத் திரிந்து நின்றது. உருமில் சுற்றமோடு அச்சமில்லாத சுற்றத்தோடு

பேநா முரு மெனவரூ உங்கிளவி யாமுறை மூன்று மச்சப்பொருள– எனவும்,

துயவு என்பது அறிவு விகாரப்படுதலும் உயா என்பது வருத்தமும் உசா என்பது சூழ்ச்சியும் வயா–என்பது– ஆசைப் பெருங்கமுமா கிய குறிப்புணர்த்தும்.

உ–ம்.:–

துயவுற்றேம்யாமாக – யாங்கள் அறிவு விகாரப்பட்டனமாக, பருந்திருந்துயாவிளி பயிற்றும். பருந்து இருந்து வருதத்திற்கே துவாகிய கூப்பாட்டைச் செய்யும், உசாத்துணை–மந்திரி, உசா– மந்திராலோசனை வயாவும் வருத்தமுமின்றக் கானோவும்

ஆசைப்பெருக்கமும் துன்பமும் ஈன்றபோது நோவும் இங்கே ஆசைப்பெருக்கமென்றது, கருப்பந் தங்கி வருத்தப்பட்டு உண்ணப்படும் பண்டங்களின் மேலே செல்லுகின்ற ஆசை விரிவை யெனக் காண்க

தூய வென்கிளவியறிவின் றிரிவே உயாவேயுயங்கல் உசாவே சூழ்ச்சி வயாவென்கிளவி வேட்டைப் பெருக்கம் எனவும்,

நொசிவு நுழைவு நுணங்கு என்பன நுண்மைப் பண்புணர்த்தும்.

உ—ம்.:—

நொசிபடுமருங்குல்—நுண்மையாகிய இடை, நுழை நூற்கலிங்கம் – நுண்மையாகிய நூலாலியற்றிய வத்திரம்,

நுணங்கு துகிலுடக்கம் – நுட்பமாகிய ஆடையின் குழைவு,

இனி நுணங்கென்பது நுணங்கு, நுண்கொடிகுழைகின்ற நுண்மையாகிய கொடி எனக் குழைவையுமுணர்த்துதல் கொள்க.

நொசிவுநுழைவு நுணங்கு நுண்மை எனவும், நனவு போர்களமும் அகலமுமாகிய குறிப்புப் பொருளையுணர்த்தும்.

உ—ம்.:—

நனவுப்புகுவிறலியிற்றோன்றுநாடன்— போர்க்களம் புகுந்த பாடுவிச்சி போலத் தோன்று நாடன், நனந்தலையுலகம் – அகன்ற இடத்தையுடையவுலகம், இது புணர்ச்சி விகாரத்தால் மெல்லொற்று மிக்கது. இனி, நனவிற்புணர்ச்சி நடக்க லுமாங்கே என நனவுசாக்கிர அவத்தையையுமுணர்த்தும்.

நனவே களனு மகலமுஞ் செய்யும், எனவும், அமர்தல் யாணு என்பன முறையே மேவுதலும் அழகுமாகிய குறிப்புணர்த்தும்.

உ—ம்.:—

அகனமர்ந்து செய்யாளுறையும் – மனம் பொருந்தியிலக்குமி வாசஞ் செய்வாள், யாணதுபசலை— அழகினை யுடையதுபசலை, அமர்தன் மேவல் யானுக்கவினாகும் எனவும், ஐ—என்பது ஆச்சரியமும் முனை என்பது கோபமுமாகியகு றிப்புணர்த்தும்.

உ—ம்.:—

ஐதேகாமம் – ஆச்சரியமுடையதுகாமம்.

இது, விகுதி பெற்று நின்றது. சேற்று நிலமுனை இயசெங்கட் காரன் – சேற்று நிலத்திலே சினந்து பாயுஞ் செங்கண்ணை யுடைய எருமைக்கடா, இது முனைவு என்றும் பாடம். ஐ

வியப்பாகும் முனை முனிவாகும் எனவும் ஆசிரியர் தொல்காப்பி யனார் கூறுதலுங் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **கடி என் கிளவி** – கடி யென்னு முரிச்சொல், **காப்பு**– காவலும், **கூர்மை**–கூர்மையும், **விரை**– வாசனையும், **விளக்கம்**–விளக்கமும், **அச்சம்** – அச்சமும், **சிறப்பு** –சிறப்பும், **விரைவு**– விரைவும், **மிகுதி**–மிகுதியும், **புதுமை**– புதுமையும், **ஆர்த்தல்**–ஒலித்தலும், **வரைவு**–நீக்கலும், **மன்றல்**–மணமும், **கரிப்பின் ஆகும்** – கரிப்புமாகிய பதினமூன்று குணங்களிலும் வரும், எ–று.

வ–று.:–

"கடிநகரடைந்து"......................	காப்பு
"கடி நுனைப்பகழி"....................	கூர்மை
"கடிமாலைசூடி".......................	நாற்றம்
"கண்ணாடியன்ன கடிமார்பன்"......	விளக்கம்
"கடியரமகளிர்க்கே கைவிளக்காகி"....	அச்சம்
"அம்பு துஞ்சுங் கடியரண்".........	சிறப்பு
"எம்மம்பு கடிவிடுதும்".............	விரைவு
"கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்"....	மிகுதி
"கடிமணச்சாலை".............	புதுமை
"கடிமுரசு"..................	ஆர்த்தல்
"கடிமது நுகர்வ"..................	வரைவு
"கடிவினை முடுகினி"........	மன்றல்
"கடிமிளகுதின்ற கல்லாமந்தி"...........	கரிப்பு

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **கடி என் கிளவி** – கடியென்னுமுரிச்சொல்,–**காப்பு**–காவலும்,– **கூர்மை**–கூர்மையும்,–**விரை**–வாசனையும்,–**விளக்கம்** – விளக்கமும், – **அச்சம்** – அச்சமும், – **சிறப்பு** – சிறப்பும், – **விரைவு** – விரைவும், – **மிகுதி** – மிகுதியும். – **புதுமை** – புதுமையும், – **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு** – நீக்கலும், – **மன்றல்** – மணமும், – **கரிப்பின் ஆகும்** – கரிப்புமாகிய பதின்மூன்று குணங்களிலும் வரும். **எ – று.**

வ–று.:–

"கடிநகரடைந்து"	காப்பு
"கடிநுனைப்பகழி"	கூர்மை

"கடிமாலைசூடி"	நாற்றம்
"கண்ணாடியன்ன கடிமார்பன்" . . .	விளக்கம்
"கடியரமகளிர்க்கேகைவிளக்காகி" . . .	அச்சம்
"அம்புதுஞ்சுங்கடியரண்" . . .	சிறப்பு
"எம்மம்புகடிவிடுதும்" . . .	விரைவு
"கடியுண்கடவுட்கிட்டசெழுங்குரல்" . . .	மிகுதி
"கடிமணச்சாலை" . . .	புதுமை
"கடிமுரசு" . . .	ஆர்த்தல்
"கடிமது நுகர்வ" . . .	வரைவு
"கடிவினைமுடுகினி" . . .	மன்றல்
"கடிமிளகுதின்றகல்லாமந்தி" . . .	கரிப்பு (கரிப்பு – காரம்)

"கண்ணாடியன்னகடிமார்பன்" என்பதற்கு (தன்னை நோக்கு வோர்க்கு அவரது புறத்தைக் காட்டாமல் முற்பக்கத்தைக் காட்டுங்) கண்ணாடியைப் போன்ற (போர்முனையிற் பகை வர்க்குப் புறங்கொடாது தன்னைக் காட்டுஞ்) சிறந்த மார்புடை யுடையவன். என்னுமிப் பொருள் செய்தவழி, கடியென்னு முரிச்சொல் அருமைச் சிறப்புணர்த்தி நின்றது. இதில் போன்ற என்பது மார்பென்பதனோடு தொடர்ந்து நின்றது.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்

சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– கடி என் கிளவி – கடி என்னும் உரிச்சொல், **காப்பு** –காவலும், **கூர்மை** – கூர்மையும், **விரை** – வாசனையும், **விளக்கம்**– பிரகாசமும், **அச்சம்** – பயமும், **சிறப்பு** – உயர்வும், **விரைவு** – வேகமும், **மிகுதி** – மிகுதியும், **புதுமை** – புதுமையும் , **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு** – நீங்கலும், **மன்றல்** – கலியாணமும், **கரிப்பின்** – கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், **ஆகும்** – வரும், எ–று

உ–ம்.:–

காப்பு – கடிநகர், சிறப்பு – கடியரண், வரைவு – கடிமது, கூர்மை –கடிவேல், விரைவு – கடிசென்றான், மன்றல் – கடிவினை வாசனை– கடிமாலை, மிகுதி – கடிகாற்று, கரிப்பு – கடிமிளகு, விளக்கம் – கடிமார்பன், புதுமை – கடிமணம், அச்சம் – கடிப்பேய், ஆர்த்தல் – கடி முரசு, முன்தேற்று – தெய்வம் முதலிய வற்றை முன்நின்று தெளிவித்தல். இப்பொருள் தொல்காப் பியத்துக் கண்டது. பொருளில் வருதல், பழையன கழிதலால்

விலக்கப் பட்டது. கடி என்பது கடுமான், கடும்பகல், கடுங்கால் என திரிந்தும் வரும்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– கடி என் களிவி – கடியென்னுமுரிச்சொல், **காப்பு** – காவலும், **கூர்மை** – கூர்மையும், **விரை**–வாசனையும், **விளக்கம்** – விளக்கமும், **அச்சம்** – அச்சமும், **சிறப்பு** – சிறப்பும், **விரைவு** – விரைவும், **மிகுதி** – மிகுதியும், **புதுமை** – புதுமையும், **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு** – நீக்கலும், **மன்றல்** – மணமும், **கரிப்பின் ஆகும்** – கரிப்புமாகிய பதின்மூன்று குணங்களிலும் வரும். **எ–று.**

வ–று.:–

"கடிநகரடைந்து"...............	காப்பு.
"கடிநனைப்பகழி"	கூர்மை.
"கடிமாலைசூடி"	நாற்றம்.
"கண்ணணாடியன்ன கடிமார்பன்"	விளக்கம்.
"கடியரமகளிர்க்கே கைவிளக்காகி"..........	அச்சம்.
"அம்புதுஞ்சுங்கடியரண்"	சிறப்பு.
"எம்மம்பு கடிவிடுதும்	விரைவு.
"கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்"	மிகுதி.
"கடிமணச்சாலை"	புதுமை.
"கடிமுரசு"	ஆர்த்தல்.
"கடிமதுநுகர்வ"............	வரைவு.
"கடிவினைமுடுகினி"	மன்றல்.
"கடிமிளகுதின்ற கல்லாமந்தி"	கரிப்பு.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ – ள்.;– கடி என்ன கிளவி – கடி என்னும் உரிச்சொல், **காப்பு** – காவலும், **கூர்மை** – கூர்மையும், **விரை** – வாசனையும், **விளக்கம்** – விள்க்கமும், **அச்சம்** – அச்சமும், **சிறப்பு** – சிறப்பும், **விரைவு** – விரைவும், **மிகுதி** – மிகுதியும், **புதுமை** – புதுமையும், **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு** – நீக்கலும், **மன்றல்** – மணமும், **கரிப்பின்** – கரிப்பும் (ஆகிய பதின் மூன்று குணங்களிலும்) ஆகும்– வரும். (எ – று)

பொ – ரை.:– கடி என்னும் உச்சொல் காப்பு முதலிய பதின்மூன்று குணத்தையும் உணர்த்தும்.

உ-ம்.;-

1. கடிநகர்	காப்பு.
2. கடிநுனைப்பகழி	கூர்மை.
3. கடிமாலை	நாற்றம்.
4. கண்ணாடியன்ன கடிமார்பன்	விளக்கம்.
5. கடியரமகளிர்க்கேகை விளக்காகி	அச்சம்.
6. விழாக்கடி	சிறப்பு.
7. எம்மம்புகடிவிடுதும்	விரைவு.
8. கடியுண்கடவுட் கிட்ட செழுங்குரல்	மிகுதி.
9. கடியுண்கடவுட் கிட்ட செழுங்குரல் (இது புதிதுண்கடவுளென்று மாதலால்.)	புதுமை
10. கடிமுர்சு	ஆர்த்தல்
11. கடிமது நுகர்வு	வரைவு.
12. கடிவினைமுடுகி	மன்றல்.
13. கடிமிளகு தின்ற கல்லாமந்தி	கரிப்பு.

கா.நமச்சிவாய முதலியார்

கடி என் கிளவி – கடி என்னும் உரிச்சொல், **காப்பு**– காவலும், **கூர்மை** – கூர்மையும், **விரை** – வாசனையும், **விளக்கம்** – விளக்கமும், **அச்சம்** – அச்சமும், **சிறப்பு** – சிறப்பும், **விரைவு** – விரைவும், **மிகுதி** – மிகுதியும், **புதுமை** – புதுமையும், **ஆர்த்தல்** – ஒலித்தலும், **வரைவு** – நீக்கலும், **மன்றல்** – கலியாணமும், **கரிப்பின்** – கரிப்பும் ஆகிய பதின்மூன்று குணங்களிலும், **ஆகும்** – வரும்.

உதாரணம்:–

1.	கடிநகரடைந்து	–	காப்பு
2.	கடிநுனைப்பகழி	–	கூர்மை
3.	கடிமாலைசூடி	–	நாற்றம்
4.	கண்ணாடியன்னகடிமார்பன்	–	விளக்கம்
5.	கடியரமகளிர்க்கே கைவிளக்காகி	–	அச்சம்
6.	அம்புதுஞ்சங் கடியரண்	–	சிறப்பு
7.	எம்மம்பு கடிவிடுதும்	–	விரைவு
8.	கடியுண்கடவுட்கிட்ட செழுங்குரல்	–	மிகுதி
9.	கடிமணச்சாலை	–	புதுமை

10. கடிமுரசு – ஆர்த்தல்
11. கடிமது நுகர்வ – வரைவு
12. கடிவினைமுடிகென எண்ணி – மன்றல்
13. கடிமிளகுதின்ற கல்லாமந்தி – கரிப்பு

மோசகு பொன்னையா

கடி என்னும் உரிச்சொல் காப்புமுதல் ஈறாகச் சொல்லப்பட்ட பதின்மூன்று குணப்பொருளையுந் தழுவும் உரிச்சொல்லாம் எ–று.

எ–டு.:–

1. ஒண்சுடர் நல்லி லருங்கட நீவி1 – காப்பு
2. கடிநுனைப்பகழி – கூர்மை
3. கடிமாலை சூடி2 – நாற்றம்
4. கண்ணாடியன்ன கடிமார்பன்3 – விளக்கம்
5. கடியர மகளிர்க்கே கைவிளக்காகி – அச்சம்
6. கடிமலர்மிசை பூத்துக் கம்புளோடன்ன மார்க்கும்– சிறப்பு
7. எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின் – விரைவு
8. கடுங்கா லொற்றவிச் சுடர்சிறந் துருத்து – மிகுதி
9. கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்5 – புதிது
10. அளந்தறியாப் பலபண்டம்
    வரம்பரியாமல் வந்தீண்டி – யாப்பு
    யருங்கடிப் பெருங் காப்பின்
11. கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி – வரைவு
12. கடிவினை முடிகென நொடியினு ளெணிநனி – மன்றல்
13. கடிமிளகு தின்ற கல்லா மந்தி – கரிப்பு

தொல்காப்பியர்,

கடியென் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்க மிகுதி சிறப்பே

அச்ச முன்தேற் றாயீ ரைந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே

என்றார்.

அருங்கடி என்னுமிடத்தில் கடி பெயர்ச்சொல், அதாவது கட் என்னும் உரி உருவோடு இகரவிகுதி பெற்றது.

'கடி மார்பன்' என்னுமிடத்தில் கட் என்னும் உரி உருவோடு பெயர் எச்சப் பொருள்தரும் இகர இடைச்சொல் சேர்ந்துள்ளது.

'கடிவிடுதும்' என்ற இடத்தில் கட் என்னும் உரி உருவோடு வினை எச்சப் பொருள் தரும் இகர இடைச்சொல் சேர்ந்துள்ளது. இவ்வாறே ஏனைய விடங்களில் வரும் கடி என்ற சொல்லை முடித்துக் கொள்க.

தமிழ் மொழியில் பெயர் வினைச் சொற்கள் கூடத் தம்முள் வேறுபடுவது. அவை அமைந்துள்ள சொற்றொட ரியலால் அன்றி அவைதம் சொல்வடிவ அமைப்பால் அன்று என்பர் நம் மொழியின் இயலறிந்த சான்றோர். அவ்வாறிருக்கக் கடி மார்பன். கடிவிடுதும் என வழங்கும் வழக்குக் கண்டு. தொல்காப்பியர் ஆக்கச் சொல் வடிவில் உரிச்சொற்களை எடுத்தோதிப் பொருளுணர்த்த முற்பட்டுள்ளமையை நோக்கி. உரிச்சொற்களைப் பெயரடைகள் என்றோ வினையடைகள் என்றோ கூறுவதும், உரியியலில் தொல்காப்பியர் வழக்கிழந்த சொல்வடிவங்களையே எடுத்தோதுவாராயினார் என்ற முடிவுக்கு வருவதும் தமிழியற் கல்வி சார்ந்த கூற்றாகா எனலாம்.

(16)

**457. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன்மொழி கிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.**

**மாற்ற நுவற்சி செப்புரை கரை நொடி யிசை
கூற்றுப் புகறன்மொழி கிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.**

mārram nuvarsi seppu urai karai noti isai
kūrrup pukaral moḷi kiḷavi viḷampu arai
pāttup pakarssi iyampal sollē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

The synonyms

The following are the (sixteen) synonyms of col: marram, nuvarchi, ceppu, urai, karai, noti, icai, kurru, pukaral, moli, kilai, vilampu, arai, pattu, pakarchchi, and iyampal.

ஒப்புமைப் பகுதி

இயம்ப னுவற்சி யிசைகூற்று விளம்பறை
பாட்டுக் கரைநொடி பகர்ச்சி சொல்லே

(மு.வீ.: 690)

மயிலை நாதர்

எ–ன், சொற்றொழிற் பண்பாவன உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இப்பதினாறும் சொல்லுதற் றொழிற்பண்பின்மேல் வரும், எ–று.

வ–று.:–

"கோவலர்வாய் மாற்ற முணர்ந்து" (சீவக. 432),

"இரு பிறப்பாளர் பொழுதறிந்து நுவல" (முருகு. 182)

"மீனே றுயர்த்த கொடி வேந்தனை வென்ற பொற்பிற்
றானே றனையா னுளன்சீவக சாமியென்பான்
வானேற நீண்ட புகழான்சரி தம்மிதனைத்
தேனூற நின்று தெருண்டா ரவை செப்ப லுற்றேன்"

(சீவக.6)

"உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்" (குறள். 232)

"அறங்கரை நாவி னான்மறை முற்றிய" (தொல். பாயிரம்)

"அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையார்
தாநொடியும்" (பு.வெ. 335)

"நசையுநர்க் கடையா நன்பெரு வாயி லிசையேன் புக்கு"

(பொருந. 66–7)

"உற்றது பிறர்கள் கூற வுணர்ந்தனை"

"புகன்ற வன்றியும் புறமிக வருமே"

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந். 2)

"கிளக்குங் கிளவிபாண கேளினி"

"மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்" (நன்.62)

"அறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்"

(கலி. 30)

"ஒருவன், செய்தி கொன்றோற் குய்தி யில்லென,
அறம்பா டின்றே யாயிழை கணவ" (புறநா. 34)

"பழனக் கழனி நீர்நாடன் பாவை வார்த்தை பகர்குற்றேன்"

"ஏற்றை யரிமா னிடிபோல வியம்பி னானே" (சீவக.432)

என முறையே காண்க.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் ஒரு குணம் தழுவிய உரிச்சொல்லுள் சில உணர்–ற்று.

இ–ள்.:– மாற்றம் முதல் இயம்பல் ஈறாகக் கூறிய பதினாறும் சொல் என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம், எ–று.

"சாலவுறுதவ" என்பதனைச் சார வையாது ஈண்டுக் கூறினார் இவை ஒலிப்பண்பை உணர்த்தி ஏனைப்பெயர் வினைகளை ஒருவாறு நடத்தலின் அத்துணைச் சிறப்பின அன்றி ஓரோவழி ஒருவி நடக்கும் என்பது தோன்றற்கு என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், சொற் றொழிற்பண்பு இவையெனக் கூறுகின்றது.

இ–ள்.:– **மாற்றம்** – கோவலர் வாய். மாற்ற முணர்ந்து" (சீவக.432) **நுவற்சி** – " இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல" (திருமுருகு 182), **செப்பு** – தெருண்டா ரவை செப்ப லுற்றேன்" (சீவக.6), **உரை** –"உரைப்பாருரைப்பவை யெல்லாம்" (குறள் 232), **கரை** – அறங்கரை நாவி னான்மறை முற்றிய" (தொல் பாயிரம்), **நொடி**– ஆயிழையாள் தானொடியும்" (பு.வெ.335) **இசை**–நண்பெருவாயி லிசையேன் புக்கு(பொருந 66–67), **கூற்று** – உற்றது பிறர்கள் கூற உணர்ந்தனை" **புகறல்** – "புகன்ற வன்றியும் புறமிக வருமே மொழி காமஞ் செப்பாது கண்டது மொழிமோ (குறு.2), **கிளவி** –களக்குங் கிளவி பாண கேளினி, **விளம்பு** – "மெய்ம்மூவாறென விளம்பினர் புலவர் (ந 63) **அறை** – வையை யென் றறையுந ருளராயின் (கலி.30), **பாட்டு** – ஒருவன் செய்தி கொன்றோர்க் அறம்பா டின்றே (புறம் 34), **பகர்ச்சி** – கழனி நீர்நாடன் பாவை வார்த்தை பகர்குற்றேன்", **இயம்பல்** –"ஏற்றையரிமா னிடிபோல வியம்பினானே" (சீவக 432) **சொல்லே** – எனக் கூறிய இப்பதினாறுஞ் சொற்றொழிற் பண்பாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இதுவும் ஒருகுணந்தழுவிய வுரிச்சொற்களும் சில வுணர்த்து கின்றது.

இ–ள்.:– மாற்ற ....றல்..... மாற்றமுதலாகிய பதினாறும் சொல் – சொல் லென்னு மொருகுணத்தை யுணர்த்துகிற வுரிச்சொற்களாம், எ–று.

வ–று.:–

கோவலர்வாய்மாற்றமுணர்ந்து, இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல, தெருண்டாரவை செப்பலுற்றேன் உரைப்பாருரைப் பவையெல்லாம் அறங்கரை நாவினான்மறை முற்றிய, அருஞ் சொற் பெரும் பணைத்தோ ளாயிழையப டானொடியும், நசையு நர்க்கடையா நன்பெருவாயிலிசை யொனப்புக்கு, உற்றது நாங்கள் கூறவுணர்ந்தனை, புகன்றவன்றியும் பூமிக வருமே, காமஞ் செப்பாத கண்டது மொழிமோ, கிளந்த கிளை முதலுற்ற, மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர் அச்சுதனடி தொழு தறைகுவன் சொல்லே,ஒருவன் செய்தி கொன்றர்க் குய்தியில் லென்றறம் பாடின்றே, வார்த்தை பகர்குற்றேன், இடிபோல வியம்பினனே, என முறையே காண்க.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சொல்லென்னுமொருகுணத்தை யுணர்த்துமுரிச்சொற்கள் யாவை?

மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
பாட்டுப் பகர்ச்ச யியம்பல் சொல்லே.

(மாற்றம் நுவற்சி செப்பு உரைகரை நொடி இசை கூற்றுப் புகறல் மொழி கிளவி விளம்பு அறை பாட்டுப் பகர்ச்சி இயல்பல் சொல்லே.)

இ–ள்.:– மாற்றமுதலாகிய பதினாறும் சொல்லென்னும் ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ–று.

வ–று.:–

"கோவலர்வாய் மாற்றமுணர்ந்து"; "இருபிறப் பாளர் பொழு தறிந்துநுவல"; தெருண்டாரவைசெப்பலுற்றேன்"; "உரைப்பா ருரைப்பவை யெல்லாம்"; "அறங் கரைநாவி னான்மறை முற்றிய"; "அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழயா டானொடி யும்"; "நசையுநர்க் கடையா நன்பெருவாயி–லிசையெனப் புக்கு"; "நசையுநர்க் கடையா நன்பெருவாயி–லிசையென்ப் புக்கு"; "உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை"; "புகன்ற வன்றியும் பூமி

கவருமே"; "காமஞ்செப்பது கண்டது மொழிமோ"; "கிளந்த கிளைமுத லுற்ற"; "மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"; "அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே"; "ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க்-குய்தியில்லென வறம்பாடின்றே"; "வார்த்தை பகர்குற்றேன்"; "இடிபோல வியம்பினானே" என முறையே காணக.

முகவை இராமானுச கவிராயர்

இது, ஒரு குணந்தழுவிய வுரிச் சொல்லுணர்த்திற்று.

இ—ள்.:— மாற்றம் முதல் இயம்பல் ஈறாகச் சொல்லிய பதினாறுஞ் சொல் என்னும் ஒரு குணத்தை யுணர்த்தும் உரிச் சொற்களாம், **எ—று.**

வ—று.:—

அவையஞ்சா மாற்றங் கொடுத்தற் பொருட்டு, அவை யஞ்சா வார்த்தை, பொழுதறிந்து நுவல – பொழுதறிந்து சொல்ல, செப்பலுற்றேன் – சொல்லலுற்றேன், உரைப்பவையெல்லாம்– சொல்பவையெல்லாம், அறங்கரை நாவின் தருமத்தைச் சொல்கின்ற நாவின், ஆயிழையாள் தானொடியும்– ஆராயத்தக்க ஆபரணங்களை யணிந்தவள் தான் சொல்லுவாள், இசையெனப் புக்கு– சொல்லெனப்புகுந்து, நாங்கள் கூற நாங்கள்சொல்ல, புகன்றவன்றியும்– சொன்னவை யல்லாமலும், கண்ட து மொழிமோ – கண்டது சொல்லு, கிளந்தகிளை முதல் சொன்ன கிளைமுதல், விளம்பினர் புலவர் சொன்னார் புலவர், அறைகுவன் சொல்லே–சொல்லுவேன் சொல்லிலக்கணத்தை, அறம்பாடின்று – அறநூல் சொன்னது, பகர்ந்தனர் புலவர்–சொன்னார் புலவர், ஈதலியல் பேயிம் புங்காலை ஈயுந் தன்மையைச் சொல்லும் போழ்து, என முறையே காண்க. இச் சூத்திரத்தைச் சாலவுறுதல வென்னுஞ் சூத்திரத்தை சாரவையாமல் இங்கே வைத்தார் இவை யொலிப் பண்பையுணர்த்தி மற்றப் பெயர் வினைகளை விட்டு நீங்கியும் நடக்குமென்பது தோன்றற்கென்க. இதன் முடிவு உரையிடை விளங்கிற்று.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:— மாற்றம்.........**இயம்பல்** – மாற்ற முதலாகிய பதினாறும், **சொல்** – சொல்லென்னும் ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச் சொற்களாம், **எ—று.**

வ—று.:—

"கோவலர்வாய் மாற்ற முணர்ந்து", "இருபிறப்பாளர் பொழு

தறிந்து நுவல", "தெருண்டாரவை செப்பலுற்றேன்", "உரைப்பா ருரைப்பவை யெல்லாம்", "அறங்கரைநாவி னான்மறை முற்றிய", "அஞ்சொற் பெரும் பணைத்தோ ளாயிழையா டானொடியும்", "நசையுநர்க் கடையா நன்பெருவாயி லிசையெனப் புக்கு", "உற்றது நாங்கள் கூறவுணர்ந்தனை", "புகன்ற வன்றியும் பூமி கவருமே", "காமஞ்செப்பாது கண்டது மொழிமோ", "கிளந்த கிளைமுதலுற்ற", "மெய்ம்மூவாறென விளம்பினர் புலவர்", "அச்சுதனடிதொழு தறைகுவன் சொல்லே", "ஒருவன் செய்தி கொன்றார்க்குய்தி யில் லென் றறம்பாடின்றே", "வார்த்தை பகர்குற்றேன்", இடிபோலவியம்பினானே" என முறையே காண்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— மாற்றம் .... இயம்பல் — மாற்றமுதலாகிய பதினாறும், **— சொல் —** சொல்லென்னும் ஒரு குணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ—று.

வ—று.:—

"கோவலர்வாய் மாற்ற முணர்ந்து"; "இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல"; "தெருண்டாரவை செப்பலுற்றேன்"; "உரைப்பா ருரைப்பவையெல்லாம்"; "அறங்கரைநாவி னான் மறைமுற்றிய"; "அஞ்சொற் பெரும்பணைத்தோ ளாயிழையா டானொடியும்"; (நொடியும் – சொல்வாள்) "நசையுநர்க் கடையா நன்பெருவாயி – லிசையெனப் புக்கு"; "உற்றது நாங்கள்கூற வுணர்ந்தனை"; "புகன்ற வன்றியும் பூமி கவருமோ"; "காமஞ் செப்பாது கண்டது மொழிமோ";

(கண்டது மொழிமோ – கண்டதுசொல்லு) இதில் மோ என்பது முன்னிலையசையிடைச்சொல். "கிளந்த கிளைமுத லுற்ற"; "மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர்"; "அச்சுத னடிதொழு தறைகுவன் சொல்லே"; ஒருவன் செய்ந்நன்றி கொன்றார்க் – குய்தியில்லென வறம்பாடின்றே; (அறம்பாடின்று – அறநூல் சொல்லிற்று) "வார்த்தை பகர்குற்றேன்";

"இடிபோல வியம்பினானே" என முறையே காண்க.

உரு என்பது அச்சத்தையும், புரை என்பது உயர்வையும் உணர்த்தும்.

உ—ம்.:—

உருகெழு ஞாயிறொண்கதிர் (அச்சம் பொருந்திய சூரியகிரணம்) புரையோர் கேண்மை (உயர்ந்தோர்நட்பு)

சூத்திரம். "உருவுட்காகும் புரையுயர்வாகும்".

குரு, கெழு என்பன நிறத்தையுணர்த்தும்.

உ-ம்.:-

குருமணித்தாலி, (நிறம்பொருந்திய மணித்தாலி)

குரு - குரூஉ என நீண்டளபெடுத்து நிற்றலுமுண்டு.

கேழ்கிளரகலம். (நிறம்பொருந்திய மார்பு) கெழு - கேழ் என விகாரப்பட்டது.

சூத்திரம். "குருவுங்கெழுவுநிறனாகும்மே."

செல்லல் இன்னல் என்பது துன்பத்தையுணர்த்தும்.

உ-ம்.:-

மணங்கமழ் வியன்மார்ப னணங்கிய செல்லல். வெயில் புறந்தரூஉ மின்னலியக்கத்து (வெயில் புறத்தேதருந் துன்பம் பொருந்திய பிரயாண நடையில்)

சூத்திரம். "செல்லலின்னலின்னாமையே."

அலமரல், தெருமரல் என்பன சுழலுதலையுணர்த்தும்.

உ-ம்.:-

அலமரலாயம் (சுழலுதலையுடைய பெண் கூட்டம்) தெருமரலுள்ளமோ டன்னை துஞ்சாள். (சுழலுமனத் தோடன்னை துயிலாள்).

சூத்திரம். "அலமரறெருமரலாயிரண்டுஞ்சுழற்சி."

மழவும், குழவும் இளமையையுணர்த்தும்.

உ-ம்.:-

மண்யாத்த கோட்ட மழகளிறு. (நிலத்துப்பாய்தலால் மண்ஈட்டிய கொம்புகளையுடைய இளமை பொருந்தி யானை). குழக்கன்று (இளங்கன்று)

சூத்திரம் "மழவுங் குழவு மிளமைப் பொருள"

கதழ்வு, துனைவு என்பன விரைவுணர்த்தும்.

உ-ம்.:-

கதழ் பரிநெடுந்தேர் (வேகம் பொருந்திய குதிரை பூட்டிய நெடுந்தேர்) துனைபரிதுரக்குந் துஞ்சாச்செலவின் (வேகமாகக் குதிரையை நடத்துகின்ற நூங்காப்பிரயாணத்தில்)

சூத்திரம் "கதழ்வுந்துனைவும் விரைவின்பொருள"

அதிர்வு, விதிர்ப்பு என்பன நடுக்கத்தையுணர்த்தும்.

உ–ம்.:–

அதிரவருவதோர் நோய். (நடுங்கவருவதோர்நோய்), விதிர்ப்புற வறி யாவேமக்காப்பு (நடுங்குறலறி யாதவின்பக்காவல்)

சூத்திரம் "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ்செய்யும்."

தடவு பெருமையையும் வளைவையு முணர்த்தும்.

உ–ம்.;–

தடக்கை (பெருமைபொருந்தியகை)

தடமருப்பெருமை (வளைந்த கொம்புகளையுடைய எருமை)

கயவு பெருமையையும் மென்மையையுமுணர்த்தும்.

உ–ம்.:–

கயவாய் (பெருவாய்)

கயந்தலை மென்மையான தலையையுடைய யானைக்கன்று.)

நளி பெருமையையுஞ் செறிவையுமுணர்த்தும்.

உ–ம்.;– நளிமலைநாடன் (பெருமைபொருந்திய மலைநாடன்) நளி கொடண்சுதை (செறிவுகொண்ட குளிர்ச்சி பொருந்திய அமிர்தம்.) நளிவிடம் (செறிவுகொண்டநஞ்சு)

சுத்திரம்

"தடவுங்கயவுநளியும்பெருமை" "அவற்றுள், தடவெண் கிளவி கோட்டமுஞ்செய்யும்" "கயவென்கிளவி மென்மையுஞ்செய்யும்" "நளியென்கிளவிசெறிவுமாகும்."

முழுது குறைவில்லாமையையும், வம்பு நிலையில்லாமையையும், மாதர் ஆசையையுமுணர்த்தும்.

உ–ம்.:–

மண்முழுதாண்ட (நிலமுழுமையுமாண்ட) வம்பு மாரியைக் காரென மதித்து (நிலையில்லாத மேகத்தைக் கண்டு கார்கால மென் றெண்ணி) மாதர்நோக்கு (ஆசை கொண்ட விழி)

சூத்திரம் "முழுதென்கிளவியெஞ்சாப் பொருட்டே" "வம்பு நிலையின்மை" "மாதர்காதல்"

செழுமை என்பது வளனும் கொழுப்புமாகிய பண்புணர்த்தும்.

உ–ம்.:– செழும்பல்குன்றம் எ–ம். செழுந்தடிதின்ற செந்நாய் எ–ம். செழுமை வளனுங் கொழுப்புமாகிய பண்புணர்த்தின. (தடி– தசை)

சூத்திரம். "செழுமை வளனுங் கொழுப்பு மாகும்."

கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புணர்த்தும்.

உ—ம்.:—

நிற்கறுப்பதோரருங்கடிமுனையள். (உன்னைக் கோபிப்பதொரு) நீசிவந்திறுத்த நீரழிபாக்கம் (நீ வெகுண்டுதங்கிய) தொழிற் பட்டுழியல்லது அவை வெகுளியுணர்த்தாமை கொள்க.

புனிறு என்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும்.

உ—ம்.:—

புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி (ஈன்றணிமையானபசு)

வை. மு. சடகோபராமானுசாசாரியார்

சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ன்.:— மாற்றம் .....இயம்பல் — இப்பதினாறும், சொல் — சொல் என்கிற ஒரு குணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாம், எ—று.

உ—ம்.:—

மாற்றம்—வாய்மாற்றம்	புகறல்—புகன்ற அன்றியும்
நுவற்சி—அறிந்துநுவல்	மொழி—கண்டது மொழிமோ
செப்பு—செப்பலுற்றேன்	கிளவி —கிளந்தகிளைமுதல்
உரை—உரைப்பவை	விளம்பு —விளம்பினர் புலவர்
கரை— அறங்கரைநா	அறை —அறைகுவன் சொல்லே
நொடி— ஆயிழைநொடியும்	பாட்டு —அறம்பாடின்று
இசை—இசையெனப்புக்கு	பகர்ச்சி —பகர்ந்தனர் புலவர்
கூற்று—நாங்கள் கூற	இயம்பல்—இயம்பலுற்றேன்

இச்சூத்திரத்தையும் வருஞ் சூத்திரத்தையும் "சால ஊறு தவ" என்னுஞ் சூத்திரத்தின்பின் வைக்காமல் இங்கே வைத்தது, இவை அவை போலன்றிப் பெயர்களை விட்டு நீங்கியும் நடக்கும் மென்பது தோன்றுதற்கு.

பவானந்தம் பிள்ளை

இ—ன்.:— மாற்றம் ....இயம்பல் — மாற்றமுதலாகிய பதினாறும், சொல் — சொல்லென்னும் ஒருகுணத்தை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ—று.

உ—ம்.:—

"கோவலர்வாங்ய மாற்ற முணர்ந்து" — மாற்றம்.

"இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல;" – நுவற்சி.

"உரைப்பா ருரைப்பவை யெல்லாம்;" – உரை.

"அறங்கரைநாவி னான்மறை முற்றிய;" – கரை.

"அஞ்சொற் பெரும் பணைத்தோ ளாயிழையா டானொடியும்;"
– நொடி.

"நசையுநர்க் கடையா நன்பெருவாயி – லிசையெனப் புக்கு;"
– இசை.

"உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை;" – கூற்று.

"புகன்ற வன்றியும் பூமி கவருமே;" – புகறல்.

"காமஞ்செப்பாது கண்டது மொழிமோ;" – மொழி.

"கிளந்த கிளைமுதலுற்ற;" – கிளவி.

"மெய்ம்மூவாறென விளம்பினர் புலவர்;" – விளம்பு.

"செய்தி கொன்றார்க் குய்தி யில்லென் – றறம்பாடின்றே;"
– பாட்டு.

"வார்த்தை பகர்குற்றேன்;" – பகர்ச்சி.

"இடிபோல வியம்பினானே." – இயம்பல்.

இச் சூத்திரத்தையும் வரும் சூத்திரத்தையும் 'சால உறுதவ' என்னும் சூத்திரத்தைச் சாரவையாமல் இங்கே வைத்தார், இவை ஒலிப் பண்பை யுணர்த்தி மற்றப் பெயர்வினைகளை விட்டு நீங்கியும் நடக்கு மென்பது தோன்ற.

கா.நமச்சிவாய முதலியார்

மாற்றம்... இயம்பல் – மாற்றம் முதலாகிய பதினாறும், சொல் – சொல் என்னும் ஒரு குணத்தை யுணர்த்துகின்ற உரிச்சொற்களாம்.

உதாரணம்

1. கோவலர்வாய் மாற்றம் உணர்ந்து – மாற்றம்
2. இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல – நுவற்சி
3. தெருண்டாரவை செப்பலுற்றேன் – செப்பு
4. உரைப்பா ருரைப்பவையெல்லாம் – உரை
5. அறங்கரை நாவினான் மறை முற்றிய – கரை
6. அஞ்சொற்பெரும்பணைத்தோளாயிழை
யாடானொடியும் – நொடி
7. நசையுநர்க் கடையா நன்பெருவாயி
லிசையெனப்புக்கு – இசை

8. உற்றது நாங்கள் கூற வுணர்ந்தனை - கூற்று
9. புகன்ற வன்றியும் புறமிகவருமே - புகறல்
10. காமஞ் செப்பாது கண்டது மொழிமோ - மொழி
11. கிளந்தகிளை முதலுற்ற - கிளவி
12. மெய்ம்மூ வாறென விளம்பினர் புலவர் - விளம்பு
13. அச்சுதனடி தொழுதறைகுவன் சொல்லே - அறை
14. ஒருவன், செய்தி கொன்றோர்க்
குய்த்திஇல்லெனா அறம் பாடின்றே - பாட்டு
15. வார்த்தைபகர்குற்றேன் - பகர்ச்சி
16. இடிபோலியம்பினானே - இயம்பல்.

மோசகு பொன்னையா

மாற்றம் முதல் இயம்பல் ஈறாகக் கூறிய பதினாறும் சொல்லென்னும் ஒரு சொல்லின் பல்குணம் உணர்த்துவனவாம் எ-று.

(17)

**458. முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
இரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கவ்வை கம்பலை.
அரவ மார்ப்போ டின்னன வோசை.**

**முழக்கு இரட்டு ஒலி கலி இசை துவை
பிளிறு இரை இரக்கு அழுங்கு இயம்பல் இமிழ் குளிறு அதிர்
குரை**

**கனை சிலை சும்மை கவ்வை கம்பலை
அரவம் ஆர்ப்போடு இன்னன ஒசை**

mulakku irattu oli kali isai ṭuvai pil̲iṛu irai
irakku aḷuṅku iyampal imiḷ kul̲iṛuaṭirvu kurai
kan̲ai silai summai kavvai kampalai
aravam ārppu ōtu in̲n̲an̲a ōsai.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

The (twenty-two) principal synoyms of ocai are follows: mulakku irattu, oli, kali, icai, tuvai, piiru, irai, irakku alunku, iyampal, imil, kuliru, atir, kurai, kanai, cinai, cummai, kavvai, kampalai, aravam and arppu.

ஒப்புமைப் பகுதி

கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள

(தொல். சொல்.: 349)

துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்

(தொல். சொல்.: 358)

அவற்றுள்
இரங்கல் கழிந்த பொருட்கும் ஆகும்

(தொல். சொல்.: 359)

கம்பலை சும்மை யரவம் கண்ணலும்
துவைத்தல் சிலைத்தல் இயம்பல் இசை சுட்டலும்
உரிய என்மனார் உணர்ந்திசி னோரே

(இ.வி.: 285)

கலியே அரவமும் செருக்கும் காட்டலும்
அழுங்கல் அரவமும் இரக்கமும் கேடும்
இரங்கல் இசையும் கழிந்த பொருட்டாகலும்
சிவணும் என்மனார் தெளிந்திசி னோரே

(இ.வி.: 286)

கம்பலை சும்மை கலியே யழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள

(மு.வீ.: 686)

இசைப்பு இசையே............

(மு.வீ.: 676)

மயிலை நாதர்

எ–ன், ஒலித்தற் றொழிற்பண்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவ்விருபத்திரண்டும் இவைபோல்வன பிறவும் ஒலித்தற் றொழிற்பண்பின்கண் வரும், எ–று.

வ–று.:

"முழுங்கு முந்நீர் முழுவதும் வளைஇ" (புறநா.18) "குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை", "ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு" (ஐங்.ஐம். 28) " கலிகெழு கடவுள் கந்தங் கைவிட" (புறநா.52) "பறையிசை யருவி முள்ளூர்" (புறம். 126)

"தோல் துவைத்தம்பிற்றுளைதோன்றுவ" (புறநா. 4) **"பிளிறு வார் முரசம்"** (சீவக.450) **"இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்"** (சூளா கல்யாண. 51) **"இரங்கு முரசி னினஞ்சால் யானை"** (புறநா. 137) **"இரும்பிழி மாரி யழுங்கன் மூதூர்"** (அகநா. 122) **"காலை முரசங் கனைகுர லியம்பும்"** (சிலப். ஆய்ச்சியர்) **"இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை"** (புறநா.19) **"குளிறு முரசங் குணில்பாய"** (பு.வெ.3:13), **"களிறுங் களித்ததிருங் கார்"** (பு.வெ.138) **"குரைபுனற் கன்னி"** (சீவக.39) **"கனைகடற் றண்சேர்ப்ப"** (நாலடி 138) **"சிலைத் தார் முரசங் கறங்க"** (புறநா. 36) **"தள்ளாத கம்மை மிகுதக்கண நாடு நண்ணி"** (சீவக. 20) **"கவ்வைநீர் வேலிக் கடிதேகாண்"** (பு.வெ. 23) **"விளைக்கம்பலை மனைச் சிலம்பவும்"** (யா.வி 'பூந்தாமரை') **"அறைகட லரவத் தானை யச்சுவக் கிரீவன்"** (சூளா. சீயவதை, 108) **"ஆர்த்தபல் லியக்குழாம்"** (சூளா.தூது. 45) என முறையே காண்க.

இவ்விருவகைப் பண்பும் பெயரையும் வினையையும் விட்டு நிகழாமை காட்டிய உதாரணங்களிலே கண்டு கொள்க.

"பலவகைப் பண்பும் பகர்பெய ராகி" என்றமையான், இவ்விரு வகைப் பண்புப் பெயர்களுள்ளும் சில உருபேற்றலும் தனியே வருதலும் உளவெனக் கொள்க.

சங்கர நமச்சிவாயர்

சிவஞான முனிவர்

எ—னின், இதுவும் அது.

இ—ள்.:— முழக்கு முதலிய இருபத்திரண்டும் இவைபோல்வன பிறவும் ஓசை என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்களாம், எ—று.

வ—று.:—

"முழுங்கு முந்நீர் முழுவதும் வளைஇ" "குடிஞையிரட்டும் கோடுயர் நெடுவரை" "ஒல்லென் றொலிக்கும் ஒலிபுனல் ஊரற்கு கலிகெழு மூதூர்" "பறையிசை அருவி"

" தோல் துவைத்து" "பிளிறுவார் இடிமுரசம்" "இரைக்கும் அஞ்சிறைப் பறவைகள்" "இரங்கு முரசின்" "இரும்பிழிமாரி அழுங்கல் மூதூர்" "காலை முரசம் கனைகுரல் இயம்பும்" "இமிழ்கடல்வளைஇய ஈண்டகன் கிடக்கை" "குளிறு முரசம் குணில்பாய" "களிறும் களித்ததிரும் கார்" "குரைபுனற் கன்னி" "கனைகடல் தண்சேர்ப்ப" "சிலைத்தார் முரசம்

கறங்க" "தள்ளாத சும்மைமிகு தக்கண நாடு நண்ணி" "கௌவைநீர் வேலி" "வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்" "அறைகழல் அரவத்தானை" "ஆர்த்த பல்லியக் குழாம்" என முறையே காண்க.

விரித்தல் என்னும் குற்றம் வருமாதலின் அவற்றினைக் கண்டு அறிய வேண்டினார் இவ்விலக்கணம் அறிதற்கு முன்னரே பிங்கலர் முதலாகிய ஏனைப் புலவரால் கூறப்பட்ட பிங்கலம் திவாகரம் சூடாமணி முதலிய நூல்களுள் வகுக்கும் உரிச்சொல் தொகுதியுள் விரும்பிக் காண்க, எ—று.

இவ்விலக்கணம் அறிதற்கு முன்னரே நிகண்டு அறிக என்றாம், அறியுமுறை அதுவாதலான்.

இவ்வியலுள் 'சால' என்பது முதல் 'ஆர்ப்பு' என்பது ஈறாக நாற்பத்தைந்து உரிச்சொல் எடுத்துச் சுருங்கச்சொல்லுதல், சொல்லியல் உணர்த்தும் நூலுள் சொல் தொகுதிகளை விரிக்கின் மற்றொன்று விரித்தலாம் என உணரார் குன்றக் கூறலாம் என்பாராதலின், அது பரிகரித்தற்கு இச்சூத்திரத்தால் புறனடை கூறினார். இங்ஙனம் கூறவே, பெயரியலுள் பெயர்த் தொகுதி யினையும், வினையியலுள் வினைத்தொகுதி யினையும், இடை யியலுள் இடைத்தொகுதியினையும் விரியாது அவ்விலக்கணம் காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுதற்கும் இதுவே புறனடையாம் என்க.

பெயரியல் என்பது பெயரிலக்கணம். பெயர்த்தொகுதி என்பது பெயர்க்கூட்டம். ஏனையவும் அன்ன. கூட்டம் எனினும் நிகண்டு எனினும் ஒக்கும்.

இலக்கணம் கூறும் நூலுள் நிகண்டினையும் உடன் கூறாது அதனை வேறோர் நூலாகக் கூறுதல் தமிழுள்ளேயன்றி ஆரியம் முதலியவற்றுள்ளும் காண்க.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.:— முழுக்க.... ஆர்ப்போடு – முழுக்க முதலான இருபத்திரண்டும், **இன்னன** – இவை போல்வன பிறவும், **ஓசை—** ஓசை யென்னும் ஒருபொருளை யுணர்த்து முரிச்சொற்களாம், எ—று.

வ—று .:—

"முழுங்கு முந்நீர் முழுவதும் வளைஇ" "குடிஞை யிரட்டுங்

கோடுயர் நெடுவரை'' ''ஒல்லென வொலிக்கு மொலிபுனலூரற்கு'' ''கலிகெழு மூதூர்'' '' பறையிசை பல்லியந் துவைப்ப பிளிறுவார் முரசம்'' ''இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்'' ''இரங்கு முரசினம்'' ''இரும் பிழிமாரி யழுங்கின மூதூர்'' ''காலை முரசமதியம்ப'' ''இமிழ்கடல்வளைஇய'' ''குளிறுமுரசங்குணில்பாய'' ''களிறு களித்ததிரும்'' ''கார் குரைரினற் கன்னி'' ''கனை கடற் சேர்ப்ப'' ''சிலைத்தார் முரசங்கறங்க'' ''தள்ளாத சும்மை மிகுதக்கண நாடு நண்ணி'' '' கௌவை நீர்வேலி'' '' வினைக்கம்பலை மனைச் சிலம்பவும்'' ''அறைகடலரவத் தானை'' '' ஆர்த்த பல்லியக் குழாம்'' என முறையே காண்க.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஓசையென்னு மொருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்கள் யாவை?

முழக்கிரட் டொலிகலி யிசை துவை பிளிறிரை
இரக்கமுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
கனைசிலை சும்மை கௌவை கம்பலை
அரவ மார்ப்போ டின்னை வோசை.

(முழக்கு இரண்டு ஒலி கலி இசை துவை பிளிறு இரை இரக்க அழுங்கு இயல்பல் இமிழ்குளிறு அதிர் குரைகனைசிலை சும்மை கௌவை கம்பலை அரவம் ஆர்ப்பு ஓடு இன்னன ஓசை.)

இ—ள்.:— முழக்குமுதலாகிய இருபத்திரண்டும் இவைபோல்வன பிறவும் ஓசையென்னும் ஒருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்களாம். எ—று.

வ—று.:—

''முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ''; ''குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை''; ''ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு''; ''கலிகெழு மூதூர்''; ''பறையிசை யருவி''; ''பல்லியந் துவைப்ப''; ''பிளிறுவார் முரசம்''; ''இரைக்கு மஃஞ்சிறைப் பறவைகள்''; ''இரங்கு முரசினம்''; ''இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்''; ''காலை முரசமதியம்ப''; ''இமிழ் கடல் வளைஇய''; ''குளிறு முரசங் குணில்பாய''; ''களிறு களித்த திருங்கார்''; ''குரைபுனற் கன்னி''; ''கனைகடற் சேர்ப்ப''; ''சிலைத்தார் முரசங் கறங்க''; ''தள்ளாத சும்மை மிகு தக்கிண நாடுநண்ணி''; ''கௌவை நீர் வேலி''; ''வினைக் கம்பலை மனைச் சிலம்பவும்''; ''அறைகட லரவத்தானை''; ''ஆர்த்த பல்லியக்குழாம்'' என முறையே காண்க.

முகவை இராமனுச கவிராயர்

இதுவுமது.

இ–ள்.: முழக்க......போடு முழக்க முதலான இருபத்திரண்டும், **இன்னன** இவை போல்வன பிறவும், **ஓசை** – ஓசையென்னு மொரு பொருளையுணர்த்து முரிச்சொற்களாம், **எ–று.**

வ–று.:–

முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ, குடிஞையிரட்டுங் கோடுயர் நெடுவரை, ஒல்லெனவொலிக்கு மொலிபுனலூரற்கு, கலிகெழு மூதூர் பறையிசை, பல்லியந்துவைப்ப, பிளிதுவார் முரசம், இரைக்கு மஞ்சிறைப்பறவைகள், இரங்கு முரசினம் இருபிழி மாரியழுங் கினமூதூர், காலை முரசமதியம்ப, இமிழ் கடல் வளை இய, குளிறு முரசங்குணில்பாய களிறு களிந்ததிரும், கார்குரை புனற்கன்னி, கனை கடற்சேர்ப்ப, சிலைத்தார் முரசங் கறங்க தள்ளாத சும்மை மிகுதக்கண நாடு நண்ணி, கௌவை நீர்வேலி, வினைக்கம்பலை, மனைச்சிலம்பவும் அறைகடலரவத்தரனை, ஆர்த்தபல் லியக்குழாம் என முறையேகாண்க

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– முழுக்கு ... ஆர்ப்போடு – இவ்விருபத்திரண்டும், **இன்னன** – இவைபோல்வன பிறவும், **ஓசை** – ஓசை என்கிற ஒரு குணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாம், எ–று.

உ–ம்.:–

முழக்கு–முழங்கு கடல்	இமிழ்–இமிழ்கடல்
இரட்டு– குடிஞையிரட்டும்	குளிறு–குளிறுமுரசம்
ஒலி–ஒலிபுனலூரன்	அதிர்–களித்ததிருங்கார்
கலி–கலிகெழுமூதூர்	குரை–குரைபுனலாறு
இசை–பறையிசையருவி	கனை–கனைகடல்
துவை–பல்லியம் துவைப்ப	சிலை–சிலைத்தார் முரசம்
பிளிறு–பிளிறுவார்முரசு	சும்மை –சும்மைமிகுநாடு
இரை–இரைக்கும்புனல்	கௌவை–கௌவைக்கடல்
இரங்கு–இரங்குமுரசினம்	கம்பலை–வினைக்கம்பலை
அழுங்கு–மாரியழுங்கினமூதூர்	அரவம்–அரவத்தானை
இயம்பல் – முரசமதியம்ப	ஆர்ப்பு – ஆர்த்தபல்லியம்

இவைபோல்வன பிறவாவன அமலை, துழனி, ஓதை, கரை முதலியன.

வ. குமாரசாமிப்புலவர்

இ—ள்.:– முழக்கு .... ஆர்ப்போடு – முழக்குமுதலாகிய இருபத்திரண்டும் – **இன்னன** – இவை போல்வன பிறவும், – **ஓசை** – ஓசையென்னுமொரு குணத்தையுணர்த்து முரிச்சொற்களாம். **எ—று.**

வ—று.:–

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ"; "குடினஞ யிரட்டுங் கோடுயர் நெடுவரை"; "ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு"; "கலி கெழுமூதூர்"; "பறையிசை யருவி"; "பல்லியந் துவைப்ப"; "பிளிறுவார் முரசம்" "இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்" "இரங்கு முரசினம்"; "இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்"; "காலைமுரசமதியம்ப" "இமிழ்கடல்வளை இய"; "குளிறு முரசங் குணில்பாய"; "களிறுகளித்ததிருங்கார்"; "குரைபுனற்கன்னி"; "கனைகடற் சேர்ப்ப"; "சிலைத்தார் முரசங்கறங்க"; "தள்ளாதகம்மைமிகு தக்கிணநாடுநண்ணி"; "கௌவை நீர் வேலி"; "விளைக்கம்பலை மனைச்சிலம்பவும்"; "அறைகட லரவத்தானை"; "ஆர்த்தபல்லியக்குழாம்" என முறையே காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:– **முழக்கு** ... **ஆர்ப்போடு** – இவ்விருபத்திரண்டும், **இன்னன** – இவைபோல்வன பிறவும், **ஓசை** – ஓசை என்கிற ஒரு குணத்தை உணர்த்துகின்ற உரிச்சொற்களாம், **எ—று.**

உ—ம்.:–

முழக்கு–முழங்கு கடல்	இமிழ்–இமிழ்கடல்
இரட்டு– குடிஞையிரட்டும்	குளிறு–குளிறுமுரசம்
ஒலி–ஒலிபுனலூரன்	அதிர்–களித்ததிருங்கார்
கலி–கலிகெழுமூதூர்	குரை–குரைபுனலாறு
இசை–பறையிசையருவி	கனை–கனைகடல்
துவை–பல்லியம் துவைப்ப	சிலை–சிலைத்தார் முரசம்
பிளிறு–பிளிறுவார்முரசு	கம்மை –கம்மைமிகுநாடு
இரை–இரைக்கும்புனல்	கௌவை–கௌவைக்கடல்

இரங்கு–இரங்குமுரசினம் கம்பலை–வினைக்கம்பலை

அழுங்கு–மாரியழுங்கினமூதூர்

அரவம் – அரவத்தானை

இயம்பல் – முரசமதியம்ப ஆர்ப்பு – ஆர்த்தபல்லியம்

இவைபோல்வன பிறவாவன அமலை, துழனி, ஓதை, கரை முதலியன.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– முழக்கு ..... ஆர்ப்போடு – முழக்கு முதலாகிய இருபத்திரண்டும், **இன்னன** – இவை போல்வன பிறவும், **ஓசை** – ஓசை யென்னும் ஒரு குணத்தை யுணர்த்து முரிச்சொற்களாம். எ–று.

உ–ம்.:–

"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ;" – முழக்கு.

"குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை;" – இரட்டு.

"ஒல்லென வொலிக்கு மொலிபுன லூரற்கு;" – ஒலி.

"கலிகெழு மூதூர்;" – கலி.

"பறையிசை யருவி;" – இசை.

"பல்லியந் துவைப்ப;" – துவை.

"பிளிறுவார் முரசம்;" – பிளிறு.

"இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்;" – இரை.

"இரங்கு முரசினம்;" – இரங்கு. (இது இரக்கென வலித்தாலா யிற்று).

"இரும்பிழிமாரி யழுங்கின மூதூர்;" – அழுங்கு.

"காலை முரசமதியம்ப;" – இயம்பல்.

"இமிழ்கடல் வளைஇய;" – இமிழ்.

"குளிறு முமரசங் குணில்பாய;" – குளிறு.

"களிறு களித் ததிருங் கார்;" – அதிர்.

மூஞ்குரைபுனற் கன்னி;" – குரை.

"கவனகடற் சேர்ப்ப;" – கனை.

"சிவலத்தார் முரசங் கறங்க;" – சிலை.

"தள்ளாத சும்மை மிகு தக்கிண நாடுநண்ணி;" – சும்மை.

"கௌவை நீர்வேலி;" – கௌவை.

"வினைககம்பவல மனைச் சிலம்பவும்;" – கம்பலை.

"அறைகட லரவத்தானை;" – அரவம்.

"ஆர்த்த பல்லியக்குழாம்" – ஆர்ப்பு.

இவை போல்வன பிறவாவன, அமலை, துழனி முதலியன.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ – ள்.:– முழக்கு. . . . . ஆர்ப்போடு – முழக்கு முதலான இருபத்திரண்டும், **இன்னன** – இவை போல்வன பிறவும், **ஓசை** – ஓசையொன்றும் ஒருபொருளை யுணர்த்தும் உரிச்சொற்களாம். எ–று

பொ –ரை.;– முழக்கு, இரட்டு, ஒலி, கலி, இசை, துவை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு, இயம்பல், இமிழ், குளிறு, அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு என்னும் இரபத்திரண்டும், இவை போல்வன பிறவும் ஓசை யென்னும் ஒருபொருளை யுணர்த்தும் உரிச்சொற்களாம்.

உ–ம்.:–

1. முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇ முழக்கு.
2. குடிஞை யிரட்டுங் கோடுயர் நெடுவரை இரட்டு.
3. ஒல்லெனவொலிக்கு மொலி பினலூரற்கு ஒலி.
4. கலி கெழுமூதூர் கலி.
5. பறை யிசை இசை.
6. பல்லியந்துவைப்ப துவை.
7. பிளிறுவார் முரசம் பிளிறு.
8. இரைக்கு மஞ்சிறைப் பறவைகள் இரை.
9. இரங்கு முரசினம் இரங்கு.
10. இரும்பிழிமாரி யழுங்கின மூதூர் அழுங்கு.
11. காலை முரசமதியம்ப இயம்பல்.
12. இமிழ் கடல் வளைஇய இமிழ்.
13. குளிறு முரசங் குணில் பாய குளிறு.
14. களிறு களித் ததிரும் அதிர்.
15. கார் குரை புனற் கன்னி குரை.
16. கனை கடற் சேர்பப் கனை.
17. சிலைத்தார் முரசங்கறங்க சிலை.
18. தள்ளாத சும்மைமிகுதக்கிணநாடுநண்ணி சும்மை

19. கௌவைநீர் வேலி கௌவை

20. வினைக் கம்பலை மனைச் சிலம்பவும் கம்பலை

21. அறை கடலரவத்தானை அரவம்.

22. ஆர்த்த பல்லியக்குழாம் ஆர்ப்பு.

என முறையே காண்க.

கா.நமச்சிவாய முதலியார்

முழக்கு.... ஆர்ப்போடு – முழக்கு முதலிய இருப்பத்திரண்டும், **இன்னன** – இவைபோல்வன பிறவும், **ஓசை** – ஓசை என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம்.

உதாரணம்

1.முழக்குமுந்நீர் முழுவதும் வளைஇ – முழக்கு.
2.குடிஞையிரட்டுங் கோடுயர்நெடுவரை – இரட்டு.
3.ஒல்லெனவொலிக்கு மொலிபுனலூரற்கு – ஒலி.
4.கலிகெழுமூதூர் – கலி.
5.பறையிசையருவி – இசை.
6.பல்லியந்துவைப்ப – துவை.
7.பிளிறுவார்முரசம் – பிளிறு.
8.இரைக்குமஞ்சிறைப் பறவைகள் – இரை.
9.இரங்கு முரசின் – இரங்கு.
10. இரும்பிழிமாரி யழுங்கன் மூதூர் – அழுங்கு.
11.காலைமுரசம தியம்ப – இயம்பல்.
12.இமிழ்கடல் வளைஇய – இமிழ்.
13.குளிறுமுரசங் குணில்பாய – குளிறு.
14.களிறுகளித்ததிருங்கார் – அதிர்.
15.குரைபுனற்கன்னி – குரை
16.கனைகடற்சேர்ப்ப – கனை
17.சிலைத்தார் முரசங்கறங்க – சிலை.
18.தள்ளாத சும்மைமிகுதக்கிண நாடுநண்ணி – சும்மை.
19.கவ்வைநீர்வேலி – கவ்வை.
20.வினைக்கம்பலை மனைச்சிலம்பவும் – கம்பலை.
21.அறைகடலரவத்தானை – அரவம்.
22.ஆர்த்த பல்லியக்குழாம் – ஆர்ப்பு.

மோசகு பொன்னையா

முழக்கு முதல் ஆர்ப்பு ஈறாகக் கூறப்பட்ட இருபத்திரண்டும் அவை போல்வனவும் ஓசை என்னும் ஒரு சொல்லின் பல்குணம் உணர்த்துவனவாம், எ—று.

(18)

459. இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணிகுணப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் [1]பிங்கல முதலா
நல்லோ [2]ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

இன்னது இன் உழி இன்னணம் இயலும்
என்று இசை நூலுள் குணி குணப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலின் நயந்தனர் கொளலே.

inn̲aṭu in̲n̲uḻi in̲n̲aṇam iyalum
en̲ṟu isai nūluḷ kuṇa kuṇip peyarkaḷ
sol ām parattalin̲ piṅkalam muṭalā
nallōr urissolin̲ nayanṭan̲ar koḷalē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

An exemption

In a treatise which professes to give (only) the particular grammatical significations of a particular word in a particular place (such as the three persons and two usages), we are not obliged to describe at length all (the meanings of) the Abstract and concrete Names; to do so would be to enlarge this work unnecessarily; and therefore, those desirous of knowing these meanings would do well to consult such sections of the pingalam and other (Dictionaries) of the learned, as treat of Quality-names.

பாட வேறுபாடு:-

1.பிங்கலர்முதலா

2.உரிச்சொலுள்

மயிலை நாதர்

எ–ன், இவ்வோத்திற்கு உரியதோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– இவ்வெழுத்து இவ்விடத்து இவ்வாறாகும், இப்பதம் இவ்விடத்து இவ்வாறாகும், இச்சொல் இவ்விடத்து இவ்வாறாகு மென்று இலக்கணஞ் சொல்லு நூலுள் உலகிலுள்ள பொருள்கட்கும் குணங்கட்கும் இன்னதற்கு இன்னது பெயரென்று தனித்தனியே சொல்லலுற்றால் எனைத்தும் பெருகுதலின், ஈண்டுச் சொல்லாதொழிந்தாம், அவை பிங்கல முதலான புலவர்களாற் சொல்லப்பட்ட உரிச்சொற் பனுவல்களுள் விரும்பி அறிந்து கொள்க, எ–று.

அஃதேல், இச்சொல் இவ்வொரு பொருட்குரித்து, இச்சொற் பல பொருட்குரித் தென்று சொல்லல் சொல்லிலக்கண மாகலின், ஈண்டுச் சொல்லா தொழிதல் குன்றக் கூறலென்னுங் குற்றமாம் பிறவெனின், ஆகாது; என்னை? பொருளாவன இவை, குணமாவன இவையென்றும் இவற்றைப் பற்றி இவ்வாறு வரும் சொற்களென்றும் பெயரோத்தினுள்ளும் ஈண்டும் இவற்றின் இலக்கணமெல்லாம் சொல்லுதலானும் முடிவிடங் கூறலானும் அவற்றையும் வேறே ஒரு நூலாகவே முன்னோர் சொல்லு தலானும், வடமொழி முதலான பிற கலைக்கடல்களுள்ளும் வேறே சொல்லுதலானு மென்க.

இது முடிவிடங்கூறல் என்னும் தந்திரவுத்தியாம்.

சங்கர நமச்சிவாயர்

சிவஞான முனிவர்

எ–னின், இவ்வியலுக்கு ஓர் புறனடை உணர்–ற்று.

இ–ள்.:– பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொல்லுள் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்துள்ளும் வழக்குச் செய்யுள் என்னும் இரண்டிடத்துள்ளும் இவ்விடத்து இவ்விலக்கணத்ததாய் நடக்கும் என்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள் அவ்விலக்கணம் காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுவதன்றி உரிச்சொல்லாகிய குணப்பெயரையும் ஏனைக் குணிப்பெயரையும் நிகண்டினுள் கூறினாற்போல விரித்துக் கூறக் கடவமல்லம்: விரிக்கின் மற்றொன்று

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், ஒலித்தல் தொழிற் பண்பு இவையெனக் கூறியது.

இ–ள்.:– முழக்கு – "முழங்கு மின்னீர் மேகம்", இரட்டு –"குடிஞை

யிரட்டும்'' (மலைபடு141), **ஒலி** – ஒல்லென் றொலிக்கு மொலி புனலூரற்கு'' (ஐந்திணை28) கலி கலிகெழு மூதூர்'' (புறம் 52), **இசை** – '' பறையிசை யருவி'' (புறம்.126) **துவை** – ''அருவி துவைத்தன'' **பிளிறு** – ''பிளிறுவார் முரசம்'' (சீவக 450) **இரை** – ''இரைக்கு மஞ்சிறைப் பறவைகள்'' (சூளா கல்யாணச் 51) **இரக்கு** – ''இரங்கு முரசி னினஞ்சால் யானை'' (புறம் 137) **அழுங்கு** – ''மாரி யழுங்கன் மூதூர்'' (அகம் 122) இயம்பல் ''காலை முரச மதிலியம்ப'' இமிழ் இமிழ் கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை'' (புறம்19), **குளிறு** – ''குளிறு முரசங்குணில் பாய ....'' (பு.வெ 48) **"அதிர்**– களிறு களித்த திருங்கார்'' (பு.வெ 37) ''**குரை** – குரைபுனற் கன்னி........'' (சீவக 39) **கனை**–''கனைபுனலூரன், **சிலை** – சிலைத்தார்முரசம்'' ((புறம் 36), **கம்மை** – ''தள்ளாத கம்மை மிகுதக்கண் நாடு'' (சீவக 20) **கவ்வை** – ''கவ்வைநீர் வேலி" (பு.வெ.83), **கம்பலை** – ''வினைக் கம்பலை மனைச்சிலம்பவும்'', **அரவம்** – ''அறைகடலரவத்தானை'' (சூளா. சீயவதை108), **ஆர்ப்பொடு** – ''ஆர்த்தபல் லியக்குழாம்'' (சூளா.தூது 45) **இன்னன**– இவ்விருபத்திரண்டும் இவை போல்வன பிறவும், **ஓசை** – ஒலித்தல் தொழிற்பண்பாம், **எ–று.**

இவ்விரு வகைப் பண்பும் பெயரையும் வினையையும் விட்டு நீங்காமையும் காட்டிய உதாரணங்களிலே கண்டுகொள்க. ''பலவகைப் பண்பும் பகர்பெயராகி என்றமையால் இவ்விரு வகைப் பண்புப் பெயர்களுள்ளும் உருபேற்றலும் தனியே நிற்றலும் உளவென்க.

விசாகப் பெருமாளையர்

இது இவ்வியலுக்கானதோர் புறனடை யுணர்த்துகின்றது.

இ–ள்.:– இன்னது – பெயர் வினை யிடையுரிகளில் இன்னசொல். **இன்னுழி** – தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ்விடத்தே, **இன்னனம்** – இவ்விலக்கண முள்ளதாய், **இயலுமென்று** – நடக்குமென்று, **இசை** – சொல்லக்கடவதாகிய, **நூலுள்** – இந்நூலுள், **குணகுணிப் பெயர்கள்** – குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், **சொல்லாம்** – வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக் கடவமல்லம், **பரத்தலின்** – விரிகின், மற்றொன்று விரித்த லென்னுங் குற்றம் வருமாதலின், **நல்லோர்** – அவற்றைக் கண்டறிய வேண்டிய நல்லோர், **பிங்கல முதலா** – பிங்கலந்தை திவாகர முதலிய நூல்களில், **உரிச்சொலில்** – உரிச்சொற்றொகுதியுள், **நயந்தனர் கொளல்**– விரும்பிக் கொள்க, **எ–று.**

எனவே பெயரியலுட் பெயர்ச்சொற்றொகுதியையும் வினை யியலுள் வினைச்சொற் றொகுதியையும் இடையியலுள் இடைச் சொற்றொ குதியையும் விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்பதாயிற்று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இவ்வியலுக்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

இன்ன தின்னுழி யின்னண மியலும்
என்றிசை நூலுட் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலிற் பிங்கல முதலா
நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.

(இன்னது இன்னுழி இன்னணம் இயலும்
என்று இசை நூலுள் குணகுணிப் பெயர்கள்
சொல்லாம் பரத்தலின் பிங்கலம் முதலா
நல்லோர் உரிச்சொலில் நயந்தனர் கொளலே.)

இ–ள்.:– பெயர்வினையிடையுரிகளில் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச்செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கண முடையதாய் நடக்கும் என்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள் குணப்பெயர் களையும் குணிப்பெயர்களையும் வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக்கடவமல்லம்; விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின். அவற்றைக் கண்டறியவேண்டினோர் மற்றைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந்தை திவாகர முதலிய நூல்களில் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக் கொள்க. எ–று.

எனவே இச்சூத்திரங் கூறுவன யாவை?

உரிச்சொற்களெல்லாம் இந்நூலிற் சொல்லப்படாமைக்குக் காரணமும் அவை கூறப்படுமிடமுமாம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, இவ்வியலுக்காவதோர் புறனடையுணர்த்திற்று.

இ–ள்.:– இன்னது– (பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள்) இன்னசொல், **இன்னுழி** – (தன்மை முன்னிலை படர்க்கையென்னு மூன்றிடத்துள்ளும் வழக்குச் செய்யுளென்னுமிரண்டிடத்துள்ளும்) இவ்விடத்து, **இன்னணம்** – இந்த இலக்கணத்தைடையதாகிய, **இயலுமென்று** – நடக்குமேன்று, **இசை நூலுள்** – சொல்லத் தக்க இந்த நூலுள்ளே, **குணகுணிப்பெயர்கள்** – (அவ்விலக்கணங் காட்டுதற்கு வேண்டிய மாத்திரமே கூறுவதன்றி) உரிச் சொல்லாகிய குணப்பெயர்களையும் அக்குணத்தையுடையாகிய குணிப்பெயர் களையும், **சொல்லாம்** – (நிகண்டிற்போல) விரித்துக்கூறக் கடவோமல்லோம், **பரத்தலின்** – மற்றென்று விரித்தலென்னுங் குற்ற நேரிடும்படி) விரிதலால், **பிங்கல முதலா நல்லோருரிச் சொலின்** – (அவை முழுமையுமறிய வேண்டினோர்

இலக்கணமறிதற்கு முன்னேதானே) நல்லோராற் கூறப்பட்ட பிங்கலம் திவாகரம் சூளாமணி முதலிய நூல்களுள்ளே வகுத்துச் சொல்லப்பட்டவுரிச் சொல் தொகுதி முதலியவற்றள், **நயந்தனர் கொளல் – விரும்பிக் கொள்க, எ—று.**

இவ்வியலுள் சாலவென்பது முதல் ஆர்ப்பு என்பது ஈறாக, நாற்பத்தைந்து உரிச்சொல் எடுத்துச் சுருங்கச் சொல்லுதல் (சொல்லிலக்கணமுணர்த்தும் நூலுள்ளே சொல்லின் தொகுதி களை விரிப்பின் அது மற்றொன்று விரித்தலா மென வுணராதார்) குன்றக்கூறலா மென்பர் ஆதலால் அது பரிகரித்தற் பொருட்டு இச்சூத்திரத்தாற்புறனடை கூறினார் இப்படிச் சொல்லவே பெயரியலுள் பெயர்த் தொகுதியையும் வினையியலுள் வினைத் தொகுதியையும் இடையியலுள் இடைத்தொகுதியையும் விரிக் காமல் அந்தந்த இலக்கணங்காட்டுதற்கு வேண்டிய மாத்திரமே கூறனதற்கு மிதுவே புறனடையா மென்க, பெயரியல் என்பது பெயரிலக்கணம், பெயர்த்தொகுதியென்பது பெயர்க் கூட்டம் நிகண்டு கூட்டம் இலக்கணங்கூறும் நூலுள்ளே நிகண்டையு யன்றி ஆரிய முதலியவற்றுள்ளுங் காண்க.

இந்த நூலாசிரியர் மற்ற முன்றியலுள்ளும் போதுமான வரையில் விரித்துக்கூறி இந்த இயலுள்ளு முன்னோர் கூறியவாறு போதுமானவரையில் விரித்துக் கூறாமற் சுருக்கிக் கூறினோர் நிகண்டிற்போலக் குணகுணிப் பெயர்களைக் கூறோ மென்றார். அவ்வாறாயின் இடையியலுள்ளுமிப்படியே சில இடைச் சொற் களைக் கூறிப் புறனடைகொடுக்க வேண்டு மங்ஙனங் கொடாது விரித்தவர் இந்த இயலை மாத்திரம் இப்படிச் சுருக்கிப் புறனடைகொடுத்ததும் (செய்யுள்) உற்றறிபு லனொன்றே புன்மரமேலோரறிவிற் சீவன் முற்றும்மீரறிவிற் சீவன் முரணந் தேடாதிநாவாற் றெற்று மூவறிவிற்சீவன் சிதலெறும்பாதி மூக்காற் சொற்றநாலறிவிற் சீவன் றும்பி வண்டாதி கண்ணால் வானவர் மனிதர் கீழ் போய்மாழ்கிய நரகரோடு கானுறுவிலங்கு புள்ளுக் கருது நாலறிவினோடே யூனமில் செவியுமாங் கேயுற வினை யறிவிற் சீவன் மானமர் நோக்கினல்லாய் மனமு மொன்ற திகமாமே" இவை நிகண்டாதலால் நிகண்டுபோலக் கூறோ மென்றவர், மெய்நாமூக்கென்னுஞ் சூத்திர முதற் சில சூத்திரங் களை அதுபோலவே கூறியதும், முன்னோர் நூலொடு முரண் கொளக்கூறலும் மாறு கொளக்கூறலு மன்றோவெனின், அன்றென்க. என்னெனின், முன்னோர் நூலிற் கூறியவாறே கூறுவார் விரிவஞ் சிச் சார்பு நூலாதலாற் சிலவுரிச் சொற்களை யெடுத்துக்கூறிப் பிறவு மென்றாராதலாலும் குணகுணிப்

பெயர்கள் சொல்லாம் பரத்தலினென்றதற்கு நிகண்டிற் போல விரித்துக் கூறக் கடவேமல்ல மென்று வருவித் துரைத்தது உரைகாரர் கருத்தன்றி நூற் கருத்தன் றாதலாலு மென்க, இதனுட் கொளல் என்னும் வியங்கோள் முற்றிற்குப் பயனிலை குறைந்து நின்றது. வருவித்து முடித்துக் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– இன்னது இன்னுழி இன்னணம் இயலும் என்று இசை நூலுள் – பெயர் வினை யிடை யுரிகளில் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கை களிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கண முடையதாய் நடக்கும் என்று சொல்லக் கடவதாகிய இந்நூலுள், **குணகுணிப்பெயர்கள் சொல்லாம் பரத்தலின்** –குணப்பெயர்களையுங் குணிப்பெயர்களையும் வேண்டிய மட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக்கடவமல்லம் விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின், **நல்லோர் பிங்கலம் முதலா உரிச் சொலில் நயந்தனர் கொளல்** – ’ற்றைக் கண்டறிய வேண்டினோர் மற்றைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலந் ஒவாகர முதலிய நூல்களில் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக் கொள்க, எ–று.

எனவே பெயரியலுட் பெயர்ச்சொற் றொகுதியையும், வினை யியலுள் வினைச்சொற் றொகுதியையும், இடையியலுள் இடைச் சொற் றொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையா மென்பதாயிற்று.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– இன்னது இன்னுழி இன்னணம் இயலும் என்று இசை நூலுள் – பெயர்வினை யிடையுரிகளில் இன்னசொல் தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும் இவ்விடத்தே இவ்விலக்கண முடையதாய் நடக்கும் என்று சொல்லக்கடவதாகிய இந்நூலுள், – **குணகுணிப் பெயர்கள் சொல்லாம் பரத்தலின்** – குணப்பெயர்களையுங் குணிப்பெயர் களையும் வேண்டியமட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக் கடவமல்லம் விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின், – **நல்லோர் பிங்கலம் முதலா உரிச்சொலில் நயந்தனர் கொளல்** – அவற்றைக் கண்டறிய வேண்டினோர் மற்றைப் புலவராற் கூறப்பட்ட பிங்கலத்தை திவாகரமுதலிய நூல்களில் உரிச்சொற் றொகுதியுள் விரும்பிக்கொள்க.

கா.நமச்சிவாய முதலியார்

இன்னது – (பெயர் வினை இடை உரிகளில்) இன்ன சொல், **இன்னுழி** – (தன்மை முன்னிலை படர்க்கைகளிலும் வழக்குச் செய்யுள்களிலும்) இவ்விடத்தே.

இன்னணம் – இவ்விலக்கணம் உள்ளதாய், **இயலும் என்று** – நடக்குமென்று, **இசை** – சொல்லக்கடவதாகிய, **நூலுள்** – இந்நூலுள், **குண குணிப்பெயர்கள்** – குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், **சொல்லாம்** – வேண்டிய மட்டுஞ் சொல்வதன்றி விரித்துச் சொல்லக்கடவம் அல்லம், **பரத்தலின்**– விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம் வருமாதலின், **நல்லோர்** – (அவற்றைக் கண்டறிய வேண்டிய) நல்லோர், **பிங்கலம் முதல் ஆ** – பிங்கலந்தை திவாகர முதலிய நூல்களில், **உரிச்சொல்லில்** – உரிச்சொல் தொகுதியுள், **நயந்தனர் கொளல்** – விரும்பிக் கொள்க.

> எனவே பெயரியலுள் பெயர்ச்சொற் றொகுதியையும், வினையியலுள் வினைச்சொற்றொகுதியையும், இடையிலுள் இடைச் சொற்றொகுதியையும், விரிக்காமைக்கும் இதுவே புறனடையாம் என்பதாயிற்று.

மோசகூ பொன்னையா

பெயர், வினை, இடை, உரி என்னப்பட்ட சொற்களில் இன்ன சொல் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும், வழக்கு செய்யுள் ஆகிய ஈரிடங்களிலும் இவ்விவ்விடங்களில் இன்னின்ன இலக்கணத்ததாய் வரும் எனச் சொல்லுமாறு அமைந்த இந்நூலுள், பண்புகளும் பணிபிகளும் சொல்லாமாறு கூறின் வரையறை இன்றி பல்கும் ஆதலின் விரிவுகாண விரும்புவோல் பிங்கலம் முதலிய நிகண்டு நூல்களிற் காண்க எ–று.

> பிங்கலம் முதலா என்றாரேனும், அதைவிடக் காலத்தான் முந்தியது திவாகரம் ஆதலின் அதனையும், ஆசிரியர் காலத் துக்குப் பின்னர் தோன்றிய அதனோடொத்த சூடாமணி முதலியவற்றையும் அடக்கிக் கூறினார் என்க. இவ்வாசிரியர் காலத்தில் நிகண்டு என்னும் பெயர் வழக்கில் இல்லாதிருந்தது எனலாம். உரிச்சொல் என்பதே நிகண்டின் பெயராகக் கொள்ளப்பட்டு இருந்தமைக்கும், உரிச்சொல்லே நிகண்டு வழங்கும் சொல்லாம் உறுப்பு என அக்காலத்தார் கொண்டிருந் தமைக்கும் இந்நூற்பா சான்றாம் என்க.

(19)

460. **சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்தும்**
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவும்
தெற்றென வுணர்த[1]றெள்ளியோர் திறனே.

சொல் தொறும் இற்று இதன் பெற்றி என்று அனைத்தும்
முற்ற மொழி குறின் முடிவு இல ஆதலின்
சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்
தெற்று என உணர்தல் தெள்ளியோர் திறனே.

sol ṭoṟum iṟṟu itaṉ peṟṟi eṉṟu aṉaiṭṭum
muṟṟa moḷi kuṟiṉ mutivila āṭaliṉ
soṟṟavaṟṟu iyalāṉ maṟṟaiya piṟavum
ṭeṟṟaṟu eṉa uṇarṭal ṭeḻḻiyōr ṭiṟaṉē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

An exemption to this chapter

As it is impossible to define the construction of every word every special instance, those who are desirous of having a clear knowledge (of the subject) will naturally infer the particulars; which are omitted from those which are mentioned.

மயிலை நாதர்

எ-ன், இவ்வதிகாரத்துட் சொன்ன பொருட்பகுதிகட் கெல்லாம் ஆவதோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.:- சொற்களை யெல்லாம் தனித்தனியே எடுத்து இஃது இன்ன சொல் இவ்வாறாம். இச்சொல் இப்பொருட்டென்று [2]சொல்லப்புகின் வரம் பின்மையா மாதலின், ஈண்டுச் சொன்ன வற்றுடனே சொல்லாதவற்றையும் ஒப்பித்துக்கொண்டு விளங்க அறிதல் உணர்வுடையோர்க்கு வழக்காவது, எ-று.

இஃது என்சொன்னவா றோவெனின், இவ்வதிகாரத்துட்
சொன்ன ஒருமொழியே தொடர்மொழியே பொதுமொழியே
திணையே பாலே இடனே வழக்கே செய்யுளே வெளிப்படை

பாட வேறுபாடு.:-

1. **றெளிவோர் திறனே**
2. **சொல்லின்**

நிலையே குறிப்புநிலையே பெயரே வேற்றுமையே வினையே தொகைநிலையே பொருண்மயக்கே தொகா நிலையே வழுவே வழுவமைப்பே காலமே வினாவே செப்பே மரபே இயற்கையே செயற்கையே பொருள்கோளே இடைச்சொல்லே உயிர்ப் பொருளே உயிரில்பொருளே அவற்றின் பண்பே உரிச்சொல்லே யென்றிவற்றுட் சொல்லா தொழிந்தன உளவாகிலும் அவற்றிற் கெல்லாம் இதுவே ஒத்தாகக் கொண்டு செலுத்துகவென்று குற்றம் வாராமல் நூலைப் பாதுகாத்தவாறெனக் கொள்க.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், இவ்வதிகாரத்திற்கு ஓர் புறனடை **உணர்—ற்று.**

இ—ள்.:— சொல்தொறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம் என்று முற்ற மொழியப்புகின் வரம்பிலவாம்: ஆதலின், எடுத்துக்கூறிய சொற்களின் இலக்கணங் களைக் கொண்டு சொல்லாதனவற்றின் இலக்கணங்களையும் ஒப்புமைகருதி இதுவும் அது என முற்ற விளங்கவுணர்தல் நூலோதித் தெளிதற்கு உரிய மாணாக்கர் திறனாம், **எ—று.**

இவற்றிற்கு உதாரணம் முன்னரே வந்துழி வந்துழிக் காட்டினாம் ஆங்காங்கு உணர்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், இவ்வதிகாரத்துட் சொன்ன பொருட் பகுதிக்கெல்லாம் ஆவதோர் புறநடை கூறுகின்றது.

இ—ள்.:— **சொற்றொறும்** — சொற்றோறுந் தனித்தனியே, **இற்றிதன் பெற்றியென்று** — இஃது இன்ன சொல் இவ்வாறு சொலினென்று சொல்லப் புகின், **அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்** — எல்லாச் சொற்களையும் நிறைவிலக்கணமாகத் தனித்தனியே சொல்லலுறின் வரம்பின்மை யாகலின், **சொற்றவற் றியலான்** — ஈண்டுச் சொன்னவற்றின் இலக்கணத்தானே மற்றைய பிறவும் சொல்லாதவற்றையும் ஒப்பித்துக்கொண்டு, **தெற்றென வுணர்தல்** — விளங்க அறிதல், **தெள்ளியோர் திறனே** — உணர்வுடையோர்க்கு அழகாவது, **எ—று.**

விசாகப் பெருமாளையர்

இது, இவ்வதிகாரத்திகோர் புறனடை யுணர்த்துகின்றது

இ—ள்.:— **சொற்றொறும்** — சொற்றோறும், **இற்று** — இத் தன்மைத்து, **இதன் பெற்றியென்று** — இதனிலக்கண மென்று, **அனைத்தும்** — முழுதும், **முற்ற** — நிறைவுற, **மொழிகுறின்** —சொல்லப் புகுந்தால், **முடிவில** — முடிவிலவாம், **ஆகலின்** — ஆதலால், **சொற்றவற்று** — எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய, **இயலான்** —இலக்கணங்களைக் கொண்டு, **மற்றைய பிறவும்** — சொல்லப்படாத வற்றினிலக்கணங்களையும், **தெற்றெனவுணர்தல்** — ஒப்புமைகருதி இதுவுமது

வென உணர்தல், **தெள்ளியோர்** – நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது, **திறன்** – கடனாம், எ–று.

இதற்குதாரணமுன் வந்தன காண்க.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இவ்வதிகாரத்திற்குப் புறனடை கூறுஞ் சூத்திரம் யாது?

சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து
முற்ற மொழிகுறின் முடிவில வாதலிற்
சொற்றவற் றியலான் மற்றைய பிறவுந்
தெற்றென வுணர்த றெள்ளியோர் திறனே.

(சொற்றொறும் இற்று இதன் பெற்றி என்று அனைத்தும்
முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின்
சொற்றவற்று இயலான் மற்றைய பிறவும்
தெற்றென உணர்தல் தெள்ளியோர் திறனே.)

இ–ள்.:– சொற்றோறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால் முடிவிலவாம். ஆதலால் எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக்கொண்டு சொல்லப்படாதவற்றி னிலக்கணங் களையும் ஒப்புமை கருதி இதுவுமதுவென உணர்தல் நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனாம். எ–று.

வ–று.:–

யானும் நீயும் அவனுஞ் செல்வேம் என ஏனையிடத்திற்கு உரிய சொற்களுந் தன்மையோடு இயைந்தவழித் தன்மையான் முடிந்தாற்போல அவனும் நீயுஞ் சென்மின் எனவும்,

"ஒண்டுவி நராய்நின் சேவலு நீயுமாய்–வண்டுதும் பூங்கானல் வைகலுஞ் சேறிரால்" எனவும் படர்க்கைச்சொன் முன்னிலை யோடு இயைந்தவழி முன்னிலையான் முடிதலும் இவை போல்வனவுமாம்.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– சொற்றொறும் இற்று இதன் பெற்றி என்று – சொற்றோறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று, **அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின்** – முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால் முடிவில ஆதலால், **சொற்றவற்று இயலான்** –எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங் களைக் கொண்டு, **மற்றைய பிறவும் தெற்றென உணர்தல்** – சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும் ஒப்புமை கருதி இதுவுமது வென வுணர்தல், **தெள்ளியோர் திறன்** – நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனாம், எ–று.

இவற்றிற்குதாரண முன் வந்தன காண்க

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.;— சொற்றொறும் இற்று இதன் பெற்றி என்று – சொற்றோறும் இத்தன்மைத்து இதனிலக்கணமென்று, – **அனைத்தும் முற்ற மொழிகுறின் முடிவு இல ஆதலின்** – முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால் முடிவிலவாம் ஆதலால், – **சொற்றவற்று இயலான்** – எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக் கொண்டு, – **மற்றைய பிறவும் தெற்றென உணர்தல்** – சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும் ஒப்புமை கருதி இதுவுமதுவென உணர்தல், – **தெள்ளியோர் திறன்** – நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனாம். **எ—று.**

இவற்றிற்குதாரண முன்வந்தன காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்

சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— சொல்தொறும் – சொற்கள் தோறும், **இதன் பெற்றி**– இதன் இலக்கணம், **இற்று** – இத்தன்மையது, **என்று** – , **அனைத்தும்** – முழுதும், **முற்ற** – நிறைய, **மொழிகுறின்** – சொல்லப்புகுந்தால், **முடிவு இல** – வரம்பில்லாதனவாம், **ஆதலின்** – ஆதலால், **சொற்றவற்று இயலான்**—எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களினுடைய இலக்கணங்களைக் கொண்டு, **மற்றையபிறவும்** – சொல்லப் படாதவற்றின் இலக்கணங்களையும், **தெற்றென உணர்தல்**—(ஒப்புமைபற்றி இதுவும் அது வென்று) தெளிவாக அறிந்து கொள்ளுதல், **தெள்ளியோர் திறன்**— நுலோதித் தெளிதற்கு உரிய மாணாக்கரது கடமையாம். இதற்கு உதாரணம் முன்வந்தவற்றில் ஆங்காங்குக் கண்டு கொள்க **எ—று.**

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— சொற்றொறும் – சொற்கள்தோறும், **இற்று இதன் பெற்றி என்று** – இத்தன்மைத்து இதனிலக்கணமென்று, **அனைத்தும் முற்ற மொழிகுறின்** – முழுதும் நிறைவுறச் சொல்லப்புகுந்தால், **முடிவு இல ஆதலின்** – முடிவிலவாம் ஆதலால், **சொற்றவற்று இயலான்** – எடுத்துச் சொல்லப்பட்ட சொற்களுடைய இலக்கணங்களைக்கொண்டு, **மற்றைய பிறவும்** – சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும், **தெற்றென உணர்தல்** – (ஒப்புமை கருதி இதுவுமதுவெனத் தெளிவாக) உணர்தல், **தெள்ளியோர் திறன்** – நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடனும். எ—று.

இவற்றிற்கு உதாரணம் முன் வந்தன காண்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ—ள்.;— சொற்றொறும்—சொற்றோறும், **இற்று இதன் பெற்றி என்று**— இத்தன்மைத்து இதன் இலக்கணமென்று, **அனைத்தும்**— முழுவதும், முற்ற **மொழிகுறின்** – நிறைவுறச் சொல்லப் புகுந்தால், **முடிவு இல** – முடிவிலவாம்; **ஆதலின்** – ஆதலால், **சொற்றவற்று இயலான்** – எடுத்துச் சொல்லப்பட்ட

சொற்களுடைய இலக்கணங்களைக்கொண்டு மற்றைய **பிறவும்** - சொல்லப்படாத வற்றின் இலக்கணங்களையும், **தெற்றென உணர்தல்** - (ஒப்புமை கருதி) இதுவும் அதுவென உணர்தல், **தெள்ளியோர் திறன்** - நூலோதித் தெறிதற்குரிய மாணாக்கரது கடனாம். எ-று

பொ-ரை.:- சொற்றொறும் இத்தன்மைத்து இதன் இலக்கணம் என்று முற்ற மொழியப்புகின் வரம்பிலவாம்;

ஆதலின் எடுத்துக் கூறிய சொற்களின் இலக்கணத்தைக் கொண்டு சொல்லாதன வற்றின் இலக்கணங்களையும் ஒப்புமை கருதி இதுவும் அது வென, முற்ற விளங்க உணர்தல் நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது கடன் ஆம்.

இதற்குதாரணம் முன் வந்தன காண்க.

கா.நமச்சிவாய முதலியார்

சொல்தொறும் - சொற்கள்தோறும், **இற்று** - இத்தன்மைத்து, **இதன் பெற்றி என்று** -இதன் இலக்கணமென்று, **அனைத்தும்** - முழுதும், **முற்ற** - நிறைவுற, **மொழிகுறின்** - சொல்லப்புகுந்தால், **முடிவு இல** - முடிவிலவாம், **ஆதலின்**-ஆதலால், **சொற்றவற்று**-எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களின், இயலான் - இலக்கணங்களைக் கொண்டு, **மற்றைய பிறவும்** - சொல்லப் படாதவற்றின் இலக்கணங்களையும், **தெற்றென உணர்தல்** - (ஒப்புமை கருதித்) தெளிவாக உணர்தல், **தெள்ளியோர்** - நூலோதித் தெளிதற்குரிய மாணாக்கரது, **திறன்** - கடனாம்.

இவற்றிற்கும் உதாரணம் முன்வந்தன காண்க.

மோசகு பொன்னையா

சொல் சொல்லாக இதன் தன்மை இது, இதன் இலக்கணம் இது என முற்றக் கூறப்புகின் வரையறையின்றி விரியும் ஆதலின், இலக்கணங் கூறப்பட்ட சொற்களின் தன்மை இலக்கணமாதி கொண்டு, இலக்கணஞ் சொல்லப்படாத சொற்களின் தன்மை இலக்கண மாதிகளை முற்ற விளங்க உணர்தல் கற்போர் கடனே எ-று.

இதற்கு இலக்கியம் ஆராய்ச்சித் தெளிவுரை வழியே முன்னர்க் காண்க.

(20)

461. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே

paḻaiyana kaḻitalum putiyana pukutalum
vaḻu ala kāla vakaiyiṉāṉē.

இலாசரசு (ஆங்கில மொழிபெயர்ப்பு)

An exemption to this work

The rejection of obsolete forms and the introduction of new ones are not erroneous; (such changes) being but the natural effects of time.

மயிலை நாதர்

எ—ன், இந்நூலிற் சொன்ன ஐந்ததிகாரத்திற்கும் சிங்க நோக்காய் நிற்பதொரு புறநடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:– முற்காலத்துள்ளன சில விடுதலும் இக்காலத்துச் சில வருதலும் காலக்கூறுபாட்டினானே குன்றக்கூறல் மிகைபடக் கூறலென்னும் குற்றமாகா, எ—று.

அவை ..... அழன், புழன், "கேட்டையென்றா நின்றையென்றா....... கண்டை யென்றா" (தொல்.எச்ச. 30) என்றற் றொடக்கத்தன அக்காலத்துள; இக்காலத்து வழங்கா. அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் என்புழி ஙவ்வும், சம்பு சளி சரடு சரி சமழ்ப்பு சள்ளை என்புழிச் சகரமும் இக்காலத்து ஈண்டு மொழிக்கு முதலாயின வென்க, பிறவுமன்ன. இவ்வாறே மேல்வரும் அதிகாரங்களிலும் கண்டுகொள்க.

கட்டளைக்கலித்துறை

"இருதிணை மூவிட நான்மொழி யைம்பாலறு தொகையேழ்
அருவழு வெட்டுரு பொன்பான் றொகாநிலை யாய்ந்த
வெச்சம் ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன்று முணரச்சொல் வண்மை வருந்திருவே."

வெண்பா

"பேரறு பத்திரண்டு பின்வினை யெண்ணான்குபொது
ஓரறுபத் [1]தெட்டிடை மூவேழின் – மேலொன் றுரியிருபத்
தொன்றாகச் சொற்சூத் திரத்தின் வரி
[2]யிருநூற் றோரைந்தா வேண்டு"

சொல்லும் பொருளுமெனத் தோன்றித்தோன் றாத்துணையை
அல்லும் பகலும் மடை.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், இந்நூலிற்கு ஓர் புறனடை உணர் –ற்று

இ—ள்.: முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இறத்தலும் முற்காலத்து இல்லன சில பிற்காலத்து இலக்கணமாய் வருதலும் குற்றம் அல்லவாம் காலவேற்றுமை அது ஆகலான், எ—று.

பாட வேறுபாடு:– 1. தெட்டிடையின் 2. யிருநூற்றிரண்டு

இவற்றிற்கும் உதாரணம் முன்னர் வந்துழி வந்துழிக் காட்டினாம் ஆங்காங்கு உணர்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இந்நூலிற் ஐந்ததிகாரத்திற்கும் சிங்க நோக்காய் நிற்பதோர் புறநடை கூறுகின்றது.

இ–ள்.: பழையன கழிதலும் – முற்காலத்திலுள்ள சொற்களை...., **புதியன புகுதலும்** – இக்காலத்திற் சில புதிய சொற்களை வருவித்தலும், **வழுவல கால வகையினானே** – காலக் கூறுபாடு நோக்கக் குன்றக் கூறல் மிகைபடக்கூறல் என்னும் குற்றம் ஆகாது, எ–று.

அவை ஒத்து, பின்றை, எவன், என்றா, நாலுகை, வெட்டினான், ஒலம், போழ், பூழைப்பூ இவை முதலானவை வழங்காதன என்க.

அக்காலத்து இப்பொழுது என்றது இப்போது எனவும் இக் காலத்திற் பிறவும் வந்தன.

விசாகப் பெருமாளையர்

இது, இந்நுலிற்கோர் புறனடை யுணர்த்துகின்றது.

இ–ள்.: பழையனகழிதலும் – முற்காலத்துள் விலக்கணங்களுட் சில பிற்காலத் திறத்தலும், **புதியன புகுதலும்** – முற்காலத்தில்லனசில பிற்காலத் திலக்கணமாதலும், **வழுவல** – குற்மல்லவாம், **காலவகையினான்** – கால வேற்றுமை யதுவாகலால், எ–று.

இவற்றிக்கு முதாரண முன்வந்தன காண்க.இருதிணை மூவிடநான்மொழி யைம்பாலறுதொகையே ழுருவமுவெட்டுரு பொன்பான் றொகாநிலையாய்ந்தவெச்ச மொருபது கோளெட்டு முபபொழுதீரிட மோரியல்பாய் வருமொழிமூன்ற முணரச்சொல் வண்மை வருந்திருவே.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இந்நூற்குப் புறனடைகூறுஞ் சூத்திரம் யாது?

பழையன கழிதலம் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே.

(பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழு அல கால வகையினானே.)

இ–ள்.:– முற்காலத்துள்ள விலக்கணங்களுட் சில பிற்காலத்திறத்தலும் முற்காலத்தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும் குற்றமல்லவாங் கால வேற்றுமை யதுவாகலால். **எ–று.**

உ–ம்.:–

கேட்டையென்றா நின்றையென்றா முதலியன அக்காலத்து வழக்கு; அவை இக்காலத்தருகினமையின் இலக்கணங் கூறா

ராயினர். பழையன கழிதல்.வருகிறான் என்புழிக் கிறு இடைநிலை இக்காலத்து வழக்கு. அது புதியன புகுதல்.

ஆறுமுக நாவலர்

இ-ள்.:- பழையன கழிதலும் - முற்காலத்துள்ள விலக்கணங்களுட் சில பிற்காலத்திறத்தலும், **புதியன புகுதலும்** - முற்காலத் தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும், **வழ வல கால வகையினான்**- குற்றமல்லவாம் காலவேற்றுமை யதுவாகலால், **எ-று.**

இவற்றிற்குமுதாரண முன் வந்தன காண்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ-ள்.:- பழையன கழிதலும் - முற்காலத்துள்ள விலக்கணங்களுட்சில பிற்காலத்திறத்தலும், - **புதியன புகுதலும்** - முற்காலத்தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும், - **வழு அல கால வகையினான்** - குற்றமல்லவாங் காலவேற்றுமை யதுவாகலால். எ- று.

இவற்றிற்கு முதாரண முன்வந்தன காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ-ள்.:- பழையன கழிதலும் - முற்காலத்து உள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து ஒழிதலும், **புதியன புகுதலும்** - முற்காலத்து இல்லாத சில பிற்காலத்து இலக்கணமாக வருதலும், **வழு அல** - குற்றமல்லவாம்; **கால வகையினான்** - காலவேறுபாடு பற்றிய தாதலால்; **எ-று.**

இதற்கும் உதாரணம் முன்வந்தவற்றுள் கண்டு கொள்க.

"இருதிணை மூவிட நான்மொழி மையம்பா லறுதொகை யேழ் அருவழு வெட்டுரு
பொன்பான் தொகாநிலையாய்ந்தவெச்சம் ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமொழி மூன் று முணரச்சொல் வண்மை வருந்திருவே".

பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- பழையன கழிதலும் - முற்காலத்துள்ள விலக்கணங்களுட் சில பிற்காலத்திறத்தலும், **புதியன புகுதலும்** - முற்காலத்தில்லன சில பிற்காலத் திலக்கணமாதலும், **வழு அல**-குற்றமல்லவாம், **கால வகையினான்** - கால வேற்றுமை யதுவாகலால், **எ-று.**

இவற்றிற்கும் உதாரணம் முன் வந்தன காண்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

இ-ள்.:- பழையன கழிதலும் - முதற்காலத்துள்ள இலக்கணங்களுட் சில பிற்காலத்து இறத்தலும், **புதியன புகுதலும்**- முதற்காலத்தில்லன சில பிற்கால இலக்கணமாதலும், **வழுவல**-குற்ற மல்லவாம், **கால வகையினான்**- கால **வேற்றுமை அதுவாகலால். (எ-று)**

(பொ–ரை) முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்திறத்தலும், முற்காலத்தில்லன சில பிற்காலத்திலக்கணமாய் வருதலும் குற்றம் அல்லவாம்; கால வேற்றுமையது ஆகலான்.

இவற்றிற்கும் உதாரணம் முன் வந்தன காண்க.

கா.நமச்சிவாய முதலியார்

பழையன கழிதலும் – முற்காலத்துள்ள இலக்கணங்களுள் சில பிற்காலத்து இறத்தலும், **புதியன புகுதலும்** – முற்காலத்து இல்லன சில பிற்காலத்து இலக்கண மாதலும், **வழுவல** – குற்றமல்லவாம், **காலவகையினான்** – காலவேற்றுமையால்.

இவற்றிற்கும் உதாரணம் முன்வந்தன காண்க.

மோசசு பொன்னையா

பண்டையோர் வகுத்த இலக்கண மரபுகளுட் சில வழக்கிழந்து மறைதலும், அவர் வகுத்தோதாத சில வழக்குண்மையின் இலக்கணமாய் இடம் பெறலும் காலத்தால் ஏற்புடையனவே யன்றிக் குற்றமாகா எ–று.

இலக்கியம் முன்னர்க் காட்டினாம்.

நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை முற்றும்.

சொல்லதிகாரப் பொருளடைவு

இருதிணை மூவிட நான்மொழி யைம்பா லறுதொகையேழ்
அருவழு வெட்டுரு பொன்பான் றொகாநிலை
யாய்ந்தவெச்சம்
ஒருபது கோளெட்டு முப்பொழு தீரிட மோரியல்பாய்
வருமெழு மூன்று முணரச்சொன் வண்மை வருந்திருவே.

எழுத்ததிகார இயல்களின் நூற்பாத் தொகை

எழுபான் இரண்டெழுத்தின் ஏற்றபதத் தைஞ்ஞான்
கொடுமூன் றுயிரீறைம் பான்மூன் றருமெய்யீறு
ஆறு றுருப்பியல்மூ வாறாம் எழுத்துரை நூற்
பாவிருநூற் றோரிரண்டாப் பார்

சொல்லதிகார இயல்களின் நூற்பாத் தொகை

பேரறு பத்திரண்டு பின்வினையெண் ணான்குபொது
ஒரறுபத் தெட்டிடை மூவேழின் மேலொன்று
உரியிருபத் தொன்றாகச் சொற்சூத் திரத்தின்
விரியிருநூற் றோரைந்தா வேண்டு.

நன்னூல் உரைவளம்

உரிச் சொல்லியல் முற்றிற்று

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை-ஒப்பனையியல்	250.00
தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி	225.00
அரங்கேற்றுகாதை ஆராய்ச்சி	140.00
பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள்	45.00
Essays and Tributes on Tirukkural (1886-1986)	100.00
இந்தியச் சூழலில் மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை	60.00
நீறணி பவளக் குன்றம்	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
கலீலியோ முதல் கலாம் வரை	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	30.00
சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை	30.00
சங்கத் தமிழ் பகுதி 1	100.00
சங்கத் தமிழ் பகுதி 2	100.00
சங்கத் தமிழ் பகுதி 3	115.00
சங்கத் தமிழ் பகுதி 4	130.00
சங்கத் தமிழ் பகுதி 5	110.00
ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள்	60.00
தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும்	160.00
இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்)	50.00
திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு	40.00
பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம்	70.00
காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு	40.00
Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study	125.00
இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்	290.00
தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு	310.00
பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும்	170.00
தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள்	185.00
மனிதப் புனிதர் கக்கன்	110.00
மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை	75.00
மூவர்தமிழ் மூன்று பார்வைகள்	50.00
காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள்	100.00
அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	145.00
அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு	160.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	55.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	55.00
சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று	170.00

---

705 நன்னூல் உரைவளம் – 17 (உரிச்சொல்லியல்) 55.00